# பிரம்ம சூத்திரம்

## "திராவிடாசாரியார்" ஸ்ரீ இராமகிருஷ்ணன் சுவாமிஜி

## முதல் அத்தியாயம் - முதல் பாதம்

**அதாதோ பிரம்[1]ம ஜிஞ்ஞாஸா - 1**

**அத :-** விவேகம் முதலிய சாதானாசதுஷ்டயமான தகுதிகளை அடைந்த பின்னர்

**அதோ :-** கர்மபலன் அநித்தியமானது மற்றும் ஞானபலனானது நித்தியமானது என்பதால்

**பிரம்ம ஜிஞ்ஞாஸா :-** முமுக்ஷுவானவர் பிரம்மத்தினை அறிய ஆசைப்படவேண்டும்.

**ஜன்மாத்யஸ்ய யத: - 2**

**ஜன்மாதி :-** உத்பத்தி (தோற்றம்) முதலியவை

**அஸ்ய :-** இந்த உலகத்தினுடையது

**யத: :-** எதிலிருந்து உண்டாகின்றதோ (அதுவே பிரம்மம்)

**ஷாஸ்த்ரநயோனித்வாத் - 3**

**ஷாஸ்த்ர :-** ரிக்வேதம் முதலிய சாஸ்திரத்திற்கு

**யோனித்வாத் :-** காரணம் ஆவதால் பிரம்மம் சர்வஞ்ஞன் ஆகும்.

**அல்லது**

**ஷாஸ்த்ர :-** ரிக்வேதம் முதலிய சாஸ்திரங்கள் மட்டுமே

---
1

**யோனித்வாத் :-** பிரம்மத்தை அறிய பிரமாணம் ஆகும்.

## தத்து ஸமன்வயாத் - 4

**தத் :-** அந்த பிரம்மமானது வேதாந்த வாக்கியங்களால் மட்டுமே அறியப்படுவது இயலும்.

**து :-** மற்ற வழிகளால் அல்ல.

**ஸமன்வயாத் :-** ஏனெனில், வேதாந்த முழுவதும் அதனை நிரூபிக்கும்படியாக இருப்பதால்.

## ஈக்ஷதேர்நாஷப்தம் - 5

**ஈக்ஷத: :-** "ததைக்ஷத" (அது பார்த்தது) ஷ்ருதியானது ஜகத்திற்கு காரணம் ஈக்ஷணம் செய்பவர் (பார்பவர்) என்று கூறப்பட்டதால்.

**அஷப்தம் :-** ஷ்ருதியினால் ஏற்கப்படாத ஜடமான பிரதானம்

**ந :-** காரணமாவது இயலாது.

## கௌனஸ்சேன்நாத்மஷப்தாத் - 6

**கௌன: :-** பிரதானத்தில் கௌனமாக (உபசாரமாக முக்கியமற்றதாக) ஈக்ஷணம் ஏற்கப்பட்டது.

**சேத் :-** என்று கூறினால்.

**ந :-** தவறு

**ஆத்மஷப்தாத் :-** காரணம், "ஏததாத்ம்யம்" (இதன் ஆத்மாவாகவே என்பது முதலான ஷ்ருதிகள் ஜகத்தின் காரணத்தின் கூறுகையில் ஆத்ம என்ற சொல் குறிப்பிடப்பட்டதாலும், சேதனமானதே ஜகத்தின் காரணம் ஆகும்.

## தன்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேஷாத் - 7

**தன்நிஷ்டஸ்ய :-** ஸத் (இருத்தல்) உடையதான பிரம்மத்தில் நிஷ்டையுடைய (நிலைபாடு) சேதனமான புருஷனுக்கே "அத ஸம்பத்ஸ்யே" (இனி அடைகின்றார்) என்று ஷ்ருதியானது.

**மோக்ஷோபதேஷாத் :-** மோக்ஷத்தினை உபதேசிப்பதால்.

**ஹேயத்வாவசனாச்ச - 8**

**ஹேயத்வாவசனாத் :-** ஸ்தூலாருந்ததி (தூலாருந்ததி நியாயம் - நெருங்கியவைகளை (அருந்ததி அல்லாதவைகளை) சுட்டி காட்டி பின்னர் அதற்கருகில் உள்ள அருந்ததியினை காட்டுவது) மூலமாக, பிரதானத்தில் ஒருவர் நிஷ்டையுடையவர் ஆகாமல் இருக்க அதனை நிராகரிக்கும் வாக்கியமும் கூறப்பட்டுள்ளது என்பதால், பிரதானமானது ஸத் என்ற சொல்லினால் குறிக்கப்படுவது அல்ல.

**ச :-** பிரதிஞ்ஞையில் விரோதத்தினை சுட்டிகாட்ட

**ஸ்வாப்யயாத் - 9**

**ஸ்வாப்யயாத் :-** "ஸ்வபிதி" என்ற பெயர் அடைபவராக தூக்கத்தில் அந்த ஸத் என்ற சொல்லின் பொருளை பிரம்மத்திலேயே லயம் அடைகின்றார் என்பதாலும் (சத் என்பதின் மூலம் பிரம்மமே கூறப்படுகின்றது, பிரதானம் அல்ல)

**கதிஸாமான்யாத் - 10**

**கதிஸாமான்யாத் :-** வேதாந்தம் முழுவதும் காரணத்தினை குறிக்கும் இடத்தில் ஒரே நிலையே இருப்பதாலும். (சேதனமான பிரம்மமே காரணம், பிரதானம் அல்ல)

**ஷ்ருதத்வாச்ச - 11**

**ஷ்ருதத்வாச் :-** "ஸ காரணம்" (அது காரணம்) என்பது மூலம் சர்வஞ்ஞமான பிரம்மமே ஜகத்தின் காரணம்

**ச :-** என்று கூறப்பட்டதாலும் (பிரதானம் காரணமல்ல)

**ஆனந்தமயோப்யாஸாத் - 12**

**ஆனந்தமய: :-** "அன்யோந்தர ஆத்மானந்தமய:" (அதற்குள்ளிருக்கும் ஆத்மா ஆனந்தமயம்) என்ற ஷ்ருதியில ஆனந்தமயம் எனப்படுவது பரமாத்மாவே ஜீவன் இல்லை.

**ஆப்யாசாத் :-** ஆனந்தம் என்ற சொல் பிரம்மத்திற்கு அப்யாசம் (பலமுறை கூறுதல்) காணப்படுவதால்.

## விகாரஷப்தான்நேதி சேன்ந ப்ராசுர்யாத் - 13

**விகாரஷப்தாத் :-** "மயட்" என்ற விகுதி விகாரம் (மாற்றம்) என்ற பொருள்படுவது என்பதால்.

**ந :-** ஆனந்தமயம் பிரம்மத்தை குறிப்பது அல்ல

**இதி சேத் :-** என்று கூறினால். **ந :-** தவறு

**ப்ராசுர்யாத் :-** பிரசுரத்தன்மை (அதிகமாக இருப்பது) என்ற நிலையிலும் "மயட்" விகுதி கூறப்பட்டுள்ளதால், ஆனந்தமயம் என்பது பரமாத்மாவே ஆகின்றது.

## தத்தேதுவ்யபதேஷாச்ச - 14

**தத்தேதுவ்யபதேஷாத் :-** "ஏஷ ஹ்யேவானந்தயாதி" (இதுவே ஆனந்தத்தினை அளிக்கின்றது) என்பதில ஜீவனின் ஆனந்தத்திற்கு காரணம் பிரம்மமே.

**ச :-** என்பதாலும், ஆனந்தமயம் பரமாத்மாவே ஆகும்.

## மாந்த்ரவர்ணிகமேவ ச கீயதே - 15

**மாந்த்ரவர்ணிகம் :-** "சத்தியம் ஞானமனந்தம் பிரம்ம" (சத்தியம், ஞானம் மற்றும் அனந்தம் பிரம்மம்) என்கிற மந்திரத்தில்

**ஏவ ச :-** கூறப்பட்ட பிரம்மமே, இங்கும்

**கீயதே :-** "அனயோந்தர ஆத்மானந்தமய" (அதற்குள் இருக்கும் ஆத்மா ஆனந்தமயம்) என்ற வாக்கியத்திலும் கூறப்பட்டுள்ளது, என்பதால் ஆனந்தமயம் பரமாத்மாவே ஆகும்.

## நேதரோனுபபத்தே: - 16

**இதர: :-** மற்ற (ஜீவனானது)

**ந :-** ஆனந்தமயம் அல்ல

**அனுபபத்தே: :-** "ஸோகாமயத்" (அது ஆசைபட்டது) என்று ஷ்ருடிக்கு முன்னர் கூறப்பட்ட ஆசைப்படுதல் முதலியவை அதனில் (ஜீவனில்) இருத்தல் இயலாது. அதனால், ஆனந்தயம் பரமாத்மாவே ஆகும்.

## பேதவ்யபதேஷாச்ச - 17

**பேதவ்யபதேஷாத் :-** "ரஸம் ஹ்யேவாயம்" (ரசத்தினை அடைந்து நிச்சயமாக ஆனந்தத்தினை அடைகின்றனர்) என்ற ஷ்ருதி ஜீவன் மற்றும் ஆன்நதமய பிரம்மத்தினையும் வேறு படுத்தி கூறுகின்றது.

**ச :-** என்பதாலும், ஆனந்தமயம் பரமாத்மாவே ஆகும்.

## காமாச்ச நானுமானாபேக்ஷா - 18

**காமாத் :-** "ஸோகாமயத" (அது ஆசைப்பட்டது) என்று ஆசைப்படுதல் கூறப்பட்டது

**ச :-** என்பதாலும், **ந :-** இல்லை

**அனுமானபபேக்ஷா :-** ஆனுமானத்தினால் அறியப்படும் பிரதானமாவது ஆனந்தமயம் என்பதால் குறிக்கப்படுவது என்பதும்.

## அஸ்மின்ஸ்ய ச தத்யோகம் ஷாஸ்தி - 19

**அஸ்மின் :-** "யதா ஹ்யேனவஷ" (எப்பொழுது இவா (சாதகர்) இந்த பார்க்கப்படமுடியதா) என்பதான ஷ்ருதி இந்த ஆனந்தமய ஆத்மாவில்

**அஸ்ய :-** ஜீவன் நிலைபாடு அடையும்போது (அறியும் நிலையில்)

**தத்யோகம் :-** அதாகவே (அதன்பாவத்தை) அடைவதான முக்தியானது

**ஷாஸ்தி :-** உபதேசம் செய்கின்றதோ

**ச :-** இதனாலும் ஜீவனோ பிரதானமோ ஆனந்தமயம் ஆவது இயலாது, பரமாத்மாவே ஆகும்.

## அந்தஸ்தத்தர்மோபதேஷாத் - 20

**அந்த: :-** "ய ஏஷோந்தராதித்யே" (எவர் இந்த சூரியனுள் இருக்கும்), "ய ஏஷோந்தரக்ஷினி" (எவர் இந்த கண்ணுக்குள் இருக்கும்) என்பதான ஷ்ருதியில் சூரியமண்டலம் முதலியவையினுள் இருக்கும் புருஷன் சம்சாரி ஜீவனில்லை, பரமாத்மவே

**தத்தர்மோபதேஷாத் :-** காரணம், அதன் தர்மங்கள் பாவமற்றது வரையறையற்றது முதலியவை உபதேசிக்கப்பட்டதால்.

## பேதவ்யபதேஷாச்சான்ய: - 21

**பேதவ்யபதேஷாத் :-** "ய ஆதித்யே திஷ்டன்" (எவர் சூரியனுள் இருந்து) என்பதான ஷ்ருதியில் ஜீவன் கட்டுப்படுத்தப்பட்டவன் பரமெஷ்வரர் கட்டுப்படுத்துபவர் என்று இரண்டிற்கும் வேறுபாடு கூறப்பட்டதால்.

**ச :-** என்பதாலும்,

**அன்ய: :-** கண்ணிலும் சூரியனிலும் காணப்படும் புருஷன் சூரியன் முதலிய சரீர அபிமானி ஜீவனிலிருந்து வேறுபட்டவர்.

## ஆகாஷஜ்தல்லிங்காத் - 22

**ஆகாஷ: :-** "ஆகாஷ இதி ஹோவாச" (ஆகாயம் என்று கூறினார்) என்பதில் ஆகாஷம் என்பது பிரம்மமே

**தல்லிங்காத் :-** காரணம், "சர்வாணி ஹ வா" (இவை எல்லாமும்) என்று எல்லாமும் தோன்றியது முதலியவை பரபிரம்மத்தின் லிங்கம் (குறி —— அடையாளம்) ஆகும்.

## அத ஏவ ப்ராண: - 23

**அத ஏவ :-** அதனால் தான், அதாவது முன்பு கூறப்பட்ட தோற்றம் முதலிய லிங்கத்தினால்.

**ப்ராண: :-** "ப்ராண இதி ஹோவாச" (பிராணன் என்று கூறினார்) என்ற ஷ்ருதியில் பிராணன் பரமாத்மாவே ஆகும்.

## ஜ்யோதிஸ்சரனாபிரானாத் - 24

**ஜ்யோதி: :-** "யதத: பரோ திவோ" (இந்த த்யு லோகத்திற்கு மேலே எந்த பரம ஜ்யோதியானது) என்பதான ஷ்ருதியில் ஜ்யோதி என்ற சொல் பரமாத்மாவினையே குறிக்கின்றது.

**சரனாபிதானாத் :-** காரணம்,"பாதோஸ்ய" (இதன் பாதங்கள்) என்று சரணத்தை (பாதத்தினை) குறிப்பிட்டுள்ளதால்.

## ச்சந்தோபிதானான்நேதி சேன்ந ததா சேதோர்பணநிகதாத்ததா ஹி தர்ஷணம்-25

**ச்சாந்தோபிதானாத் :-** "காயத்ரீ வா இதம் சர்வம் பூதம்" (காயத்ரியே, இங்கு காணப்படும் எல்லாமும் இந்த ஜீவராசிகளும்) என்பதான ஷ்ருதியில் காயத்ரி சந்தம் (அணி) குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால் நான்கு பாதங்களுடையது காயத்ரியே

**ந :-** பிரம்மம் அல்ல **இதிசேத் :-** என்று கூறினால்.

**ந :-** அது தவறு

**ததா :-** காரணம், ஷ்ருதியில் காயத்ரி சந்தம் மூலம் அதில் ஊடுருவிப்பதாக இருக்கும் பிரம்மத்தில்

**சேதோர்பணநிகதாத் :-** சித்தத்தினை (மனதினை) ஒரு முகப்படுத்தல் குறிப்பிடப்பட்டதால்

**துதா ஹி :-** மற்ற இடத்தில் "ஏதே ஹ்யேவ" (இதனையே ரிக்வேதி முதலியவர் உக்தமாக உபாசனை செய்கின்றனர்) என்று விகாரம் மூலம் பிரம்மத்தின் உபாசனையானது காணப்படவதால்.

## பூதாதிபாதவ்யபதேஷோபபத்தேஸ்சைவம் - 26

**பூதாதிபாதவ்யபதேஷோபபத்தே: :-** "காயத்ரீ வா இதம ஸர்வம்" (காயத்ரியே இவை எல்லாமும்) என்பதான ஷ்ருதியில் பூதம் (ஜீவன்) முதலிய பாதங்களின் குறித்த உபதேசமானது பிரம்மத்தினை குறிப்பதாக ஏற்பது மட்டுமே சரியாக இருக்கும். அதன் மூலம் பிரம்மம் அறியப்படுவதால்.

**ச :-** அதுமட்டுமல்லாமல்

**ஏவம் :-** "விஷ்டப்யாஹமிதம்" (ஜகத்தினை முழுதும் வியாபித்து நான் உள்ளேன்) என்ற ஸ்மிருதியும் பிரம்மத்தில் சர்வாத்மத்தன்மையினை காண்பிக்கின்றது.

**<u>உபதேஷபேதான்நேதி சேன்நோபயஸ்மின்நப்யவிரோதாத் - 27</u>**

**உபதேஷபேதாத் :-** ''த்ரிபாதஸ்யாம்ருதம்திவி'' (த்யு லோகம் ஆதாரம்) மற்றும் ''யதத: பரேதிவோ ஜ்யோதிர்தீப்யதே'' (அதற்கு பிறகு (அடுத்து) எந்த த்யு லோகமானது பிரகாசிக்கின்றதோ (என்று த்யுலோகம் எல்லையாக) இரண்டு வகையில் உபதேசம் உள்ளதால்.

**ந :-** பிரம்மத்தினை குறிப்பதாக இருத்தல் இயலாது

**இதிசேத் :-** என்று கூறினால். **ந :-** தவறு

**உபயஸ்மின்நபி :-** இரண்டு வாக்கியங்களிலும்

**அவிரோதாத் :-** பிரம்மத்தினை குறிப்பதற்கு

**விரோதமாக :-** (எதிராக) எதுவும் இல்லாததால்.

**<u>ப்ராணஸ்ததானுகமாத் - 28</u>**

**ப்ராண: :-** ''ப்ரணோஸ்மி ப்ரஞாத்மா'' (நான் பிராணன், நான் பிரஞ்ஞாத்மா. அப்படிப்பட்ட என்னை ஆயுள் மற்றும் அமிருதரூபமாக உபாசனை செய்வாயாக) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட பிராணன் பிராண வாயு அல்ல பரமாத்மாவே.

**ததா :-** அவ்வாறே, முன்பின்னுள்ள வாக்கியத்தினை கொண்டு விசாரம் செய்யும் பொழுது

**அனுகமாத் :-** அறியப்படுகின்றது, காரணம் கூறப்பட்ட ஷ்ருதியில் உள்ள ''ஆனந்தோ ஜரோம்ருத:'' (ஆனந்தம், வயோதிகமற்ற மற்றும் மரணமற்றது ஆகும்) என்ற வாக்கியத்துடன் பிரம்மத்தை குறிப்பதாக மட்டுமே ஒருநிலைப்படும்.

**<u>ந வக்துராத்மோபதேஷாதிதி சேத் அத்யாத்மஸம்ப்நதபூமா ஹ்யஸ்மின் - 29</u>**

**நவக்து: :-** இவ்வாறு கூறுதல் தவறு, வக்தாவான (கூறுபவரான) இந்திரன்

**ஆத்மோபதேஷாத் :-** ''மாமேவ விஜானீஹி'' (என்னையே அறிவாயாக) என்பதான ஷ்ருதியில் தன்னை அறியவேஉபதேசம் செய்துள்ளதால், ''பிராணோ அஸ்மி'' (பிராணனாக இருக்கிறேன்) என்பதான ஷ்ருதியில் பிராணன் என்ற சொல் பரமாத்மாவை குறிப்பது அல்ல

**இதி சேத் :-** என்று கூறினால்

**அத்யாத்மசம்பந்தபூமா :-** ''பிராண ஏவ ப்ரஞ்ஞாத்மா'' (பிராணனே பிரஞ்ஞாத்மா) என்பதான ஷ்ருதிகள் பலதும் பிரஞ்ஞாத்மாவினை குறிப்பதாக

**ஹி :-** உள்ளதாகவே

**அஸ்மின் :-** இந்த அத்யாயத்தினில் காணப்படுகிறது என்பதால், பிரம்மத்தின் உபதேசம் தேவதையினை குறிப்பதல்ல.

**ஷாஸ்த்ரத்ருஷ்ட்யா தூபதேஷோ வாமதேவவத் - 30**

**ஷாஸ்த்ரத்ருஷ்ட்யா :-** நான் பரமாத்மா என்ற இந்த நோக்கிலிருந்து

**து :-** மட்டுமே, நிச்சயமாக

**உபதேஷ: :-** உபதேசமானது, "மாமேவ விஜானீஹி" (என்னையே அறிவாயாக) என்ற இந்திரனின் உபதேசமானது சரியானதாகும்.

**வாமதேவவத் :-** வாமதேவரை "அஹம் மனுரபவம் சூர்யஸ்ச" (நான் மனுவானேன், சூரியனாகவும்) என்பது போல, "பிராணோஸ்மி" (நான் பிராணன்) என்பதும் பரமாத்மாவினை குறிப்பதேயாகும்.

**ஜீவமுக்யபிராணலிங்கான்நேதி சேன்நோபாஸாத்ரைவித்யாதாஷ்ரிதத்வாதிஹ தத்யோகாத் - 31**

**ஜீவமுக்யபிராணலிங்காத் :-** "வக்தாரம் வித்யாத்" (வார்தையை பார்க்காதே வக்தாவை (பேசுபவர்) பார்) என்பதான ஷ்ருதி ஜீவனை குறிப்பதாகவும், "இதம் ஷரீரம்" (இந்த உடலை கவர்ந்து கொண்டு செல்கின்றது) என்பதான ஷ்ருதியில் முக்கிய பிராணனை குறிப்பதாகவும் இருப்பதால்.

**ந :-** "பிராணோஸ்மி" என்பது பராமாத்மாவை மட்டும் குறிப்பதாக இருத்தல் இயலாது.

**இதசேத் :-** என்று கூறினால். **ந :-** தவறு

**உபாஸாத்ரைவித்யாத் :-** மூவகையான உபாசனை கூறப்பட்டதாக ஏற்கவேண்டும்.

**ஆஷ்ரிதத்வாத் :-** "பிராண இதி ஹோவாச" (பிராணன் என்று கூறினார்) என்பதான இடத்தில் பிரம்மத்தை குறிப்பதாக இருக்கின்றது.

**இஹ :-** இங்கும், கூறப்பட்ட ஷ்ருதியிலும்

**தத்யோகாத் :-** ஹிததமம் (மிகவும் நன்மை தரக்கூடியது) முதலியது பிரம்மத்தை குறிப்பதாக இருப்பதால், பிராணன் என்பது பிரம்மத்தையே குறிக்கின்றது.

## முதல் அத்யாயம் - இரண்டாம் பாதம்

**ஸர்வத்ர ப்ரஸித்தோபதேஷாத் - 1**

**ஸர்வத்ர :-** வேதாந்தத்தில் எல்லா இடத்திலும்

**ப்ரஸித்தோபதேஷாத் :-** "ஸர்வம் கல்விதம் ப்ரம்ம" (இவை எல்லாம் நிச்சயம் பிரம்மமே) என்பதான வாக்கியத்தில் ஜகத் காரணமாக கூறப்பட்ட பிரம்மமே "மனோமய" என்பது முதலிய தர்மம் உடையதாக உபதேசிக்கப்பட்டுள்ளது. அதனால், மனோமயம் பிரம்மமே ஜீவன் அல்ல.

**விவக்ஷிதகுணோபத்தேஸ்ச - 2**

**விவக்ஷதிதகுணோபபத்தே: :-** உபதேசிக்கப்பட்டதான சத்ய கல்பத்தன்மை முதலிய குணங்கள் உபாசனைக்காக பிரம்மத்தில் கூறப்பட்டதாக ஆவது இயலும்.

**ச :-** என்பதாலும், மனோமயம் பிரம்மமே ஜீவன் அல்ல.

**அனுபபத்தேஸ்து ந ஷாரீர: - 3**

**அனுபபத்தே: :-** உபாசனைக்காக கூறப்பட்ட சத்யசங்கல்பத்தன்மை முதலிய குணங்கள் ஜீவனில் இருத்தல் இயலாது என்பதால்

**து :-** நிச்சயமாக

**நு ஷாரீர: :-** ஜீவன் உபாசனைக்காக கூறப்படவில்லை, பிரம்மமே.

**கர்மகர்த்ருவ்யபதேஷாச்ச - 4**

**கர்மகர்த்ருவ்யபதேஷாத் :-** "ஏதமித: ப்ரேத்யாவி ஸம்பவிதாஸ்மி" (இந்த உடலிலிருந்து விடுபட்டு பரமாத்மாவினை அடைவேன்) என்பதான ஷ்ருதியில் "ஏதம்" என்ற சொல்லால்பிரம்மம் கர்மமாக கூறப்பட்டுள்ளது. "அபிஸம்பவிதாஸ்மி" என்ற சொல் மூலம் ஜீவன் கர்த்தாவாக உபதேசிக்கப்பட்டுள்ளது.

**ச :-** என்பதாலும், மனோமயம் முதலிய குணங்களால் பிரம்மமே உபாஸ்யமாக கூறப்பட்டுள்ளது ஜீவன் இல்லை.

## ஷப்தவிசேஷாத் - 5

**ஷப்தவிசேஷாத் :-** ஷப்தம் அதாவது வேற்றுமை விகுதி வேறுபடுவதாலும் பிரம்மமே உபாஸ்யமாக கூறப்பட்டுள்ளது. ஜீவனல்ல.

## ஸ்ம்ருதேஸ்ச - 6

**ஸ்ம்ருதே: :-** "ஈஷ்வர: ஸர்வபூதானாம் ஹ்ருத்தேஷேர்ஜீன திஷ்டதி" (அர்சுனா, எல்லா ஜீவன்களின் இதயத்தில் இருந்து அவர்களின் கர்மத்திற்கு ஏற்ப மாயையினால் மயக்குகின்றார்) என்பதான ஸ்மிருதியும் ஜீவன் மற்றும் பிரம்மத்தின் வேறுபாடு காட்டப்பட்டுள்ளது

**ச :-** அதனாலும், பிரம்மமே உபாஸ்யம் ஜீவன் இல்லை

## அர்பகௌகஸ்த்வாத்தத்வ்யபதேஷாச்ச நேதிசேன் ந நிசாய்யத்வாதேவம் வ்யோமவச்ச - 7

**அர்பகௌகஸ்த்வாத் :-** "ஏஷ ம ஆத்மாந்தர்ஹ்ருதயே" (இந்த ஆத்மா என்னுடைய இதயத்தினுள் உள்ளது) என்பதான ஷ்ருதியில் அர்பகௌக: அதாவது இதயம் என்ற சிறிய இடம்.

**தத்வ்யபதேஷாத் :-** "அணீயான்" (சிறியது) என்பதான ஷ்ருதி மூலம் மிகவும் சூக்குமமானது என்று உபதேசம் செய்யப்பட்டுள்ளத்

**ச :-** என்பதாலும் **ந :-** பிரம்மம் உபாஸ்யம் அல்ல, ஜீவனே

**இதிசேத் :-** என்று கூறினால், **ந :-** தவறு,

**நிசாய்யத்வாத் :-** அர்பகௌம், அணீயம் முதலிய தர்மம் மூலம் பரமாத்மாவே தியானிக்க யோகியமானது என்பதால்

**ஏவம் :-** அதுபோல

**வ்யோமவத் :-** ஆகாயம் எவ்வாறு ஒரு ஊசி துளையில் வரையறுக்கப்பட்டது போல கூறப்படுகின்றதோ அதேபோல வியாபித்திருக்கும் பிரம்மமும் சூக்குமம் முதலிய குணங்களான வரையறைகளால் பிரம்மமே உபாஸ்யமாக கூறப்பட்டுள்ளது.

**ச :-** அதனாலும், பிம்மமே உபாஸ்யம் ஜீவனல்ல.

## ஸம்போகப்ராப்திரிதிசேன்ந வைசேஷ்யாத் - 8

**ஸம்போகப்ராப்தி: :-** ஆகாயத்தைப்போல வியாபித்து இருப்பதால், பரமாத்மா சைத்தன்யம் என்பதாலும் ஜீவனைப்போல இன்ப ___ துன்பங்கள் அனுபவத்திற்கு வரும்.

**இதிசேத் :-** என்று கூறினால். **ந :-** தவறு

**வைசேஷ்யாத் :-** ஜீவன் அனுபவிப்பது, பரமாத்மா அனுபவிப்பது இல்லை முதலான வேறுபாடுகள் இருப்பதால் ஜீவனும், பரமாத்மாவும் வெவ்வேறு என்பதாலும் மனோமயம் முதலிய குணங்களுடைய பரமாத்மாவே உபாஸ்யமாகும்.

## அத்தா சராசரகிரகணாத் - 9

**அத்தா :-** "யஸ்ய ப்ரம்ம ச க்ஷத்ரம் ச" (எவருக்கு பிராம்மணரும், க்ஷத்திரியரும் உணவாகவும் மரணம் தொட்டுக்கொள்ளும் பதார்தமாகவும் ஆகுமோ) என்பதான ஷ்ருதியில் உண்பவர் சேதனமான பரமாத்மாவே, அக்னி, ஜீவன் முதலியவர் அல்ல

**சராசரகிரகணாத் :-** தாவர ஜங்கமங்கள் ஆகியதான ஜகத் உணவாக கூறப்பட்டுள்ளது என்பதால்.

## ப்ரகரணாச்ச - 10

**ப்ரகரணாத் :-** "ந ஜாயதே" (பிறப்பதில்லை) என்பதான பிரகரணத்தினாலும், "க இத்தா வேத யத்ர ஸ" (எவரறிவதியலும் அது எங்குள்ளது) என்று அந்த பரமாத்மா அறிவதற்கறியது.

**ச :-** என்பதாலும், உண்பவர் பரமாத்மாவே.

## குஹாம் ப்ரவிஷ்டாவாத்மானௌ ஹி தத்தர்ஷனாத் - 11

**குஹாம் ப்ரவிஷ்டாவாத்மானௌ :-** "ரிதம் பிபந்தௌ சுக்ருதஸ்ய லோகே" (தன்னுடைய கர்மபலனை அனுபவிப்பதற்காக உடல் என்ற குகையில் பிரவேசித்து வெயில் - நிழல் சமமான இரண்டு வேறுபட்ட தத்துவம் என்று பிரம்மத்தினை அறிந்தவரும், நசிகேத்த அக்னியினை மூன்று முறை உபாசனை செய்தவரும், பஞ்சாக்னியினை உபாசனை செய்தவரும் அறிவர்) என்பதான ஷ்ருதியில்ஜீவனும்

பரமாத்மாவுமே குகையில் பிரவேசம் செய்தது என்று கூறப்பட்டுள்ளது, புத்தியும் ஜீவனும் அல்ல.

**ஹி** :- நிச்சயமாக, அப்படியாகவே

**துத்தர்ஷணாத்** :- அது இங்கு காணப்படுவதால்.

## விசேஷணாச்ச - 12

**விசேஷணாத்** :- "ஆத்மானம் ரதினம் வித்தி" (ஆத்மாவினை சாரதியாகவும் உடலை ரதமாகவும் அறிவாயாக) என்றும் ஜீவனை செல்பவராகவும் (அடைபவராகவும்), "ஸோத்வன: பாரமாப்னோதி" (அவர் சம்சாரத்திலிருந்து கடந்து அந்த வியாபித்திருக்கும் பரமாத்மாவின் பரம பதத்தினை அடைகிறார்) என்று பரமாத்மா அடையப்படவேண்டியதாகவும் வேறுபடுத்துகிறது.

**ச** :- என்பதாலும், இதயகுகையில் (அல்லது உடல் என்னும் குகையில்) இருப்பது ஜீவனும் பரமாத்மாவுமே ஆகும்.

## அந்தர உபபத்தே: - 13

**அந்தர:** :- "ய ஏஷோக்ஷிணி புருஷோ த்ருஷ்யதே" (எவர் இந்த கண்ணில் காணப்படும் புருஷனோ) என்பதான ஷ்ருதியில் நிரூபிக்கப்படும் புருஷன். சாயாத்மாவோ (பிரதிபிம்பம்), ஜீவனோ, தேவதையோ அல்ல அது பரமாத்மாவே

**உபபத்தே:** :- "ஏனென்றால், அந்த புருஷனிற்கு கூறப்பட்ட ஆத்மத்தன்மை மரணமற்றதன்மை முதலியவை அவரிலேயே (பரமாத்மா) இருப்பது இயலும்.

## ஸ்தானாதிவ்யபதேதஷாச்ச - 14

**ஸ்தானாதிவ்யபதேஷாத்** :- "யச்சக்ஷுஷு தஷ்டன்" (எவர் கண்ணில் நின்று (நிலைபட்டு)) என்பதான ஷ்ருதியினில் கூறப்பட்ட கண்கள் முதலிய இடங்களும் ரூபங்களும் நிர்குணமான பரமாத்மாவை அடையும் இடமாக (தியானத்திற்கு) வியாபித்திருக்கும் பிரம்மத்தில் இயலும்

**ச** :- என்பதாலும், கண்களில் காணப்படும் புருஷன் பரமாத்மாவேயாகும்.

## சுகவிஷிஷ்டாபிதானாதேவ ச - 15

**சுகவிஷிஷ்டாபிதானாத் :-** "ப்ரணோ ப்ரம்ம கம் பிரம்ம கம் பிரம்ம" (பிராணன் பிரம்மம் கம் (சுகம்) பிரம்மம், கம் (ஆகாயம்) பிரம்மம்) என்பதான ஷ்ருதியில் இன்பம் கூடியதான (உடையதான) பிரம்மம் கூறப்பட்டுள்ளதால்

**ஏவச :-** நிச்சயமாக, கண்களில் காணப்படும் புருஷன் பரமாத்மாவே ஆகும்.

## ஷ்ருதோபநிஷத்ககத்யபிதானாச்ச - 16

**ஷ்ருதோபநிஷத்ககத்யபிதானாத் :-** "அதோத்தரேண" உடல் விழுந்த பின் (இறந்தபின்) தபஸ், பிரம்மசரியம், சிரத்தை மற்றும் வித்யையினால் ஆத்மாவினை தியானித்து உத்தரமார்கம் வழியாக சூரியன் (ஆதித்யன்) முதலிய லோகத்தை அடைவார்) என்ற ஷ்ருதியும், "அக்னிர்ஜோதி" (அக்னி, சுக்லபக்ஷம்.....கீதை-8/24) என்பதான ஸ்மிருதியும் சகுண பிரம்மத்தை உபாசிப்பவருக்கு உண்டாகும் நல்லகதி (நல்ல நிலை ___நல்வழி) கூறப்பட்டதால்

**ச :-** அதேபோல கண்களில் காணப்படும் புருஷனை அறிபவருக்கும் இருப்பதால் அந்த புருஷன் பரமாத்மாவே.

## ஆனவஸ்திதேரஸம்பவாச்ச நேதர: - 17

**ஆநவஸ்திதே: :-** நிலைபாடு இல்லாததாலும்,

**அசம்பவாத் :-** மரணமற்ற குணம் முதலியவை (மற்றவை) அதில் இருத்தல் இயலாததாலும்

**ச :-** பரமாத்மாவே கண்களில் காணப்படும் புருஷன்

**ந இதர: :-** சாயத்மாவோ,ஜீவாத்மாவோ அல்லது தேவதையோ அல்ல.

## அந்தர்யாம்யதிதைவாதிஷு தத்தர்மவ்யபதேஷாத் - 18

**அந்தர்யாமி :-** "ய பிருத்வ்யாம் திஷ்டன்" (எவர் பூமியில் இருந்துகொண்டு) "ய சக்ஷுஷு திஷ்டன்" (எவர் கண்களில் இருந்துகொண்டு) என்பதான ஷ்ருதியில் அவைகளில் (கண் முதலியவையில்) ஊடுருவி இருப்பவர்

அதிதைவாதிஷு - அதிதைவத்திலும், நிலம், லோகம் முதலியவையிலும் இருப்பவர் பரமாத்மாவே தேவதையோ, யோகியோ அல்லது பிரதானம் முதலிய வேறொன்றோ அல்ல.

**தத்தர்மவ்யதேஷாத் :-** ஏனென்றால், மரணமற்றதன்மை முதலிய, அதன் குணங்கள் கூறப்பட்டுள்ளதால்.

**<u>ந ச ஸ்மார்தமதத்தர்மாபிலாபாத் - 19</u>**

**ந ச :-** மற்றவையும் அந்தர்யாமி (ஊடுருவியிருப்பவர்) ஆவதியலாது

**ஸ்மார்தம் :-** சாங்கியர் முதலியோர் கற்பனை செய்யும் பிரதானம், பரமாணு முதலியவையும்

**அதத்தர்மாபிலாபாத் :-** ஏனென்றால்,அதற்கு (பிரதானம் முதலியவற்றிக்கு) விரோதமான, சைத்தன்யத்தில் மட்டுமேஇருப்பதான பார்ப்பான், கேட்பான்முதலிய தர்மங்கள் கூறப்பட்டதால்.

**<u>ஷாரீரஸ்சோபயேபி ஹி பேதேனைனமதீயதே - 20</u>**

**ஷாரீர: :-** ஜீவனும்

**ச :-** அந்தர்யாமியாவது இயலாது

**உபயே அபி :-** இருண்டிலும் கூட, காண்வ மற்றும் மாத்யந்தின ஷாகையில் (கிளை) ஜீவன் அந்தர்யாமியால் கட்டுப்படுத்தப்படுபவர் என்று

**<u>ஹி</u> :-** நிச்சயமாக

**பேதேன :-** அந்தர்யாமியிலிருந்து வேறுபட்டவராக

**ஏனம் :-** ஜீவனை

**அதீயதே :-** படிக்கின்றனர், என்பதாலும் அந்தர்யாமி பரமாத்மாவே ஆகும்.

**<u>அதிருஷ்யத்வாதிகுணகோ தர்மோக்தே: - 21</u>**

**அதிருஷ்யத்வாதிகுணக: :-** "யத் தத் அத்ரேஷயம்" (எது அந்த பார்க்கப்பட இயலாது, கிரகிக்கப்பட இயலாத) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட அதிருஷ்யம் (காணப்பட இயலாத) முதலிய குணங்கள் கூறப்பட்டதோ அந்த பூதயோனி (பூதங்களுக்கு காரணம்) பரமாத்மாவே ஆகும். பிரானம் அல்லது ஜீவனே அல்ல.

**தர்மோர்தே: :-** "ய: சர்வஞ்ஞ சர்வவித்" (எவர் சர்வஞ்ஞரோ (எல்லாவற்றையும் சாதாரண நிலையில் அறிபவரோ) சர்வவித் (எல்லாவற்றையும் விசேஷமான

நிலையில் அறிபவரோ) என்பதான ஷ்ருதியில் அவரின் (பரமாத்மாவின்) தர்மங்களே கூறப்பட்டதால்.

## விசேஷணபேதவ்யபதேஷாப்யாம் ச நேதரௌ - 22

**விசேஷணபேதவ்யபதேஷாப்யாம் :-** விசேஷணமும் (சிறப்பும்) பேதமும் (வேற்றுமையும்) கூறப்பட்டுள்ளதாலும்

**ச :-** பூதயோனி பரமாத்மாவே

**ந இதரௌ :-** ஜீவனோ பிரதானமோ அல்ல.

## ரூபோபன்யாஸாச்ச - 23

**ரூபோபன்யாசாத் :-** "அக்னிர்மூர்தா" (அக்னி ___ தியு லோகம் தலை) என்பதான ஷ்ருதியில் எல்லாவற்றிக்கும் ஆத்மாவககூறப்பட்டதாலும்

**ச :-** பூதயோனி பரமாத்மவே ஆகும்.

## வைஷ்வாநர: ஸாதாரணஷப்தவிசேஷாத் - 24

**வைஷ்வாநர: :-** "யஸ்த்வேதமேவம்" (எவரொருவர் "இதுவே நான்" என்கிற அபிமானத்திற்கு விஷயமாகும் ப்ராதேஷ அளவிலான (ஒரு சாண் அளவு) வைஷ்வாநர ஆத்மாவினை உபாசனை செய்கின்றாரோ) என்பதான ஷ்ருதியில் காணப்படும் வைஷ்வாநரன் பரமாத்மாவே

**ஸாதாரணஷப்தவிசேஷாத் :-** சாதரணமாக வைஷ்வாநரன் என்ற சொல்லானது ஜடராக்னி (உதரத்தில் உள்ள நெருப்பு) பூதாக்னி (வெளியில் காணப்படும் நெருப்பு) மற்றும் தேவதை (அக்னிதேவதை) இவையில் பிரசித்தமானாலும்,, ஆத்மா என்ற சொல்லும் ஜீவ மற்றும் பரமாத்மாவினை குறிப்பதாக இருந்தாலும். இங்கு, "மூர்தைவ சுதேஜா" (தலையே த்யுலோகம்) என்பதான ஷ்ருதியானது பரமாத்மாவை குறிப்பதாக மட்டுமே இருத்தல் இயலும்.

## ஸ்மர்யமாணமனுமானம் ஸ்யாதிதி - 25

**ஸ்மர்யமாணம் :-** "யஸ்யாக்னிர் ஆஸ்யம்" (எவருக்கு நெருப்பானது வாயோ,த்யுலோகம் தலையோ) என்பதான ஷ்ருதியினால் நினைவு கூறப்படுவதான (ஸ்மரணம்) மூவுலகத்தன்மையான ஷ்ருதியினை

**அனுமானம் :-** அனுமானம் செய்வதாக, நமக்கு நினைவு படுத்துவதாக

**ஸ்யாத் :-** இருக்கிறது.

**இதி :-** என்பதால்,வைஷ்வாநரன் பரமாத்மாவே ஆகும்.

**ஷப்தாதிப்யோ அந்த: ப்ரதிஷ்டானாச்ச நேதிசேன் ந தாத்ருஷ்டயுபதேஷாத் ஸம்பவாத்புருஷமபி சைனமதீயதே - 26**

**ஷப்தாதிப்ய: :-** "ஸ ஏஷோ அக்னிர்வைவ்வாநர:" (அந்த இப்படிப்பட்ட நெருப்பு வைஷ்வாநரன்), "ஹ்ருதயம் கார்ஹபத்யம்"(இதயம் கார்ஹபத்யாக்னி) என்பதான ஷ்ருதியில் ஜடராக்னி, பூதாக்னி மற்றும் தேவதையினை குறிப்பதாக உள்ளது அது பிராண ஆஹுதியின் ஆதாரம் என்றும் கூறப்பட்டது.

**அந்தப்பிரதிஷ்டானாத் :-** "புருஷே அந்த: ப்ரதிஷ்டிதம் வேத" (உடலிற்கு உள்ளே நிலைபட்டதாக அறியவும்) என்பதான ஷ்ருதியும் வைஷ்வாநரனை உள்ளே நிலைபட்டதாக கூறியிருக்கின்றது.

**ச :-** என்பதாலும், **ந :-** வைஷ்வாநரன் பரமாத்மா அல்ல

**இதிசேத் :-** என்று கூறினால். **ந :-** தவறு

**ததா :-** அப்படிப்பட்டதாக

**த்ருஷ்டயுபதேஷாத் :-** ஜடராகினியில் பிரம்ம திருஷ்டி (பிரம்மம் என்ற நோக்கு) உபதேசிக்கப்பட்டடதாலும்

**அசம்பவாத் :-** அதனில் "த்யுலோகம் தலை" முதலியதான கற்பனை இயலாது என்பதாலும்

**புருஷம் :-** புருஷ ரூபமாகவும்,

**அபி ச :-** கூடவும் **ஏனம் :-** இந்த வைஷ்வாநரனை

**அதீயதே :-** வாஜசளேய சாகையில் கூறப்பட்டதாலும் வைஷ்வாநரன் பரமாத்மாவே ஆகும்.

**அத ஏவ ந தேவதா பூதம் ச - 27**

**அத ஏவ :-** அதனால் தான், "த்யுலோகம் தலை" என்பதான கற்பனை இயலாது என்பதால்

**ந :-** இயலாது, வைஷ்வாநரனானது

**தேவதா பூதம் ச :-** தேவதையாகவும், பூதாக்னியாகவும் இருத்தல்

## ஸாசஷாதப்யவிரோதம் ஜைமினி: - 28

**ஸாசஷாத் :-** ஜடராக்னி முதலிய உபாதிகளற்று நேரடியாகவும்

**அபி :-** கூட

**அவிரோதம் :-** வைஷ்வாநரனை ஏற்பதில் விரோதமில்லை (பரமாத்மாவினை குறிப்பதாக ஏற்பதில்)

**ஜைமினி: :-** என்கிறார் மகரிஷி ஜைமினியும்.

## அபிவ்யக்தேரித்யாஷ்மரத்ய - 29

**அபிவ்யக்தே: :-** அபிவியக்திக்காக அதாவது தோற்றம் அடைவதற்காக

**இதி :-** என்று, பிராதேச அளவில் மட்டும் இருப்பதாக குறிக்கும் ஷ்ருதியினை

**ஆஷ்மரத்ய: :-** ஆசாரியர் ஆஷ்மரத்யர் ஏற்கின்றார்.

## அனுஸ்ம்ருதேர்பாதரி: - 30

**அனுஸ்ம்ருதே: :-** பிராதேஷ அளவினை குறிக்கும் ஷ்ருதியானது, இதயத்தில் இருத்தி பரமாத்மாவை தியானம் செய்ய கூறப்பட்டது.

**பாதரி: :-** என்கிறார் ஆசாரியர் பாதரி அவர்கள்.

## ஸம்பத்தேரிதி ஜைமினிஸ்ததா ஹி தர்ஷயதி - 31

**ஸம்பத்தே: :-** பிராதேச அளவினனாக பரமாத்மாவினை உபாசனை செய்ய கூறப்பட்டது

**இதி :-** என்று **ஜைமினி :-** மகரிஷி ஜைமினி கூறுகிறார்.

**ததா ஹி :-** அப்படிப்பட்டதாகவே நிச்சயம்

**தர்ஷயதி :-** வாஜசனேயி பிராம்மணமும் காண்பிக்கின்றது.

**ஆமனந்தி சைனமஸ்மின் - 32**

**ஆமனந்தி :-** ஜாபால ஷ்ருதியும் இவ்வாறே கூறுகின்றது.

**ச ஏனம் :-** பரமாத்மாவினை குறிக்கும் உபாசனையாகவே

**அஸ்மின் :-** பிராதேச அளவினதான வைஷ்வாநரனை குறிக்கும் இடத்தில்

## முதல் அத்யாயம் - மூன்றாம் பாதம்

**த்யுப்வாத்யாயதனம் ஸ்வஷப்தாத் - 1**

**த்யுப்வாத்யாயதனம் :-** "யஸ்மின் த்யௌ: பிருத்வீ சாந்தரிக்ஷமோதம்" (எதனில் த்யு லோகம், பிருத்வி மற்றும் அந்தரிக்ஷம் பின்னிப்பினைந்தது) என்பதான ஷ்ருதியில் தியுலோகம், பிருத்வீ முதலியவை எதனை சார்ந்துள்ளதோ (ஆதாரமோ) அது வேறு ஏதாவது அல்லது பரமாத்மாவே ஏனென்றால் (வாயு, பிரதானம் அல்லது ஜீவன் அல்ல)

**ஸ்வஷப்தாத் :-** ஆத்மா என்ற சொல்லினால் பரமாத்மாவை குறிப்பிட்டுள்ளதால்.

**முக்தோபஸ்ருப்யவ்யபதேஷாத் - 2**

**முக்தோபஸ்ருப்ய :-** "வித்வான் நாமரூபாத்விமுக்த" (ஞானமடைந்தவர் பெயர், உருவத்திலிருந்து விடுபட்டு) என்பதான ஷ்ருதியில் முக்தர் பிரம்மத்தை அடைகிறார் என்று

**வ்யபதேஷாத் :-** உபதேசமானது செய்யப்பட்டுள்ளது, "தமைவேகம் ஜானத" (அந்த ஒன்றினை மட்டுமே அறிவாயாக) என்றும் கூறப்பட்டுள்ளதால் த்யுலோகம் முதலியவற்றிற்கு ஆதாரம் பரமாத்மாவே.

**நானுமானமதச்ஷப்தாத் - 3**

**ந :-** இல்லை, ஏற்கமுடியாது

**அனுமானம் :-** ஆனுமாத்தினால் அடையப்பட்ட, சாங்கிய சாஸ்திரத்தில் ஏற்கப்படும் பிரதானம் த்யுலோகம் முதலியவற்றிற்கு ஆதாரம் ஆவது என்பது,

**அதச்ஷப்தாத் :-** அதனை நிரூபிப்பதாக எந்த ஷ்ருதியும் இல்லாததால்.

## ப்ராணப்ருச்ச - 4

**ப்ராணப்ருத் :-** ஜீவனானதும் த்யுலோகம் முதலியவற்றிற்கு ஆதாரம் ஆவதியாலது.

**ச :-** அதனை நிரூபிப்பதாக எந்த ஷ்ருதியும் இல்லாததால்

## பேதவ்யபதேஷாத் - 5

**பேதவ்யபதேஷாத் :-** "தமைவேகம் ஜானத" (அந்த ஒன்றினை மட்டுமே அறிவாயாக) என்று அறிபவரையும், அறியப்படுவதினையும், ஜீவன் மற்றும் பரமாத்மாவை, வேறுபடுத்தி கூறியிருப்பதாலும், த்யுலோகம் முதலியவற்றிற்கு ஜீவன் ஆதாரமாக இருத்தல் இயலாது.

## ப்ரகரணாத் - 6

**ப்ரகரணாத் :-** "கஸ்மின்னு பகவோ விஞ்ஞாதே" (பகவாளே, எது ஒன்றை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகுமோ) என்று பரமாத்மாவினை குறித்த பிரகரணம் (பகுதி) என்பதாலும் த்யுலோகம் முதலியவற்றிற்கு பரமாத்மாவே ஆதாரம்.

## ஸ்தித்யதனாப்யாம் ச - 7

**ஸ்தித்யதானப்யாம் :-** "த்வா சுபர்ணா ஸயுஜாஸகாயா" (இரண்டு ஒரே வகைப்பறவைகள் ஒரு மரத்தில் வசித்தன) என்பதான ஷ்ருதியில், உதாசீனனாக (பற்றற்றவராக) பரமாத்மா இருத்தலும், அங்குள்ள பழங்களை (கர்மபலன்களை) அனுபவிப்பதாக ஜீவன் புசிப்பதினையும் கூறியிருப்பதால், ஸ்திதி - இருத்தல், அதனம் - புசித்தல்.

**ச :-** த்யுலோகம் முதலியவற்றிற்கு ஜீவன் ஆதாரம் அல்ல,பரமாத்மாவே ஆதாரம்.

## பூமா ஸம்ப்ரஸாதாதத்யுபதேஷாத் - 8

**பூமா :-** "பூமா த்வேவ விஜிஞாஸிதவ்ய:" (பூமாவினையே அறிய ஆசைப்படவேண்டும்) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட பூமா, பிராணனல்ல பரமாத்மாவே.

**ஸம்பிரசாதாத் :-** ஸம்பிரசாதம் எனப்படும் பிராணனை உபதேசித்து

**அதி :-** அதற்கு பிறகு, அதனை கடந்ததாக

**உபதேஷாத் :-** உபதேசிக்கப்பட்டதால்.

## தர்மோபபத்தேஸ் ச - 9

**தர்மோபபத்தே: :-** "யத்ர நான்யத்பஷ்யதி" (எங்கு வேறெதனையும் காண்பதில்லையோ) என்பதான ஷ்ருதியில் காண்பது முதலான வியவகார இன்மையானது பூமாவில் உபதேசிக்கப்பட்டதால், அவை பரமாத்மாவிலேயே இருத்தல் இயலும் என்பதால்.

**ச :-** பூமா பிராணனல்ல, பரமாத்மாவே ஆகும்.

## அக்ஷரமம்பாரந்தத்ருதே: - 10

**அக்ஷரம் :-** "ஏதத்வை அக்ஷரம் கார்கி பிராம்மணா அபிவிதந்தி" (இதுவே அந்த அக்ஷரம், கார்கியே. இதனையே பிரம்மத்தை உணர்ந்தவர்கள் கூறுவர்) என்பதா ஷ்ருதியில் கூறப்பட்ட அக்ஷரம் பிரணவமான (ஓம்காரம்) எழுத்து அல்ல, பரமாத்மாவே ஆகும்

**அம்பராந்தத்ருதே: :-** ஆகாயம் முதலிய ஜகத்தினை அதுவே தாங்குகின்றது என்பதால்

## ஸா ச ப்ரஷாஸனாத் - 11

**ஸா :-** அந்த ஆகாயம் முதலிய ஜகத்தினை தாங்குவது என்பது

**ச :-** பரமாத்மாவின் செயலே

**ப்ரஷாஸனாத் :-** "ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ராஷஸனே" (இந்த அக்ஷரத்தின் கட்டுப்பாட்டினாலேயே. நியமனத்தாலேயே சூரியன் - சந்திரன் நன்றாக தாங்கப்பட்டதாக உள்ளது) என்பதா ஷ்ருதியில் பிரஷாசனம் (நியமனம்) கூறப்பட்டதால்

**<u>அன்யபாவவ்யாவ்ருத்தேஸ் ச - 12</u>**

**அன்யபாவவ்யாவ்ருத்தே: :-** பிரதானம் முதலியவையின் பிரம்மத்திற்கு வேறுபட்டதானதில், அக்ஷரத்தின் தர்மங்களான அசேதனம் முதலியவை நிராகரிக்கப்பட்டதாலும்.

**ச :-** பிரதானம் முதலியவை அக்ஷரம் அல்ல, அக்ஷரம் பரமாத்மாவே ஆகும்.

**<u>ஈக்ஷதிகர்மவ்யபதேஷாத்ஸ: - 13</u>**

**ஈக்ஷதிகர்மவ்யபதேஷாத் :-** "பராத்பரம் புரிஷயம் புருஷமீக்ஷதே" (ஓம்காரத்தினை உபாசனை செய்பவர் இந்த ஜீவகணமான - ஹிரண்ய கர்பத்தினை காட்டிலும் மேலான புருஷனை (பரமாத்மாவை) அறிகிறார்) என்பதான ஷ்ருதியில் தியானத்தின் விஷயமானது (தியேயம்)பார்க்கப்படுவது என்று கூறப்பட்டதால் (சிந்திக்கப்படுவது என்றல்ல, மித்யையான சிந்தனை இருத்தல் இயலும், பார்த்தல் அல்ல)

**ஸ :-** "ய: புனரேதம் த்ரிமாத்ரேண" (எவர் மீண்டும், இந்த மூன்று மாத்திரைகளையுடைய ஓம்காரத்தை பரமாத்மாவாக தியானிக்கின்றாரோ) என்பதான ஷ்ருதியில் தியானத்தின் விஷயமாக பரமாத்மாவே கூறப்பட்டது

**<u>தஹர உத்தரேப்ய - 14</u>**

**<u>தஹர</u> :-** "அத யதிதமஸ்மின்" (இனிஎது இந்த உடலிலுள்ள இதயத்தாமரையிலுள்ள ஆகாயத்தில் காணப்படுகிறதோ அதனையே விசாரம் செய்யவேண்டும், அதனையே அறிய ஆசைப்படவேண்டும்) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட தஹராகாஷம் (சிறிய ஆகாயம்) மகாகாயமல்ல,ஜீவனல்ல பரமாத்மாவே

**உத்தரேப்ய :-** "யாவான்வா அயமாகாஷஜ்தாவானேஷோந்தஹ்ருத ஆகாஷ:" (இந்த மகாகாயமானது எத்தனை வியாபித்ததோ அத்துனை வியாபித்தது இந்த இதய ஆகாயமும்) என்பதான ஷ்ருதியில் மகா ஆகாயம் உதாரணமாக தரப்பட்டுள்ளது (உதாரணம் - உதாரிக்கப்பட்டது வெவ்வேறாக இருத்தல் அவசியம்)

**<u>கதிஷப்தாப்யாம் ததாஹி த்ருஷ்டம் லிங்கம் ச -15</u>**

**கதிஷப்தாப்யாம் :-** "இமா: ஸர்வா: ப்ரஜா அஹரஹர் கச்சந்தய" (இந்த ஜீவனெல்லாம் தினம்தினம் தூக்கத்தில் அந்த தஹரகாசமான பிரம்மலோகத்தை அடைந்தாலும், அஞ்ஞானத்தால் அறிவதில்லை) என்பதான ஷ்ருதியில் கதி — செல்லுதல் மற்றும் ஷப்தம் - பிரம்மலோகம் என்பது குறிப்பிடப்பட்டுள்ளதால்

**ததா ஹி :-** அவ்வாறாகவே, "ஸதா ஸோம்ய ததா ஸம்பன்னோ பவதி" (சத்தினை மென்மையானவனே, தூக்கத்தில் அடைந்ததாக ஆகிறார்) என்பதான வேறு ஷ்ருதியும் அவ்வாறு ஜீவனால் அடையப்படுவதாக பிரம்மம் நிரூபணமாவதாக

**த்ருஷடம் :-** காணப்படுகின்றது

**லிங்கம் :-** "பிரம்மண: லோக (பிரம்மத்தின் லோகம்) என்று ஏற்றால் ஜீவன் ஒவ்வொருநாளும் அதனை அடைவது இயலாது என்பதால் "பிரம்மைவ லோக:" (பிரம்மமே லோகம்) என்ற சமானநிலையினை குறிக்கும் பொருளில் ஏற்பதால், அது செல்லுதலினை குறிப்பதாக இருக்கிறது.

**ச :-** என்பதாலும், ஜீவன் தஹராகாஷம்அல்ல, ஆனால் பரமாத்மாவே ஆகும்.

**<u>த்ருதேஸ்ச மஹிம்னோஸ்யஸ்மின்னுபலப்தே: - 16</u>**

**த்ருதே: :-** "அத ய ஆத்மா ஸ ஸேதுர்வித்ருதி:" (எந்த ஆத்மாவே அது பாலம், இந்த உலகத்தின் நியதி கலப்படமாகமல் காத்து தாங்குவது) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட தாங்குதல் என்பதும்

**ச :-** அதோடு, "ஏஷ ஸர்வேஷ்வர: ஏஷ பூதாதிபதி" (இவரே சர்வேஸ்வரன், இவரே பூதங்களின், ஜீவன்களின் தலைவர் (சுவாமி)) என்பதான ஷ்ருதியும்

**மஹிம்ன: :-** லோகங்களை தாங்கும் மகிமை

**அஸ்ய :-** இதனுடையது என்று

**அஸ்மின் :-** பரமாத்மாவில்

**உபலப்தே: :-** அடையப்படுவதாக உள்ளதாலும், தஹராகாஷம் பரமாத்மாவே ஆகும்.

**<u>ப்ரஸித்தேஸ் ச - 17</u>**

**ப்ரஸித்தே: :-** "ஆகாஷோ வை நாம" (ஆகாஷம் என்பது இதன் பெயர்), "ஸர்வாணி ஹ வா இமானி பூதானி ஆகாஷாதேவ ஸமுத்பத்யந்தே" (இந்த எல்லா ஜீவன்களும் நிச்சயமாக ஆகாயத்திலிருந்தே தோற்றமடைகின்றது) என்பதான ஷ்ருதியில் ஆகாயம் என்பது பரமாத்மாவினை குறிப்பதாக இருப்பதால் (பிரசித்தமானதால்)

**ச :-** தஹரகாசம் என்பது பரமாத்மாவே ஆகும்.

## <u>இதரபராமர்ஷாத்ஸ இதி சேன்நாஸம்பவாத் - 18</u>

**இதரபராமர்ஷாத் :-** "ஏஷ ஸம்ப்ரஸாத அஸ்மாத் ஷரீராத் ஸமுத்தாய" (இந்த தூக்கநிலை ஜீவன் (சம்பிரசாதம்) உடல் முதலியவற்றில் ஆத்மா என்ற அறிவை நீக்கி பரமான ஜோதியான பரமாத்மாவைஅடைகிறது, தன்னுடைய சுவரூபமாக தோன்றுகிறது) என்பதான ஷ்ருதியில் இதர (மற்ற) ஜீவனானது கூறப்பட்டதால்

**ஸ :-** தஹராகாசம் ஜீவனே

**இதி சேத் :-** என்ற கூறினால், ந :- தவறு

**அஸம்பவாத் :-** ஆகாயமானது உதாரணமாவதும், பாவமற்ற நிலை முதலியதும் ஜீவனில் இருப்பது இயலாது என்பதால், தஹராகாசம் பரமாத்மாவே ஆகும்.

## <u>உத்தராச்சேதாவிர்பூதஸ்வரூபஸ்து - 19</u>

**உத்தராத் :-** "ய ஏஷோ அக்ஷினி" (இந்த கண்ணில் காணப்படும் புருஷன் எவரோ) என்பதான ஷ்ருதியில் விழிப்பு நிலை முதலியவற்றையுடைய ஜீவனிற்கு பாலமற்ற நிலை முதலியவை கூறப்பட்டுள்ளது

**சேத் :-** என்று கூறினால்

**ஆவிர்பூதஸ்வரூப: :-** பரமார்த்த (மெய்ப்பொருள்) நிலையில் (ரூபத்தில்) ஜீவனானது கூறப்பட்டது ஜீவன் என்ற நிலையில் அல்ல

**து :-** என்பதால், நிச்சயம் ஜீவன் தஹராகாசம் அல்ல, அது பரமாத்மாவே ஆகும்.

## <u>அன்யார்த்தஸ் ச பராமர்ஷ: - 20</u>

**அன்யார்த்த: :-** வேறு பொருளில் அதாவது பரமாத்மாவினை நிரூபிக்கவே (ஜீவனையல்ல)

**ச :-** இங்கும் (என்பதாலும்)

**பராமர்ஷ: :-** "ய ஏஷ ஸம்பிரசாத" (இந்த ஸம்பிரசாத (ஜீவனானது) என்பதான ஷ்ருதியில் ஸம்பரசாதம் என்று ஜீவன் குறிப்பிடப்பட்டது.

## <u>அல்பஷ்ருதேரிதி சேத்ததுக்தம் - 21</u>

**அல்பஷ்ருதே: :-** "தஹரரோஸ்மின்னந்தரகாஷ:" (சிறியது இதனுள் ஆகாயமானது) என்பதான ஷ்ருதியில் தஹரம் - சிறியது என்று கூறப்பட்டதால் அது ஜீவனே பரமாத்மாவல்ல

**இதிசேத் :-** என்று கூறினால்

**ததுக்தம் :-** இது முன்பே கூறப்பட்டுவிட்டது. "அர்பகௌகஸ்த்வாத்" (1/2/7) என்ற சூத்திரத்தில் என்பதால், தஹராகாசம் பரமாத்மாவே ஆகும்.

## அனுக்ருதே: தஸ்ய ச - 22

**அனுக்ருதே: :-** "ந தத்ர சூர்யோ பாதி" (அங்கு சூரியன் பிரகாசிப்பதில்லை, நிலவோ, நட்சத்திரங்களோ,, மின்னலோஅல்ல எனும்போது இந்த சிறிய நெருப்பு எவ்வாறு பிரகாசிப்பது இயலும், அதன் பிரகாசத்தால் அதனை தொடர்ந்து மற்றவை பிரகாசிக்கின்றது, அதனின் பிரகாசத்தினாலேயே) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட தேஜஸ், வேறொதோவாக இருத்தரல் இயலாது அது பரமாத்மாவே அதன் பிரகாசத்தினாலேயே மற்றவை பிரகாசிப்பதால்.

**தஸ்ச :-** அதன் பிரகாசத்தினாலேயே ஜகத் பிரகாசிக்கின்றது

**ச :-** என்று கூறப்பட்டதாலும், தேஜஸ் - பரமாத்மாவேஆகும்

## அபி ச ஸ்மர்யதே -23

**அபி ச :-** அதுமட்டுமல்லாமல் இந்த பரமாத்மாவையே பிரகாசமயமானதாக

**ஸ்மர்யதே :-** "ந தத்பாஸயதே சூர்ய:"(அதனை சூரியன் பிரகாசிப்பதில்லை சந்திரனோ நெருப்போ கூட இல்லை எதனை அடைந்தபின் மீண்டும் வருவதில்லையோ அதுவே என்னுடைய பரமமான நிலை) என்றும் "யதாதித்யகதம் தேஜ:" (எது சூரியனில் உள்ள தேஜஸோ, இந்த உலகத்தினை பிரகாசிப்பதானதோ) என்பதான ஸ்மிருதியும் கூறுகின்றது.

## ஷப்தாதேவ ப்ரமித: - 24

**ஷப்தாதேவ :-** "அங்குஷ்டமாத்ர புருஷ:" (கட்டை விரல்அளவிலான புருஷன் புகையற்ற நெருப்பினை போன்று பிரகாசமானவன்) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட அங்குஷ்டமாத்ர புருஷன் "ஈஷானோ பூதபவ்யஸ்ய" (ஈஷ்வரன் கடந்த மற்றும் எதிர்காலத்திற்கு) என்று பின்னார் கூறப்பட்ட ஈஷ்வரன் என்ற சொல்லால்

**ப்ரமித: :-** இங்கு அங்குஷ்ட புருஷன் விஞ்ஞானத்மாவான ஜீவனல்ல, பரமாத்மாவே என்றாகின்றது.

**ஹ்ருத்யபேக்ஷயா து மனுஷ்யாதிகாரத்வாத் - 25**

**ஹ்ருத்யபேக்ஷயா :-** இதயத்தினை சார்ந்து (சம்பந்தப்படுத்தி) பார்க்குங்கால் பரமாத்மா அங்குஷ்டமாத்ர புருஷனாக கூறப்படுகிறார்.

**து :-** இதனில் எந்த சந்தேகமும் இல்லை.

**மனுஷ்யாதிகாரத்வாத் :-** சாஸ்திரமானது மனிதருக்காக கூறப்பட்டதால் அவருக்கு விஷயமாகின்றதால், மனிதரின் இதயமும் தன் அங்குஷ்ட அளவினதாக இருப்பதால்.

**ததுபர்யபிபாதராயண: ஸம்பவாத் - 26**

**ததுபரி :-** மனிதர்களைக்காட்டிலும் மேன்மையானவர்களான தேவதைகளிடம்

**அபி :-** கூடவும்

**பாதராயண: :-** பாதராயண ஆசாரியர் கருதுகிறார் (ஏற்கிறார்)

**ஸம்பவாத :-** தகுதிகளான அர்தித்வம் (பொருள்) மற்றும்சாமர்தியம் முதலியவையானது இருத்தல் இயலும் என்பதால், அவர்களும் பிரம்மவித்தைக்கு தகுதியானவர்கள் என்று.

**விரோத: கர்மனீதிசேன் நானேகப்ரதிபத்தேர் தர்ஷனாத் - 27**

**விரோத: :-** தேவதைகளுக்கு உடலினை ஏற்றால் விரோதம் உண்டாகும்

**கர்மணீ :-** அவர்களும் கர்மத்தில் அங்கமாக அங்கே இருத்தல் அவிசயம் என்பதால்

**இதிசேத் :-** என்று கூறினால்

**ந :-** தவறு, அனேக :- பல

**ப்ரதிபத்தே: :-** உடலை ஒரே நேரத்தில் அடைவது இயலும், ஏனென்றால்,

**தர்ஷனாத் :-** "ஸ ஏகதா பவதி" (அவர் ஒன்றாக இருக்கிறார், மூன்று வகையாக இருக்கின்றார்) என்பதான ஷ்ருதியில்

**அல்லது**

**அனேக :-** பல கர்மங்களில் ஒருவர் மட்டுமே

**பரதிபத்தே: :-** அங்கமாவது இருத்தல் இயலும்

**தர்ஷனாத் :-** அவ்வாறு காணப்படுவதால். என்பதால் இங்கு, பல இடங்களில் (கர்மங்களில்) இந்திரன் முதலான தேவதைகள் ஹவிர் ஏற்பது இயலும்.

**ஷப்த இதி சேன்நாத: ப்ரபவாத்ப்ரத்யக்ஷானுமானாப்பயாம் -28**

**ஷப்தே :-** வேத வாக்கியமானது விரோதமாகும்

**இதிசேத் :-** என்று கூறினால் **ந :-** தவறு

**அத: :-** வைதிகமான வார்த்தைகளிலிருந்து

**ப்ரபவாத் :-** தேவதை முதலான ஜகத்தின் தோற்றம் கூறப்பட்டுள்ளதால்

**ப்ரத்யக்ஷானுமானாப்யாம் :-** பிரத்யக்ஷமான ஷ்ருதியும் அனுமானமான ஸ்மிருதியும் அவ்வாறு கூறுவதாக இருப்பதால்.

**அத ஏவ ச நித்யத்வம் - 29**

**அத ஏவ :-** வேதத்திலிருந்தே தேவதை முதலிய ஜகத்தானது தோன்றியது என்பதாலேயே

**ச :-** கூட

**நித்யத்வம் :-** வேதத்தில் நித்தியத்தன்மையானது நிரூபணமாகின்றது.

**ஸமானாநாமரூபத்வாச்சாவ்ருத்தாவப்யவிரோதோ தர்ஷனாத் ஸ்மருதேஸ் ச - 30**

**ஸமானநாமரூபத்வாத் :-** கடந்த சிருஷ்டியினைபோன்றே பெயர் மற்றும் உருவம் உடையதாக இருப்பது

**ச :-** என்பதாலும்

**ஆப்ருத்தௌ அபி :-** சிருஷ்டி (தோற்றம்) மற்றும் பிரளயத்தின் (மறைவின்) ஆவிருத்தி உண்டானபோதிலும், மீண்டும் மீண்டும் நடந்த போதிலும்

**அவிரோத: :-** வேத சொல் மற்றும் அதன் பொருளில் எந்த வகையான விரோதமும் இல்லை.

**தர்ஷனாத் :-** "தாதா யதாபூர்வம் அகல்பயத்" (பரமாத்மா (ஹிரண்யகருப்பர்) முன்னர் இருந்த சிருஷ்டியினை போன்றே படைத்தார்) என்பதான ஷ்ருதியும், "யதார்துலிங்கானி நானாரூபானி பர்யயே" (எவ்வாறு ரிது (காலம்) மாற்றமடைந்தாலும் மீண்டும் அதன் சமயம் வரும்போது அந்த காலத்திற்கு ஏற்றார்போல எல்லாம் உண்டாகின்றதோ) என்பதான ஸ்மிருதியும்

**ச :-** என்பதாலும், தேவதை முதலியவை அநித்தியமானாலும் வேதம் நித்தியம் என்று நிரூபணமாகின்றது.

## மத்வாதிஷ்வஸம்பவாதனதிகாரம் ஜைமினி: - 31

**மத்வாதிஷு :-** "அஸௌ வா ஆதித்யோ தேவமது" (இந்த ஆதித்தியனே தேவர்களினல் மது ஆகின்றார்) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட மது வித்யையில் மனிதர்களே தேவதைகளை உபாசனை செய்வது இயலும், தேவர்களுக்கு

**அஸம்பவாத் :-** தங்களையே உபாசிக்கும் நிலை இருப்பதால் இந்த வித்யைகளில் அதிகாரம் இருப்பது இயலாததால்

**அனதிகாரம் :-** பிரம்ம வித்யையிலும் அவர்களுக்கு அதிகாரம் இருப்பது இயலாது.

**ஜைமினி: :-** என்று ஜைமினி ஆசாரியாரின் கருத்து.

## ஜ்யோதிஷி பாவாச்ச - 32

**ஜ்யோதிஷி :-** காணப்படுவதான சூரியமண்பலத்தில்

**பாவாத் :-** சூரியன் (ஆதித்யன்) என்ற பெயரும் அதன் அறிவும் உண்டாகின்றது, ஆனால் அந்த மண்டலம் ஜடம்.

**ச :-** அந்த மண்டலத்திலிருந்து வேறுபட்ட சைத்தன்யமான சரீரம் முதலியவை உடையதான தேவதை பிரத்யக்ஷம் முதலிய பிரமாணங்களால் அறியப்படாததாலும், உடலற்ற தேவதைகள் பிரம்ம வித்யையில் தகுதியற்றவை ஆகின்றது.

**பாவம் து பாரதராயணோஸ்தி ஹி - 33**

**பாவம் :-** இருத்தல், உடல் முதலியவை தேவதைகளுக்கு இருப்பது என்ற காரணத்தால்

**து :-** நீங்கள் கூறிய அதிகாரமற்ற நிலை இங்கு இல்லை என்று

**பாதராயண: :-** ஆசாரியர் பாதராயணர் ஏற்பது என்ற காரணத்தாலும்

**ஆஸ்தி ஹி :-** நிச்சயமாக அதனால் அவர்களில் அர்திித்தன்மை சாமார்தியத்தன்மை முதலிய அதிகாரங்களானது (தகுதிகளானது) உள்ளது என்பதால் தேவதைகள் அதகாரிகள் ஆவர்.

**ஷுகஸ்ய ததனாதரஷ்ரவணாத்ததாத்ரவணாத்ஸீச்யதே ஹி - 34**

**ஷீக் :-** துன்பம் கூடியவனான

**அஸ்ய :-** ஜானஷ்ருதிக்கு

**ததனாதர ஷ்ரவணாத் :-** இதன்மூலம் தன்னுடைய தீனமான நிலை (ஆதரவற்ற நிலை) கூறப்பட்டுள்ளது காணப்படுவதால்

**ததாத்ரவணாத் :-** அதனால், அவன் துன்பம் கூடியவனாக ரைக்வர் என்கிற குருவினை அடைதலும்.

**ஸீச்யதே ஹி :-** இந்த துன்பம் கூடிய நிலையே சூத்தின் என்று கூறப்பட்டது, என்பதால் பிரம்ம வித்யையில் சூத்திரருக்கு தகுதியில்லை (இங்கு ஷுத்ரன ___ (சூத்திரன்) என்பது ஷுசா (துன்பத்தினால்) அபிதுத்ராவ (குருவான ரைக்வரை ஓடி அடைந்தான்) என்று பொருள்).

**க்ஷத்ரியத்வகதேஸ் சோத்தரத்ர சைத்ரரதேன லிங்காத் - 35**

**க்ஷத்ரியத்வகதே: :-** க்ஷத்ரியர் (சத்திரியன்) என்று ஜானஷ்ருதியினை குறித்து கூறப்பட்டுள்ளதாலும்,

**ச :-** என்பதாலும், அவன் சூத்திரன் ஆவது இயலாது

**உத்தரத்ர :-** இந்த சம்வர்க வித்யையின் முடிவில்

**சைத்ரரதேன :-** சைத்ரரதன் அபிப்ராதரனுடன் நெருங்கிய சம்பந்த முடையவன் (பரம்பரையில் உள்ளவன்) என்று

**லிங்காத் :-** அங்கு குறிப்பிடப்பட்ட குறியினை கொண்டு க்ஷத்திரியன் என்று அறியப்படுவதால், பிரம்ம வித்யையில் சூத்திரருக்கு தகுதியில்லை.

## ஸம்ஸ்காரபராமர்ஷாத்ததபாவாபிலாபாச்ச - 36

**ஸம்ஸ்காரபராமர்ஷாத் :-** பிரம்மவித்யையில் உபநயனம் (பூணல் கல்யாணம்) முதலிய சம்ஸ்காரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாலும்

**ததபாவாபிலாபாத் :-** சூத்திரருக்கு அந்த கர்மங்களின் இன்மை கூறப்பட்டதாலும் ”சூத்ரோ சதுர்தோ வர்ண ஏகஜாதி:'' (சூத்திரர்நான்கவது வர்ணத்தினர் ஒரு பிறப்பாலரே) என்பதாக

**ச :-** அதனாலும், பிரம்ம வித்யையில் சூத்திரருக்கு அதகாரம் (தகுதி) இல்லை.

## ததபாவநிர்தாரனே ச ப்ரவ்ருத்தே: - 37

**ததபாவநிர்தாரனே :-** உண்மையினை கூறுவதால் சூத்திரத்தன்மை இல்லாதவன் என்று ஜாபாலனான சத்தியகாமனை குறித்து தீர்மாணம் செய்த பின்னர்

**ச :-** அவனுக்கு அதிகாரம் இருத்தல் நிச்சயம் ஆனபின்னர்

**ப்ரவிருத்தே: :-** குருவான கௌதமர் அவனுக்கு உபதேசம் செய்ய துவங்கினார். ''நைதத் அபிபிராம்மணோ விவக்துமர்ஹதி ஸமிதம் ஸோம்யாஹரோப த்வா நேஷ்ய ந ஸத்யாதகா:'' (ஹே சௌம்யனே, பிரம்மணனல்லாதவர் இவ்வாறு கூறுதல் இயலாது, நீ போய் சமித்துகளை கொண்டுவா, நான் உனக்கு உபநயனம் செய்விக்கிறேன், நீ உண்மையினை கைவிடவில்லை என்பதால்) என்பதான ஷ்ருதியில், சூத்திரருக்கு தகுதியின்மையினை குறிக்கின்றது.

## ஷ்ரவணாத்யயனார்தப்ரதிஷேதாத் ஸ்மருதேஷ்ச - 38

**ஷ்ரவணாத்யயனார்தப்ரதிஷேதாத் :-** சிரவணம் (வேதம் கேட்டல்), அத்யயனம் (வேதம் படித்தல்), அதன் பொருளை அறிதல், அதன் அனுஷ்டானங்களை செய்தல் முதலியவை சூத்திரருக்கு நிராகரணம் செய்யப்பட்டதால்.

**ஸ்ம்ருதே: :-** ''அத அஸ்ய வேதமுபஷ்ருண்வத'' (வேதத்தினை கேட்பவனுக்கு (சூத்திரன்) காதுகளில் ஈயத்தினை காய்ச்சி ஊத்தவும்), ''பத்யு ஹ வா ஏதச்ஷ்மஸானம்'' (இவன் நடக்கும் இடுகாடு என்பதால் இவன் அருகில் வேதம்

ஓதுதல் கூடாது) என்றும், "ந ஷூத்ராய மதிம் தத்யாத்" (சூத்திரனுக்கு வேதப்பொருளை கூறுதல் கூடாது) என்றும், "த்விஜாதீனாம் அத்யயனமிஜ்வா தானம் ச" (இருபிறப்பாலருக்கு பிராம்மணர், க்ஷத்திரியர் மற்றும் வைஷ்யருக்கே அத்யயனம், யாகம்மற்றும் தானம்) என்றும் கூறப்பட்டதாலும்

**ச** :- சூத்திரருக்கு வேத மூலமாக வித்யையினை ஏற்க தகுதி இல்லை என்றாகிறது.

## கம்பனாத் - 39

**கம்பனாத்** :- "யததம் கிஞ்ச" (இந்த ஜகத் முழுவதும் பிராணத்திலிருந்து தோன்றி செயல்படுகிறது) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட பிராணன் வஜ்ரமல்ல, பரமாத்மாவே ஆகும்.

## ஜ்யோதிர்தர்ஷனாத் - 40

**ஜ்யோதி:** :- "ஏஷ ஸம்பரஸாத:" (இந்த சம்பிரசாத ஜீவன் அவித்தை நிலையில் உண்டாகும் உடல் அபிமானத்தை ஆசாரியர் உபதேசம் மூலம் விடுத்து பரமமான ஜோதியினை தன்னுடைய சுவரூபமாக அடைகிறான்) என்பதான ஷ்ருதியில் "ஜோதி" என்பது பரமாத்மாவே

**தர்ஷனாத்** :- "ய ஆத்மா" (இந்த ஆத்மா பாவமற்றது) முதலியதான முன்னுரை வாக்கியத்தை வைத்து சிந்திக்கும்போது பரமாத்மாவே கூறப்பட்டதாக காணப்படுகின்றது.

## ஆகாஷோர்தாந்தரத்வாதிவ்யபதேஷாத் - 41

**ஆகாஷ:** :- "ஆகாஷோ வை நாம நாமரூபயோர் நிர்வஹிதா" (ஆகாயம் என்பதேஅதன் பெயர், பெயர் மற்றும் உருவங்களை நிர்வாகம் செய்வது) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட ஆகாஷம் என்பது பரமாத்மாவே

**அர்தாந்தரத்வாதி** :- "தே யதந்தரா" (அது எதன் உள்ளில் இருக்கின்றதோ அது பிரம்மம்) என்று ஆகாயத்தை பெயர் மற்றும் உருவத்திலிருந்து வேறு பொருள் குறிப்பதானதாக

**வ்யபதேவாத்** :- "தத் பிரம்ம ததம்ருதம் ஸ ஆத்மா" (அது பிரம்மம் அது அமிருதம் (மரணமற்றது) அது ஆத்மா) என்று அதனுடைய பரமாத்மத்தன்மை கூறப்பட்டிருப்பதாலும் (உபதேசம் உள்ளதால்)

**சுஷுப்த்யுத்க்ராந்த்யோர்பேதேன - 42**

**சுஷுப்த்யுத்க்ராந்த்யோ:** :- "யோ அயம் விஞ்ஞானமய:" என்பதான ஷ்ருதியில் விஞ்ஞானமயம் என்று கூறப்பட்ட புருஷன் ஜீவனல்ல பரமாத்மாவே, "ப்ராஞ்ஞேன ஆத்மா" (பிராஞ்ஞாத்மாவுடன் நிலைபட்டு இது மேலெழும்புகிறது) என்று தூக்கம் மற்றும் மரணகாலத்தில்

**பேதேன** :- ஜீவனிலிருந்து வேறுபட்டதான பிராஞ்ஞன் என்ற சொல்லால் பரமாத்மா குறிப்பிடப்பட்டதால்.

**பத்யாதிஷப்தேப்ய: - 43**

**பத்யாதி** :- "ஸர்வஸ்ய வஷீ ஸர்வஸ்ய ஈஷான:" (எல்லாவற்றையும் தன் வசத்தில் வைத்திருப்பது, எல்லாவற்றிர்கும் ஈஷ்வரன், அதிபதி) என்பதான ஷ்ருதியில் பதி (தலைவர்) என்பது முதலான

**ஷப்தேப்ய:** :- சொற்களால் சம்சாரியாக அல்லாத பரமாத்மாவே நிரூபிக்கப்படுகிறது என்பது காணப்படுகின்றது.

## முதல் அத்யாயம் நான்காம் பாதம்

**ஆனுமானிகமப்யேகேஷாமிதி சேன்ந ஷரீரரூபகவின்யஸ்தக்ருஹீதேர்தர்ஷயதி - 1**

**ஆனுமானிகம்** :- அனுமானத்தினால் அடையப்படும் பிரதானமே அவ்யக்தம் என்பதாக குறிப்பிடப்ட்டுள்ளது

**அபி** :- என்றும் கூட

**ஏகேஷாம்** :- சிலர், சில ஷாகைகளில் (வேத கிளையில்) "மஹத: பரமவ்யக்தம்" (மஹத்தினை காட்டிலும் மேன்மையானது அவியக்தம், அவியக்தத்தினை காட்டிலும் புருஷன் மேன்மையானவர்) என்பது முதலியதில் ஏற்கின்றனர்

**இதி சேத்** :- என்று கூறினால், **ந** :- அது தவறு

**ஷரீரரூபகவினயஸ்தக்ருஹீதே:** :- "சரீரம் ரதமேவ" ( உடலே ரதம்) என்பதான இதற்கு முன்னருமுள்ள ஷ்ருதி வாக்கியத்தில் ரதம் முதலிய கற்பனையில் சரீரமே ஏற்கப்பட்டதானதால்

**தர்ஷயதி :-** முன் - பின்னுள்ள வாக்கியத்தை கெண்டு விசாரம் செய்து அதுவே குறிக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டதாலும்

**ச :-** இங்கு அவியக்தம் என்பது உடலே பிரதானம் அல்ல.

## <u>சூக்ஷ்மம் து ததர்ஹத்வாத் - 2</u>

**சூக்ஷ்மம் :-** சூக்கும உடலே (சரீரமே) இங்கு அவியக்தம் என்பது மூலம் குறிப்பிடப்பட்டது

**து :-** நிச்சயம் பிரதானம் அல்ல, தூல உடல் காணப்படுவதால் என்ற சந்தேகத்திற்கும் இடமில்லை.

**ததர்ஹத்வாத் :-** அதுவே இங்கு அவியக்தம் (தோற்றமடையதாது) என்ற சொல்லினால் குறிக்கப்படும் தகுதியுடையது.

## <u>தததீனத்வாதர்தவத் - 3</u>

**தததீனத்வாத் :-** அவியக்தம் பரமெஸ்வரனுக்கு அதீனமாக (கட்டுப்பட்டதாக) இருப்பதால்.

**அர்தவத் :-** ஜகத்தின் தோற்றம் முதலியதற்கு ஈஷ்வரனுக்கு உதவியாக இருப்பதாலும் அர்தவத், பிரயோஜனமானது ஆகின்றது.

## <u>ஞேயத்வாவசனாச்ச - 4</u>

**ஞேயத்வ :-** இங்கு கூறப்பட்ட பிரகரணத்தில் சாங்கியர்களின் அவியத்தமானது ஞேயமாக (அறிபடு விஷயமாக)

**அவசனாத் :-** ஷ்ருதியில் கூறப்படவில்லை

**ச :-** என்பதாலும், அவியக்தம் என்ற சொல் பிரதானத்தை குறிப்பதில்லை

## <u>வததீதி சேன்ந ப்ராஞ்ஞோ ஹி ப்ரகரணாத் - 5</u>

**வததி :-** ஆனால், "மஹத: பரம் த்ருவம் நிசாய்ய" (மஹத்திற்கும் மேன்மையான நிரந்தரமான அதனை தெறிந்துகொண்டு) என்று இந்த பிரகரணத்தில் பின்னால் பிரதானம் அறியபடு விஷயமாக கூறப்பட்டுள்ளது

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** தவறு

**ப்ராஞ்ஞ: :-** ஏனென்றால், "புருஷன் ந பரம்" (புருஷனை (ஆத்மாவை) காட்டிலும் மேன்மையானது எதுவுமில்லை) என்று இந்த பிரகரணத்தில் கூறியுள்ளதால்.

## த்ரயாணாமேவ சைவமுபன்யாஸ: ப்ரஷ்னஸ்ச - 6

**த்ரயாணாம் :-** நெருப்பு, ஜீவன் மற்றும் பரமாத்மாவாகிய மூன்று

**ஏவ :-** மட்டுமே **ச :-** இங்கும் கூட

**ஏவம் :-** முன் - பின்னுள்ள வாக்கியத்தினை நோக்கம்போது இவ்வாறே

**ஊபன்யாசாத் :-** நிரூபித்து கூறியுள்ளதால்

**ப்ரஷ்ண: :-** கேள்வியும் அதனை குறித்து இருப்பதாலும்

**ச :-** கூட, இங்கு அவியக்தம் என்ற சொல் பிரதானத்தை குறிப்பதல்ல.

## மஹத்வச்ச - 7

**மஹத்வத் :-** "புத்தேராத்மா மஹான் பர:" (புத்தியை காட்டிலும் மஹான் ஆத்மா மேன்மையானது) என்பதான ஷ்ருதியில் மஹத் என்ற சொல் சாங்கியர்களன் மஹத்தை குறிப்பதாக இல்லாதது போல

**ச :-** அவியக்தம் என்ற சொல் பிரதானத்தை குறிப்பதல்ல

## சமஸவதவிசேஷாத் - 8

**சமஸவத் :-** "அர்வாக்விலஸ்சமஸ:" (சிறிது குவிந்ததாக உள்ளது சமஸம்) என்பது போல (குவிந்ததன்மையானது சாதாரணமான தர்மமாக இருப்பதால் சமஸம் என்பதை குறிப்பதாக இல்லாததுபோல)

**அவிசேஷாத் :-** எந்த சிறப்பும் இல்லாததால், ஷ்ருதியில் கூறப்பட்ட அஜா என்ற சொல் பிரதானத்தை குறிப்பதல்ல

## ஜ்யோதிருப்ரமா து ததா ஹ்யதீயத ஏகே - 9

**ஜ்யோதிருபக்ரமான :-** ஜ்யோதி (நெருப்பு) துவக்கமாக கொண்டுள்ள நீர் மற்றும் அண்ணம் (உணவு) என்ற பிரகிருதியினையே அஜா என்று கூறுகிறது,

**து :-** நிச்சயமாக, பிரதானத்தை அல்ல

**துதா :-** அப்படி இருப்பதாகவே ஹி :- நிச்சயமாக

**அதீயதே :-** கூறுகின்றனர் (வேதத்தில் படிக்கின்றனர்)

**ஏகே :-** சாந்தோகிய ஷாகை (கிளை) சேர்ந்தவர்கள்.

**கல்பபோபதேஷாச்ச மத்வாதிவதவிரோத: - 10**

**கல்பனோபதேஷாத் :-** நெருப்பு, நீர் மற்றும் உணவு என்ற பிரகிருதிக்கு சமானத்தன்மையினை கூற அஜா என்ற கற்பனையானது உபதேசிக்கப்பட்டுள்ளது

**ச :-** என்பதாலும், பிரதானம் இங்கு கூறப்படவில்லை

மத்வாதிவத் :- சூரியனில், "ஆதித்யஸ்யாமதுனோ மதுத்வம்" (சூரியனில் மதுவல்லாததில் மதுத்தன்மை) என்பது போன்று மதுத்தன்மை உபதேசமானது செய்யப்பட்டதுபோல, அஜா அல்லாததான பிரகிருதியில் அஜாத்தன்மை உபதேசம் செய்வதில்

**அவிரோதாத் :-** எந்த விரோதமும் இல்லை.

**ந ஸாங்க்யோபஸங்க்ரஹாதபி நானாபாவாததிரேகாச்ச - 11**

**ந :-** "யஸ்மின்பஞ்ச பஞ்சஜனா ஆகாஷஸ்ச" (எதனில் ஐந்து பஞ்சஜன (ஐந்து ஜன) மற்றும் ஆகாயமானது நிலைபட்டுள்ளதோ) என்பதான ஷ்ருதியில் சாங்கியர்களின் பிரதானம் நிரூபிக்கப்படவில்லை.

**ஸாங்க்யோபஸங்க்ரஹாத் :-** ஐந்து ஐந்துதஜன என்ற சாங்கியரின் இருபத்தைந்து தத்துவங்களை குறிப்பதான எண்ணிக்கையினை குறிப்பதான சொற்களானது இங்கு கூறப்பட்டாதாக

**அபி :-** இருந்தாலும் கூட

**நானாபாவாத் :-** அந்த இருபத்தைந்து சாங்கியர்களின் தத்துவங்களும் வேறுபட்டதாக இருப்பதால் அதனை ஐந்தைந்தாக வகைப்படுத்தல் இயலாது

**அதிரேகாத் :-** ஆகாயம் மற்றும் ஆத்மா ஆகிய இரண்டும் தனியாக குறிப்பிடப்பட்டதால் அவை இருபத்தைந்தில் அடங்காமல் இருக்கின்றது. அதனால் இருப்பதேழு தத்துவங்கள் ஏற்கும் தவறான நிலையுண்டாகும்.

ச :- அதனாலும், இங்கு பிரதானத்தை தவிர வேறு ஒன்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

**ப்ராணாதயோ வாக்யசேஷாத் - 12**

**ப்ராணாதய: :-** பஞ்சஜன என்ற சொல் இங்கு பிராணன், சக்ஷு(கண்), ஷ்ரோத்ரம்(காது, அன்னம்(உணவு) மற்றும் மனதினை குறிப்பிடுகிறது.

**வாக்யசேஷாத் :-** "ப்ராணஸ்ய ப்ராணமுத" (பிராணனின் பிராணன் '.......... என்பதாக அறிபவர் பிரம்மத்தினை அறிந்தவர்) என்பதான பின்னர் வரும் வாக்கியத்தில் இவ்வாறே அறியப்படுகிறது.

**ஜ்யோதிஷைகேஷாமஸத்யன்னே - 13**

**ஜ்யோதிஷா :-** "தத்தேவா ஜ்யோதிஷாம்" (அந்த சூரியன் முதலிய ஜோதிகளிற்கும் ஜோதியான) என்பதான முன்னர் கூறப்பட்ட வாக்கியத்திலிருந்து ஜோதி என்ற சொல் கொண்டு ஐந்து என்ற எண்ணிக்கை முழுமை செய்ய வேண்டும் என்று

**ஏகேஷாம் :-** காண்வ சாகை (கிளை) காரர்களின் பாடத்தில் பிராணன் முதலியதில்

**அஸதி அன்னே :-** அன்னம் என்ற சொல்இல்லாததால், என்று ஏற்கப்படுகின்றது.

**காரணத்வே ந சாகாஷாதிஷு யதாவ்யதிஷ்டோக்தே: - 14**

**காரணத்வே :-** பிரம்மம் ஜகத்தின் காரணம் என்பதில்

**ந :-** எந்த விரோதமும் இல்லை

**ச :-** அவ்வாறு, "ஆத்மன: ஆகாஷ: ஸம்பூத:" (ஆத்மாவிலிருந்து ஆகாஷம் தோன்றியது) என்பதான

**ஆகாஷாதிஷு :-** ஆகாயம் முதலிய காரியங்களில் கூறப்பட்டுள்ளதால்

**யுதாவ்யபதிஷ்டோக்தே: :-** எல்லா உபநிஷத்துகளிலும் இவ்வாறே பரமாத்மாவானவர் சிருஷ்டிக்கு காரணம் என்று கூறப்பட்டுள்ளதால்.

## ஸமாகார்ஷாத் - 15

**ஸமாகர்ஷாத் :-** "அஸத் ஏவ இதமக்ர ஆஸீத்" (அஸத்தே சிருஷ்டிக்கு முன்னர் இருந்தது) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட அஸத் என்ற சொல் இன்மையினை, சூனியத்தை குறிப்பதாக இல்லாமல் தோற்றமடையாத பெயர் மற்றும் உருவமான ஜகத்தினை குறிக்கின்றது என்பதால் அது சத்தினையே இங்கு குறிக்கின்றது. அதனால் இங்கு காரணம் அஸத் என்ற சந்தேகித்தல் இயலாது.

## ஜகத்வாசித்வாத் - 16

**ஜகத்வாசித்வாத் :-** "யோ வை பாலாக ஏதேஷாம் புருஷானாம் கர்த்தா யஸ்ய வதைத்கர்ம ஸவதை வேதிதவ்ய:" (பாலாகியே, எவர் இந்த ஜீவனின் கர்த்தாவோ எவருடையது இது கர்மமோ அவரே அறியப்படவேண்டியவர்) என்பதான ஷ்ருதியில் கர்ம என்ற சொல் இந்த ஜகத் முழுவதையும் குறிப்பதானதால், இதன் கர்த்தா பரமாத்மாவே ஆகும்.

## ஜீவமுக்யப்ராணலிங்கான்நேதி சேந்தத்வ்யாக்யாதம் - 17

**ஜீவமுக்யப்ராணலிங்காத் :-** இதற்கு (இங்கு கூறப்பட்டதற்கு) முன்னர் உள்ள வாக்கியத்தில் ஜீவன் மற்றும் முக்கிய பிராணனை குறிப்பதான குறி உள்ளது என்பதால்.

**நேதி (ந இதி) :-** பரமாத்மாவினை குறிப்பதாக இருத்தல் இயலாது

**சேத் :-** என்று கூறினால்

**தத்வ்யாக்யாதம் :-** இது, பிரதர்தண அதிகரணத்தில் முன்பே கூறப்பட்டுவிட்டது.

## அன்யார்தம் து ஜைமினி: ப்ரஷ்னவ்யாக்யானாப்யாமபி சைவமேகே - 18

**அன்யார்த்தம் :-** இந்த பிரகரணத்தில் ஜீவன் குறிக்கப்பட்டது, பிரம்ம ஞானத்திற்காக

**து :-** நிச்சயம் ஜீவனை குறிக்க அல்ல

**ஜைமினி: :-** என்று ஜைமினி ஆசாரியர் ஏற்கின்றார்.

**ப்ரஷ்னவ்யாக்யானாப்யாம் :-** "க்வைஷ ஏதத் பாலாகே" (பாலாகியே, தூக்கத்தில் இந்த பருஷன் எந்த நிலையினை அடைகிறான்) என்று கேள்வியும்,

அதற்கு "யதா ஸீப்த: ஸ்வப்னம் ந கஞ்சன பஷ்யதி" (தூக்கத்தில் இந்த புருஷன் எப்பொழுது எந்த கனவினையும் காணுவதில்லையோ அப்பொழுது பிராணனோடு ஒருமுகப்படுகிறான்) என்ற பதிலும்

**அபி ச :-** அதுமட்டுமல்லாமல்

**ஏவம் :-** "ய ஏஷ விஞ்ஞானமய: புருஷ:" (இந்த விஞ்ஞானமய புருஷன் (ஜீவன்) தூக்கத்தில் எங்கிருந்தான், எங்கிருந்து வந்தான்) என்ற கேள்வி, "ய ஏஷோ அந்தர்ஹ்ருதய" (இந்த இதயத்தினுள் எந்த ஆகாயம் உள்ளதோ அதனில் தூங்குகிறார்) என்ற பதில் மூலம் விஞ்ஞானத்மா (ஜீவன்) பரமாத்மாவிலிருந்து வேறுபட்டவன் என்று தெளிவாக

**ஏகே :-** வாஜசனேய ஷாகை (கிளை) படிப்பவர்கள் கூறுகின்றனர்.

## வாக்யான்வயாத் - 19

**வாக்ய :-** "ஆத்மா வா அரே திரஷ்டவ்ய:" (ஆத்மாவே, ஏ மைத்ரேயீ, பார்க்கப்படவேண்டியது) என்பதான ஷ்ருதியில் காணப்படவேண்டியது முதலியதாக கூறப்பட்ட ஆத்மா பரமாத்மாவே

**அன்வயாத் :-** உபகிரமம், உபசம்ஹாரம் (முன்னுரை, முடிவுரை) முதலியதை சம்பந்தப்படுத்தி காண்கையில் இவ்வாறே, பரமாத்மாவினை குறிப்பதாகவே, காணப்படுகிறது.

## ப்ரதிஞாஸித்தேர்லிங்கமாஷ்மரத்ய: - 20

**ப்ரதிஞாஸித்தே: :-** "ஆத்மனி விஞ்ஞாதே ஸர்வமிதம் விஞ்ஞாதம் பவதி" (ஆத்மாவினை அறிந்தால் இவை எல்லாம் அறியப்பட்டதாகிறது) என்பதான ஷ்ருதி மூலம் செய்யப்பட்ட பிரதஞா (சூளுரை) நிரூபிக்க

**லிங்கம் :-** ஜீவ ___ பரமாத்மாவின் பிறிவற்ற நிலையினை சந்தேகத்தால் காரணமாக இந்த முனனுரை என்று

**ஆஷ்மரத்ய: :-** ஆஷ்மரத்ய ஆசாரியர் ஏற்கின்றார்.

## உத்கிரமிஷ்யத ஏவம்பாவாதித்யௌடுலோமி: - 21

**உத்கிரமிஷ்யத :-** பரமாத்மாவினை சாக்ஷாத்கரித்த பின்னர் உடல் முதலியதிலிருந்து மேலெழும்பி ஜீவானது

**ஏவம் பாவாத் :-** பரமாத்மாவினை அடைகின்றது, பிரிவற்ற நிலையினை அடைகின்றது.

**இது :-** என்ற எதிர்காலத்தில் ஏற்படும் பிரிவற்ற நிலையினை கொண்டு, ஜீவனின் முன்னுரை (பிரிவற்றதாக)

**ஔடுலோமி: :-** என்று ஔடுலோமி ஆசாரியர் ஏற்கிறார்.

## அவஸ்ததேரிதி காஷக்ருத்ஸ்ன: - 22

**அவஸ்திதே: :-** அவித்தையினால் ஏற்றிப்பார்க்கப்ட்ட பிரிவினால் பிரம்மமே ஜீவன் என்ற நிலையில் இருக்கிறது.

**இதி :-** என்பதால், ஜீவன் முன்னுரையாக உபதேசிக்கப்பட்டுள்ளது

**காஷக்ருத்ஸ்ன: :-** என்று காஷக்ருத்ஸ்ன ஆசாரியர் ஏற்கின்றார்

## ப்ரதிருதிஸ்ச ப்ரதிஞாத்ருஷ்டாந்தானுபரோதாத் - 23

**ப்ரகிருதி: :-** பரமாத்மா உபாதான காரணம்,

**ச :-** மற்றும் நிமித்த காரணம் ஆகும்

**ப்ரதிஞா :-** "யேனாஷ்ருதம் ஷ்ருதம் பவதி" (எதனால், கேட்கப்படாதது கேட்கப்பட்டது ஆகிறதோ) என்பதான ஷ்ருதியின் மூலம் செய்யப்பட்ட பிரதிஞா (சூளுரை) மூலம், எதனை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகின்றது என்றும்

**திருஷ்டாந்த :-** "யதா சௌம்யேகேனம்ருத்பிண்டேன" (எவ்வாறு, மென்மையானவனே, (குழந்தாய்), ஓரே களிமண் கட்டியிலிருந்து) என்பதான ஷ்ருதியின் மூலம் செய்யப்பட்ட உதாரணமும்

**அனுபரோதாத் :-** ஒன்றுகொன்று சம்பந்தப்பட்டதாக, எந்த விரோதமும் இல்லாமல், ஆகின்றதால்

## அபித்யோபதேஷாச்ச - 24

**அபித்யா :-** "ஸோ அகாமயத" (அது ஆசைப்பட்டது) என்றும், "பஹுஸ்யாம் ப்ரஜாயேயதி" (நான் பலவாக ஆவேனாக) என்றும் அபித்யானமானது சங்கல்பமானது

**உபதேசாத் :-** உபதேசிக்கப்பட்டதால்,

**ச :-** "ஸோ அகாமயத" என்பதால் பரமாத்மா கர்த்தாவன நிமித்த காரணம் என்றும், "பஹுஸ்யாம்" என்பதால் பரமாத்மா பிரகிருதியான உபாதான காரணம் என்றும் ஆகின்றது.

**ஸாக்ஷாச்சோபயாம்னானாத் - 25**

**ஸாக்ஷாத் :-** "ஸர்வாணி ஹ வா இமானி பூதானி" (இந்த பூதங்கள் (ஜீவன்கள்) எல்லாம் இந்தஆகாயத்திலிருந்தே தோன்றியது) என்பதான ஷ்ருதியில் ஆகாஷம் என்பது மூலம் பரமாத்மா நேரடியாக குறிப்பிடப்பட்டதால்

**ச :-** அங்கு அதுவே ஜகத்தின் தோற்றம், நிலைபாடு மற்றும் லயத்திற்கு காரணம் என்றும் கூறப்பட்டதாலும்

**உபயாம்னானாத் :-** அதுவே நிமித்த மற்றும் உபதான காரணம் என்று ஆகின்றது.

**ஆத்மக்ருதே: பரிணாமாத் - 26**

**ஆத்மக்ருதே: :-** "ததாத்மானம் ஸ்வயமகுருத" (அது தன்னையே பெயர் ___ உருவமான ஜகத்ததாக தோற்றுவித்தது) என்பதான ஷ்ருதியின் மூலம் அது இரண்டுவகையான காரணமும் என்று தெறிகிறது

**பரிணாமாத் :-** ஏனென்றால், செய்பவராக கூறப்பட்டதே விவர்தமாக (தோற்றம் மாத்திரமாக) கர்மமாகவும் ஆகுதல் இயலும்.

**யோனிஸ் ச ஹி கீயதே - 27**

**யோனி: :-** "யத் பூதயோனிம் பரிபஷ்யந்தி" (எந்த ஜகத்தின் காரணத்தை அறிகின்றனரோ) என்பதான ஷ்ருதியில் பரமாத்மா யோனி (காரணம்) என்று கூறப்பட்டுள்ளது

**ச :-** அதனாலும், **ஹி :-** நிச்சயமாக அவ்வாறே

**கீயதே :-** ஷ்ருதியானது உபாதானம் மற்றும் நிமித்த காரணமாக கூறுகின்றது.

**ஏதேன ஸர்வே வ்யாக்யாதா வ்யாக்யாதா: - 28**

**ஏதேன :-** இதன்மூலம், பிரதானமானது காரணம் என்பதை நிராகரிப்பது மூலம்

**ஸர்வே :-** மற்ற எல்லோரும், பரமாணு, சுபாவம், அஸத் முதலியவற்றினை ஜகத்தின் காரணம் என்று ஏற்பவர்கள்

**வ்யாக்யாதா :-** நிராகரிக்கப்பட்டார்கள்.

வ்யாக்யாதா: :- இரண்டாவது முறை இந்த அத்யாயம் முடிவடைகின்றது என்பதை குறிக்க உபயோகிகப்பட்டது.

## முதல் அத்தியாயம் சமாப்தம்.

# இரண்டாம் அத்தியாம் - முதல் பாதம்

### ஸ்ம்ருத்யனவகாஷதோஷ ப்ரசங்க இதிசேன் நான்ய ஸ்ம்த்யனவகாஷதோ ப்ரசங்காத் - 1

**ஸ்ம்ருத்யனவகாஷதோஷப்ரசங்க: :-** வேதாந்த வாக்கியங்களை பிரம்மத்தோடு அதுவே ஜகத்தின் காரணம் என்று சம்பந்தம் செய்தல் தவறாகும், ஏனென்றால், கபிலர் கூறிய சாங்கிய ஸ்மிருதிக்கு அதனால் இடமில்லாமல் போகும்என்ற தோஷம் உண்டாகம்.

**இதி சேத் :-** என்று கூறினால், **ந :-** தவறு

**அன்யஸ்ம்ருத்யவைகாஷதோஷப்ரசங்காத் :-** அவ்வாறு சாங்கியர்கள் முதலியவரை ஏற்றால், ஜகத்தின் காரணம் சேதனமானதே என்று கூறும் மனு முதலிய ஸ்மிருதிக்கு இடமில்லாமல் போகும் என்ற தோஷம் உண்டாகும், அதனால் ஷ்ருத்திக்கு ஏற்றார்போல உள்ள ஸ்மிருதி பிரமாணம் மற்றவை பிரமாணமற்றது என்பதால், சம்ந்தம் (சமன்வயம்) செய்தது தவறில்லை

### இதரேஷாம் சானுபலப்தே: - 2

**இதரேஷாம் :-** சாங்கியர்கள் ஏற்கும் பிரதானத்தைகாட்டிலும் வேறானதான மஹத் முதலியவை

**ச :-** உலகத்திலுள்ள பிரமாணம் மூலமாகவோ வேதத்தின் மூலமாகவோ

**அனுபலப்தே: :-** அடையப்படாததாக இருப்பதால், சாங்கிய ஸ்மிருதி பிரமாணமற்றது என்பதில் தவறில்லை.

**<u>ஏதேன யோக: ப்ரத்யுக்த: - 3</u>**

**ஏதேன :-** சாங்கிய ஸ்மிருதியை நிராகரித்தது மூலம்

**யோக: :-** யோக ஸ்மிருதியும்

**ப்ரத்யுக்த: :-** நிராகரிக்கப்பட்டது ஆகின்றது.

**<u>ந விலக்ஷணத்வாததஸ்ய ததாத்வம் ச ஷப்தாத் - 4</u>**

**ந :-** பிரம்மமானது உபாதான காரணமாக இருத்தல் இயலாது

**விலக்ஷணத்வாத் :-** வேறுபட்ட தன்மைகள் உடையதாக காரணம் மற்றும் காரியமானது இருப்பதால்,

**அஸ்ய :-** ஜகத்திற்கு அசேதனமானதிற்கு

**ததாத்வம் :-** வேறுபட்டதாகவும் காணப்படுகிறது

**ச :-** பிரம்மம் தூய்மையானது சேதனமானது முதலியதும், ஜகத் தூய்மையற்றது ஜடமானது முதலியதும்

**ஷப்தாத் :-** "விஞ்ஞானம் சாவிஞ்ஞானம் சாபவத்" (சேதனமாவும் அசேதனமாகும் ஆயிற்று)என்பதான ஷ்ருதியினாலும்.

**<u>ஆபிமானிவ்யபதேஷஸ்து விசேஷானுகதிப்யாம் - 5</u>**

**ஆபிமானிவ்யபதேஷ: :-** "தே ஹ ப்ராணா ப்ரஜாபதிம்" (அந்த பிராணன்களானது பிராஜாபதியினை அடைந்து கூறியது) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட பிராணன் அந்த பிராண அபிமாணி தேவதையே

**து :-** நிச்சயமாக வேறெதுமவும் இல்லை.

**விசேஷானுகதிப்யாம் :-** விசேஷம் - சேதனம் மற்றும் ஜடமான பிரிவுகள் மற்றும் அனுகதி ___ அபிமானியான சேதனமாக தேவதையே எல்லா இடத்திலும் கூறப்பட்டதாலும்.

**<u>த்ருஷ்யதே து - 6</u>**

**த்ருஷ்யதே :-** சேதனமானதிலிருந்து அசேதனமானதும், அசேதனத்திலிருந்து (ஜடம்) சேதனமானதும் தோன்றுவது காணப்படுவதாலும், பரமாத்மாவே ஜகத்தின் உபாதான காரணம்,

**து :-** நிச்சயமாக வேறெதும் இல்லை.

**அஸதிதி சேன்ந ப்ரதிஷேதமாத்ரத்வாத் - 7**

**அஸத் :-** காரியமானது தோன்றுவதற்கு முன்னர் ஜகத் அஸத்தாகவே இருந்தது

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** தவறு

**ப்ரதிஷேதமாத்ரத்வாத் :-** நிராரிக்ககமட்டுமே அது கூறப்பட்டதால் (அஸத் இருந்தது என்று), காரியத்திற்கு முன்பும் பின்பும் சத்தாகவே இருந்தது என்பதால்

**அபீதௌ தத்வத்ப்ரஸங்காத்ஸமஞ்ஜஸம் - 8**

**அபீதௌ :-** பிரளயத்தில்

**தத்வத் :-** காரியத்தை போன்று

**ப்ரஸங்காத் :-** காரணமான பரமாத்மவானது தூய்மையற்றது முதலிய ஆகும் நிலையுள்ளதால்

**அஸம்ஞ்ஜஸம் :-** தூய்மையாது முதலியதான பரமாத்மாவனாது ஜகத்தின் காரணமான இருத்தல் இயலாது.

**ந து த்ருஷ்டாந்தபாவாத் - 9**

**ந :-** கூறப்பட்ட (அஸமஞ்ஜஸம் - நியாயமில்லை) என்ற தோஷம் இல்லை இங்கு.

**து :-** நிச்சயமாக

**த்ருஷ்டாந்த பாவாத் :-** காரணத்தில் லயமடைந்த காரியம் காரணத்தை கலங்கப்படுத்தாது என்பதற்கு உதாரணம் இருப்பதால்.

**ஸ்வபக்ஷதோஷாச்ச - 10**

**ஸ்வபக்ஷதோஷாத் :-** சாங்கியர்கள் கூறிய தோஷம் அவர்களுடைய சித்தாந்தத்திலும் இருப்பதால்

**ச :-** தோஷம் மற்றும் பரிகாரமானது இருவர் மதத்திலும் (வேதாந்தி மற்றும் சாங்கியர்) சமமேயாகும்.

**<u>தர்காப்ரிஷ்டானாதப்யன்யதானுமேயமிதி சேதேவமப்யவிமோக்ஷப்ரஸங்க: - 11</u>**

**தர்காப்ரதிஷ்டானாத் :-** தர்க்கத்திற்கு எந்த நிலைபாடும் இல்லாததாலும்

**அபி :-** எந்த தர்கமும் நிலைபாடு இல்லாது போனாலும்

**அனுமேயம் :-** வேதாந்த வாக்கியத்தின் சமன்வயத்தில் தவறினை காணவேண்டும் (அறிய வேண்டும்)

**இதி சேத் :-** என்று கூறினால்

**ஏவம் அபி :-** இவ்வாறு சில நிலைபட்ட தர்கமு் மூலமும்

**அவிமோக்ஷபிரஸங்க: :-** இந்த, தர்கம் நிலைபடாதது என்ற தோஷத்திலிருந்து விடுபடுவது இயலாது (கபிலர் முதலியவர்ளின் தர்கமானது ஒன்றுகொன்று விரோதமானதாக இருப்பதால், தத்துவமானது தீர்மானம் ஆவது இயலாது என்பதால் மோக்ஷம் அடைவது இயலாது)

**<u>ஏதேன ஷிஷ்டாபரிக்ரஹா அபி வ்யாக்யாதா: - 12</u>**

**ஏதேன :-** சிலரால் சில பாகங்கமானது ஏற்கப்பட்டதான சாங்கியர்கள் முதலியவரை நிராகரித்து மூலம்

**ஷிஷ்டாபரிக்ரஹா :-** சிஷ்டபுருஷர்களால் முழுமையாக ஏற்கப்படாததான

**அபி :-** அணு முதலிய காரணங்களை ஏற்பவர்களும்

**வ்யாக்யாதா: :-** நிராகரிக்கப்பட்டவர்கள் ஆகிறார்கள்

**<u>போக்த்ராபத்தேரவிபாகஸ்சேத் ஸ்யால்லோகவத் - 13</u>**

**போக்த்ராபத்தே: :-** நிமித்த மற்றும் உபாதான காரணமாக பரமாத்மாவானவர் இருப்பதாக ஏற்றால், பிரம்மத்திலிருந்து வேறுபடாததால் போகியமும் (அனுபவிக்கப்படுவதும்) போக்தாவாக (அனுபவிப்பவராக) ஆகும் நிலையடையும்

**அவிபாக: :-** இதனால் போகியம் மற்றும் போக்தா என்ற பிரிவு நிலைகுலையும் (அழியும்)

**சேத் :-** என்று கூறினால்

**ஸ்யாத் :-** பிரிவானது நிச்சயம் இருக்கும், எவ்வாறு

**லோகவத் :-** களிமண்ணிலிருந்து வேறுபடாததான காரியமான பானை முதலிய வியவகாரம் போல.

**ததனன்யத்வமாரம்பணஷப்தாதிப்ய: - 14**

**ததனன்யத்வம் :-** காரியமான ஜகத்காரணமான பிரம்மத்திலிருந்து வேறுபடாதது

**ஆரம்ணஷப்தாதிப்ய: :-** "வாசாரம்பணம் விகாரம்" (வாக்கினால் துவங்கப்பட்ட (நிலைபட்ட) விசாரம்,காரியம்) "பிரம்மைவேதம் ஸர்வம்" (பிரம்மமே இதுவெல்லாம்) என்பதான ஷ்ருதியின் மூலம் இவ்வாறு அறியப்படுகிறது.

பாவே சோபலப்தே: - 15

**பாவே :-** காரணமானது இருந்தலுடையும் போது

**ச :-** என்பதாலும், அப்படிப்பட்டதாகவே மட்டுமே

**உபலப்தே: :-** காரியமானதும் இருத்தலுடையதாக காணப்படுகிறது, என்பதாலும் காரியம் காரணத்திலிருந்து வேறுபடாதது.

**ஸத்வாச்சாவரஸ்ய - 16**

**ஸத்வாத் ச :-** "ஆத்மா வா இதமக்ர" (ஆத்மாவே இதற்கு (சிருஷ்டிக்கு) முன்னர் என்பதான ஷ்ருதியின் மூலமாக உத்பத்திக்கு முன்னர்

**ஆவரஸ்ய :-** காரியமானது இருத்தலுடையது என்பதாலும், காரியம் காரணத்திலிருந்துவேறுபடாதது.

**அஸத்வ்யபதேஷான்நேதி சேன்ந தர்மாந்தர வாக்யசேஷாத் - 17**

**அஸத்வ்யபதேஷாத் :-** "அஸத்வா இதம்கர ஆஸீத" (அஸத்தே இதற்கு முன்னர் இருந்தது) என்பதா ஷ்ருதியின் மூலம் உத்பத்திக்கு முன்னர் காரியம் (ஜகத்) அஸத்தாகவே இருந்தது

**ந :-** காரியமானது காரணமாக சத்தாக இல்லை

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** தவறு

**தர்மாந்தரேண :-** வேறு நிலையினை (தன்மையினை) குறிக்க கூறப்பட்டது அஸத் என்று (அதாவது, அவியாகிருதமான (தோற்றமடையாத) நிலையினை குறிக்க)

**வாக்யசேஷாத் :-** இது பின்னால் கூறப்படும் வாக்கியமான "தத்ஸத் ஆஸீத்" (அது சத்தாக இருந்தது) என்பது மூலம் அறியப்படுகின்றத என்பதாலும், காரியம் காரணத்திலிருந்து வேறுபடாதது.

## யுக்தே: ஷப்தாந்தராச்சச - 18

**யுக்தே: :-** யுக்தியினாலும்

**ஷப்தாந்தராத் :-** "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" (சத்தே, மென்மையானவனே, இதற்கு முன்னர் இருந்தது) என்பதாலும்

**ச :-** காரியம் காரணத்திலிருந்து வேறுபடாதது ஆகின்றது.

## படவச்ச - 19

**படவத் :-** துணியினைப்போல, மடிக்கப்பட்டபோதும் விரித்துவைக்கப்பட்ட போதும் துணி வேறுபட்ட நிலைகளில் தோன்றிலும் துணியில் எந்த வேறுபாடும் இல்லை என்பதுபோல

**ச :-** காரியம் காரணத்திலிருந்து வேறுபடாதது ஆகின்றது.

## யதா ச ப்ராணாதி: - 20

**யதா ச :-** உலகத்தில் எவ்வாறு காணப்படுகிறதோ

**ப்ராணாதி: :-** பிராணனாது பலசெயல்களில் பல்வேறு பெயரால் அறியப்பட்டாலும் அது வாயு (காற்று) என்பதில் எந்தவேறுபாடும் இல்லையோ. அதுபோல, காரியம்காரணத்திலிருந்து வேறுபடாதது ஆகின்றது.

**இதரவ்யபதேஷாத்திதாகரணாதி தோஷப்ரஸக்தி: - 21**

**இதரவ்யபதேஷாத் :-** "த்தவமஸி" (அது நீயாகிறாய்) என்பதில் ஜீவனில் பிரம்மத்தன்மையும், "அனேன ஜீவேன" (இந்த ஜீவனில் ஆத்மாவாக பிரவேசித்து பெயர் உருவங்களை சிருஷ்டிப்பேன்) என்பதில் பிரம்மத்தில் ஜீவத்தன்மையும் கூறப்பட்டுள்ளது, என்பதால் பிரம்மமே சிருஷ்டித்தது என்றால் ஜீவனும் சிருஷ்டிப்பவர் ஆகும்.

**ஹிதாகராதி :-** இதனால், தானே தனக்கு நன்மையே செய்துகொள்வார், வியாதி, வயோதிகம், மரணம் முதலியநன்மையற்றதானதல்ல என்ற

**தோஷபிரஸக்தி :-** தோஷங்களானது பிரம்மம் தனக்கே உண்டுசெய்து கொள்கிறது என்ற ஆகும். என்பதால், பிரம்மம் ஜகத்தின் காரணம் அல்ல.

**அதிகம் து பேதநிர்தேஷாத் - 22**

**அதிகம் :-** நித்திய, புத்த, முக்த சுபாவமான சர்வஞ்ஞும், சர்வசக்தியுடையதான பிரம்மம் ஜீவனிலிருந்து வேறுபட்டது

**து :-** நிச்சயமாக, அதனால் ஹிதாகரணம் முதலிய தோஷங்கள் இல்லை.

**பேதநிர்தேஷாத் :-** "ஆத்மா வா அரே" (ஆத்மாவினையே, மைத்ரேயீ கேட்கவேண்டும், சிந்திக்கவேண்டும்,தெளிய வேண்டும்) என்பதான ஷ்ருதியில் கற்பனையான பிரிவு காண்பிக்கப்பட்டதால்.

**அஷ்மாதிவச்ச ததனுபபத்தி: - 23**

**அஷ்மாதிவத் :-** கல்லாகவே இருந்தாலும் வைடூர்யம் மேன்மையானதாகவும், சூர்யகாந்தம் முதலியவை நடுத்தரமாகவும், கருங்கல் முதலியவை தாழ்மையாகவும் இருப்பது போல

**ச :-** இதுபோல, பிரம்மம் ஒன்றானாலும் ஜீவனாகவும் பிரம்மமாகவும் வேறுபாடு இருத்தல் இயலம்

**ததனுபபத்தி: :-** அதனால் கூறப்பட்ட ஹிதாகரணம் முதலிய தோஷங்களுக்கு இடமில்லை.

**உபஸம்ஹாரதர்ஷனான் நேதி சேன்ந க்ஷீரவத்தி - 24**

**உபஸம்ஹாரதர்ஷனாத் :-** குயவன் முதலிய கர்த்தாக்கள் (செய்பவர்கள்) சக்கிரம் முதலிய உபயோகமான விஷயங்களை உபஸம்ஹாரம் (ஒன்று சேர்த்தல்) செய்வது கணப்படுகிறது என்பதால்

**ந :-** எந்த உதவியும் இல்லாமல், பரமாத்மா உபாதானம் அல்லது நிமித்த காரணமாகவே ஆகுதல் இயலாது

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** அது தவறு

**க்ஷீரவத் :-** பால், நீர் முதலியவை எவ்வாறு எதன் உதவியும் இல்லாமல் தயிர், பனிக்கட்டி ஆகின்றதோ அவ்வாறே பரமாத்மாவும் எதன் உதவியும் இல்லாமல் படைக்கின்றார்.

## தேவாதிவதபி லோகே: - 25

**தேவாதிவத் :-** தேவதை முதலியவர்கள் எந்த வெளி விஷயங்களும் இல்லாமலேயே தங்கள் சங்கல்பத்தினாலேயே பலவிதமான சிருஷ்டியினை படைப்பது போல

**அபி :-** பரமாத்மாவும் எந்த உதவியும் இல்லாமல் படைத்தல் இயலும்

**லோகே :-** இவ்வாறு உலகத்திலும் பித்ருக்கள், ரிஷிகளின் ஆசீர்வாதத்தால் விஷயங்கள் நடப்பது உலகத்திலும் காணப்படுவதே ஆகும்

## க்ருத்ஸ்னப்ரஸக்திர்நிரவயவத்வஷ்பதகோபோ வா - 26

**க்ருத்ஸ்னப்ரஸக்தி: :-** பிரம்மம் அவயவமற்றதால், அதனில் பரிணாமத்தை (மாற்றத்தை) ஏற்றால் அது முழுவதும் மாறும் நிலையுண்டாகம்

**நிரவயவத்வஷப்தகோபோ வா :-** இப்படி இதற்கு பயந்து, ஒரு பாகம் மாற்றமடையும் என்று ஏற்றால், பிரம்மம் நிரவயவம் (பாகம் அற்றது, பிரிவு அற்றது) என்பதான ஷ்ருதியுடன் விரோதம் உண்டாகம். என்பதால்இரண்டு வகையாகவும் பரமாத்மா அநித்தியம் ஆவதால், பரமாத்மா ஜகத்தின் உபாதான காரணம் ஆவதியலாது.

## ஷ்ருதேஸ்து ஷப்தமூலத்வாத் - 27

**ஷ்ருதே: :-** "சேயம் தேவதைக்ஷத் (இந்த தேவதையானது (சத்தானது) பார்த்தது0 என்பது முதலானதால் பரமாத்மா உபாதான காரணம் என்றும், "தாவானஸ்ய மஹிமா" (இந்த காயத்ரீ எனப்படும் பரமாத்மாவின்பெருமை இதுவே)

என்பதான ஷ்ருதிகள் மூலம்பரமாத்மாவிற்கு காரியத்திலிருந்து வேறுபட்டதான இருத்தல் கூறப்பட்டது என்பதால், பரமாத்மா முழுவதுமாக மாற்றமடைவது என்பத இயலாது

**ஷப்த மூலத்வாத்** :- பரமாத்மாவானது ஷ்ருதியினால் அறியப்படுவது.

## ஆத்மனி சைவம் விசித்ராஸ்ச ஹி - 28

**ஆத்மனி** :- "ந தத்ர ரதா" (அங்கு ரதமோ, ரதத்தினை நடத்தும் குதிரையே) என்பதான ஷ்ருதியில் கனவு காண்பவரின் உள்ளிலும்

**ச** :- உலகத்தினில் மாயாஜாலம் புரிபவர்கள் தாங்கள் எந்த மாற்றமும் அடையாமல்

**ஏவம்** :- இப்படிப்பட்ட சிருஷ்டிகளை செய்வது காணப்படுவதால்

**விசித்ரா:** :- பலவகையாக சிருஷ்டி கூறப்பட்டுள்ளது

**ச** :- இவ்வாறு பரமாத்மாவினும் சிருஷ்டியானது

**ஹி** :- நிச்சயமாக ஆவது இயலும்.

## ஸ்வபக்ஷதோஷாச்ச - 29

**ஸ்வபக்ஷதோஷாத்** :- சாங்கியர்களின் பிரதானமும்அவயவமற்றது என்பதால் குணங்களை அதன் அவயவமாக ஏற்றாலும் குணங்கள் அவயவமற்றதால், இதுபோல, வைசேஷிகர் முதலியவர்களின் பரமாணுவும் அவயவமற்றது என்பதால் இரண்டு கூடும்போது அதன் அளவில்எந்த மாற்றமும் உண்டாகாது, ஒரு பாகத்தில் சேரும் என்று ஏற்றாலோ அது(அணு) அவயவமற்றது என்பது நிராகரிக்கப்பட்டது ஆகும் என்பதால், அவர்களுடைய மதத்திலும் இந்த தோஷங்கள் இருப்பதாலும்,

**ச** :- பரமாத்மாவே காரணம் என்பது நிரூபணமாகிறது.

## ஸர்வோபேதா ச தத்தர்ஷனாத் - 30

**ஸர்வோபேதா** :- பரமாத்மா எல்லா சக்திகளும் கூடியது

**ச** :- என்பதாலும்

**தத்தர்ஷனாத்** :- இவ்வாறே, ஷ்ருதியிலும் "ஸர்வகர்மா ஸர்வகாம:" என்பது முதலியதாக கூறுவது காணப்படுவதாலும்

## விகரணத்வான்நேதி சேத்ததுக்தம் - 31

**விகரணத்வாத் :-** "அசசக்ஷுஷ்கமஷ்ரோத்ரம்"(கண்களற்றது, காதுகளற்றது) என்பதாக பரமாத்மா புலன்கள் இல்லாதது என்று கூறுவதால்

**ந :-** அது படைப்பவராக இருத்தல் இயலாது

**இதி சேத் :-** என்று கூறினால்

**ததுக்தம் :-** "தேவாதிவதபி லோகே" என்றசூத்திரத்தில் இதனை குறித்து முன்பே கூறப்பட்டுவிட்டது.

## ந ப்ரயோஜனவத்வாத் - 32

**ந :-** நித்திய திருப்தரான பரமாத்மா ஜகத்தின் காரணம் ஆவது இயலாது

**ப்ரயோஜனத்வாத் :-** பிரவிருத்தியானது எதிர்பார்பு உடையதாகவே இருப்பதாக காணப்படுவதால்.

## லோகவத்து லீலாகைவல்யம் - 33

**லோகவத் :-** உலகத்தினைப் போல, இங்கும் இராஜா முதலியவர் எந்த பிரயோஜனமும்இல்லாமல் கிரீடைகளில் (உல்லாசத்தில், வேட்டையாடுதல் ) முதலிய ஈடுபடுவது போல

**து :-** ஆவது இயலும் என்பதால நீங்கள் கூறியது தவறு

**லீலாகைவல்யம் :-** பரமாத்மாவின் பிரவிருத்தியும் பிரயோஜனம் இல்லாமல் வெறும் லீலையாகவே நடத்தல் இயலும்.

## வைஷம்யநைர்க்குண்யே ந ஸாபேக்ஷத்வாத் ததா ஹி தர்ஷயதி - 34

**வைஷம்யநைர்கண்யே :-** வைஷம்யம் - ஏற்றத்தாழ்வு பார்பது, நைர்க்குண்யம் - கருணையற்ற தன்மை என்பதான தோஷங்கள்

**ந :-** பரமாத்மாவில் இருத்தல் இயலாது

**ஸாபேக்ஷத்வாத் :-** ஜீவனின் கர்மத்திற்கு ஏற்றார்போல பலன் தருவதால்

**ததா ஹி :-** இவ்வாறு இருப்பதாகவே

**தர்ஷயதி :-** "ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி" (நன்மை அடைவிக்க அவர் மூலம்நல்ல கர்மத்தினை செய்விக்கின்றது) என்பதான ஷ்ருதியும் கூறுகின்றது.

**ந கர்மாவிபாகாதிதி சேன்நானாதித்வாத் - 35**

**ந :-** இருத்தல் இயலாது (சிருஷ்டிக்கு முன்னர்)

**கர்ம :-** கர்மமானது (அதன் சார்போ)

**அவிபாகாத் :-** "ஸதேவ ஸோம்ய"(சத் மட்டுமே இருந்தது) என்பது முதலான ஷ்ருதிகள் இரண்டற்ற நிலையினை காண்பிப்பதால்

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** தவறு

**அனாதித்வாதி :-** ஸம்ஸாரம் அனாதி, அதன் கர்மமும் அனாதி விதை ___ முளை போன்று என்பதால் கர்மத்துடன் சார்பு இருக்கும்.

**உபபத்யதே சாப்யுபலப்யதே ச - 36**

**உபபத்யதே :-** ஸம்ஸாரம் அனாதி என்பது நியாயமே

**ச அபி :-** அது மட்டுமல்லாமல்

**உபலப்யதே :-** "தாதா யதா பூர்வமகல்பயத்" (பிரம்மா முன்பிருந்த சிருஷ்டியினை போன்றே படைத்தார்) என்பதான ஷ்ருதியும் "நரூபமஸ்யேஹ" (இந்த சம்சாரம் என்கிற மரத்தை போன்று இங்கு காணப்படுவதில்லை) என்பதான ஸ்மிருதியும்

**ச :-** சம்சாரம் அனாதி என்பதை காண்பிக்கின்றது

**ஸர்வதர்மோபபத்தேஸ் ச - 37**

**ஸர்வதர்ம: :-** ஜகத்தின் காரணம், சர்வஞ்ஞும் முதலிய தர்மங்கள்

**உபபத்தே: :-** பரமாத்மாவில் இருப்பதாலும்

**ச :-** பரமாத்மா ஜகத்தின் காரணம் ஆகும்.

## இரண்டாம் அத்தியாயம் - இரண்டாம் பாதம்

**ரசனானனுபபத்தேஸ்ச நானுமானம் -1**

**ரசனானுபபத்தேஸ் ச :-** வேறுபட்டதான ஜகத்தின் சிருஷ்டித்தல் இயலாது

**ந :-** அதனால் அதன் உபாதான காரணம் ஆதலியலாது.

**அனுமானம் :-** அனுமானத்தால் நிரூபிக்கப்பட்ட ஜடமான பிரதானமானது அதாவது இன்ப துன்ப ___ மயக்கம் கூடியதானதிலிருந்து ஜகத் தோன்றியது, இன்பம் முதலியவை ஊடுருவியிருப்பது காணப்படுவதால், பானையில் களிமண் ஊடுருவியிருப்பது போல என்பது அனுமானம்.

**ப்ரவ்ருத்தேஸ் ச - 2**

**ப்ரவ்ருத்தே: :-** ஜடமான பிரகிருதி தன்னுடைய சமநிலையிலிருந்து (சத்துவ, ரஜஸ், தமஸின் சமநிலை) நழுவுவதான பிரவிருத்தி சேதனம் இல்லாமல் நடத்தல் இயலாது

**ச :-** என்பதாலும், பிரதானம் ஜகத் காரணம் அகுதலியலாது.

**பயோம்புவத்ச்சேத்தத்ராபி - 3**

**பயோம்புவத் :-** குழந்தைக்காக பால் சுரப்பதுபோல நீரானது தானே ஓடுவது போல, பிரதானம் தானே பிரவிருத்திக்கும்

**சேத் :-** என்று கூறினால்

**தத்ராபி :-** அங்கும், சேதனமே பிரவிருத்திக்கு காரணம், "யோ அப்ஸீ" (எவர்நீரிலிருந்து அதனை கட்டுப்படுத்துகிறாரோ) என்பதான ஷ்ருதிகள் கூறுகின்றது என்பதாலும், பிரதானம் ஜகத் காரணம் ஆவது இயலாது.

**வ்யதிரேகானவஸ்திதேஸ்சானபேக்ஷத்வாத் - 4**

**வ்யதிரேகானவஸ்திதே: :-** பிரதானத்திலிருந்து வேறுபட்ட கர்மம் முதலிய எதுவும் இல்லை

**ச :-** என்பதாலும்,

**அனபேக்ஷத்வாத் :-** பிரவிருத்தி ___ நிவிருத்திக்கு பற்றற்ற புருஷனின் எதிர்பார்பு ஏற்கப்படாததாலும் பிரதானம் ஜகத் காரணம் ஆதல் இயலாது

**அன்யத்ராபாவாச்ச ந த்ருணாதிவத் - 5**

**அன்யத்ராபாவாத் :-** மற்றஇடங்களில், புல் பாலாக ஆவது காணப்படாததால் (காளை மாடு முதலியதில்)

**ச :-** என்பதாலும், **ந :-** ஆகுதல் இயலாது

**த்ருணாதிவத் :-** புல் முதலியதைபோல பிரதானம் அபாவத்திலேயே மாற்றமடைவது. ஆதனால், பிரதானம் ஜகத் காரணம் ஆதல்இயலாது.

**அப்யுபகமேப்யர்தாபாவாத் - 6**

**அப்யுகமே :-** பிரதானம் இயல்பாக மாற்றமடையும் என்று

**அபி :-** ஏற்றாலும் கூட

**அர்தாபாவாத் :-** அந்த பிரவிருத்திக்கு எந்த பிரயோஜனமம் இல்லை என்பதாலும் பிரதானம் ஜகத்காரணம்ஆதல் இயலாது

**புருஷாஷ்மவதிதி சேத்ததாபி - 7**

**புருஷாஷ்மவத் :-** குருடர் ___ முடவர் போன்றோ காந்தம் - இரும்பு போன்றோ புருஷன் - பிரதான பிரவிருத்தி ஆகுதல்இயலும்

**இதி சேத் :-** என்று கூறினால்

**ததாபி :-** அப்படியும் மேற்கூறிய தோஷம் நீங்காது, அதாவது பிரதானம் ஜகத் காரணம் ஆதல் இயலாது.

**அங்கித்வானுபபத்தேஸ் ச - 8**

**அங்கித்வானுபபத்தே: :-** குணங்கள்ஒன்றிற்கொன்று அங்க ___ அங்கி பாவம் அடைதல் இயலாது

**ச :-** என்பதாலும்,பிரதானம் ஜகத் காரணம் ஆதல் இயலாது

**அன்யதானுமிதெள ச ஞஷக்தி வியோகாத் - 9**

**அன்யதா :-** வேறுவகையாக சார்பில்லாத குணங்களாக அல்லாமல் சார்ப்புடையதான குணங்கள் என்று

**அனுமிதெள :-** அனுமானம் செய்தால்

**ச :-** கூறப்பட்ட தோஷம் நீங்கும் என்றால்

**ஞ ஷக்திவியோகாத் :-** ஞ சக்தியானது பிரதானத்தில் இல்லை என்பதால், தன் சமநிலைதவருவது என்பது இயலாதுஎன்பதால், அங்க —— அங்கி பாவம் அடைதல் இயலாது என்பதால் பிரதானம்ஜகத் காரணம் ஆதல் இயலாது

**விப்ரதிஷேதாச்சாஸமஞ்ஜஸம் - 10**

**விப்ரதிஷேமதாத் :-** மஹத்திலிருந்து தன்மாத்திரை தோன்றுகிறது, என்றும் அஹங்காரத்திலிருந்து தோன்றுகிறது என்றும் விரோதமாக கூறுவதால்

**ச :-** என்பதாலும்

**அஸமஞ்ஜஸம் :-** சாங்கியர்கள் கூறுவது நியாயமற்றது (ஏற்புடையதில்லை)

**மஹத்தீர்கவத்வா ஹ்ரஸ்வபரிமண்டலாப்யாம் - 11**

**மஹத்தீர்கவத் :-** மஹத் மற்றும் தீர்கமானது தோன்றுவது

**வா :-** போலவோ

**ஹ்ரஸ்வபரிமண்டலாப்யாம் :-** ஹ்ரஸ மற்றும் பரிமண்டல அளவு உடைய திவியணுக் மற்றும் பரமாணுவிலிருந்து, அதுபோல ஜட ஜகத் சேதனமான பரமாத்மாவிலிருந்து தோன்றுவது இயலும்.

**உபயதாபி ந கர்மாதஸ்ததபாவ: - 12**

**உபயதாபி :-** இரண்டு வகையிலும்(அதிர்ஷ்டத்தை காரணமாக ஏற்றால் அது ஆத்மாவுடன்சம்பந்தப்படுமா அல்லது அணுவுடனா என்பதில்)

**ந கர்ம :-** கர்மமானது (சிருஷ்டிவிஷயமான) நடத்தல் இயலாது

**அத: :-** அதனால்

**ததபாவ: :-** பரமாணு மூலமாக திவியணுக் முதலியதாக சிருஷ்டியானது நடத்தல்இயலாது

**ஸமவாயாப்யுபகமாச்ச ஸாம்யாதனவஸ்திதே: - 13**

**ஸமவாயாப்யுபகமாத்** :- சமவாயத்தை ஏற்பதால் என்றால் அதாவது பரமாணுவிலிருந்து வேறுபட்ட திவியணுக் சமவாய சம்பந்தம் மூலமாக சேரும் என்றால்

**ச** :- சமவாயமும் சமாவாயியிடமிருந்து (சமவாயம் அடைந்ததிலிருந்து) வேறுபட்டதால் வேறு சமவாயத்துடன் அதன் சம்பந்தம் உண்டாகும்.

**ஸாம்யாத்** :- ஏனென்றால், முழுவதும் வேறுபட்டது என்பது இரண்டிலும் சமமானதால்

**அனவஸ்திதே:** :- இவ்வாறு, ஒவ்வொரு சமவாயமும் வேறு சமவாயம் மூலம் சம்பந்தம் அடையும் என்று ஆவதால் அனவஸ்திதா(அவனவஸ்தா) தோஷம் உண்டாகும்.

**நித்யமேவ ச பாவாத் - 14**

**நித்யமேவ** :- பரமாணு பிரவிருத்தி இயல்பானது என்று ஏற்றால் பிரவிருத்தி நித்தியமாக (நிரந்தரமாக) நடக்கும் என்பதால்

**ச** :- அதனால், நிவிருத்தி இயல்பானது என்று ஏற்றல், நிவிருத்தி மட்டும் நித்தியம்நடக்கும் என்பதால்

**பாவாத்** :- பிரளயமும், சிருஷ்டியும் முறையாக இல்லாது போகும், என்பதாலும் பரமாணு ஜகத் காரணம் ஆதல் இயலாது

**ரூபாதிமத்வாச்ச விபர்யயோ தர்ஷனாத் - 15**

**ரூபாதிமத்வாத்** :- பரமாணு ரூபம் முதலியது கூடியதாக (வைசேஷிகர்கள்) ஏற்பதால்

**ச** :- இங்கும் (இந்த சித்தாந்தத்திலும்)

**விபர்யய:** :- விரோதமான அதாவது, பரமாணு அணுத்தன்மையுடையது மற்றும் நித்தியமானது என்பதற்கு எதிரானாக ஆகும் (ஸ்தூலம் மற்றும் அநித்தியம் என்று)

**தர்ஷணாத்** :- இவ்வாறே, பானை முதலிய ரூபம் உடைய விஷயங்களில் காணப்படுவதால்

**உபயதா ச தோஷாத் -16**

**உபயதா** :- இரண்டு வகையிலும் பரமாணு வளர்ச்சியடைந்தால் அது அணுத்தன்மை அற்றதாக தேய்வடைந்தால் அது காரியமான பிருத்வீ முதலியதை செய்தல் இயலாது என்று

**ச** :- ஆவதாலும்

**தோஷாத்** :- தோஷமே உண்டாகும், என்பதாலும் பரமாணு ஜகத் காரணம் இருத்தல் இயலாது

**அபரிக்ரஹாச்சாத்யந்தமனபேக்ஷா - 17**

**அபரிக்ரஹாத்** :- மனு முதலிய சிஷ்டர்கள் பரமாணு சாரணமாக எந்த அளவிலும் ஏற்கவில்லை.

**ச** :- என்பதாலும் அத்யந்தம் :- முழுவதுமாக

**அனபேக்ஷா** :- நன்மையினை விரும்புபவர்கள் இதனை ஏற்றல் கூடாது

**ஸமுதாய உபயஹேதுகேபி ததப்ராப்தி: - 18**

**ஸமுதாயே** :- வெளி சமுதாயம் மற்றும் உள் சமுதாயத்தை

**உபஹேதயே** :- பரமாணு காரணமானதும் ஸ்கந்தம் காரணமானும்

**அபி :- என்று இரண்டுமே**

**ததப்ராப்தி:** :- உண்டாவது இயலாது, இரண்டும் (பரமாணு மற்றும் ஸ்கந்தம்) ஜடம் என்பதாலும், வேறு சைத்தன்யத்தை ஏற்பதில்லை என்பதாலும் சமுதாயம் தோன்றுதல் இயலாது.

**இதரேதரப்ரதயயத்வாதிதி சேன்நோத்பத்தி மாத்ர நிமித்தத்வாத் - 19**

**இதரேதரப்ரத்யயத்வாத்** :- அவித்தை முதலியதும், சமுதாயம் ஒன்றுக்கொன்று உதவுவதால் சமுதாயம் தோன்றும்.

**இதி சேத்** :- என்று கூறினால் **ந** :- தவறு

**உத்பத்திமாத்ரநிமித்தத்வாத் :-** அவித்தை முதலியவை உத்பத்தியில் மட்டும் காரணமாவதால்.

## உத்தரோத்பாதே ச பூர்வநிரோதாத் - 20

**உத்தரோத்பாதே :-** பின்வரும் காரியம் சிருஷ்டியாகும் நிலையில்

**ச :-** க்ஷணிகம் என்று ஏற்பதால்

**பூர்வநிரோதாத் :-** காரண க்ஷணமானது அழிவடையும் என்று ஏற்பதால், காரணம் இல்லாமல் காரியம் தோன்றுவது இயலாது

## அஸதி ப்ரதிஞோபரோதோயௌகபத்யமன்யதா - 21

**அஸதி :-** காரணமானது இல்லாமல் காரியம் தோன்றும் என்று கூறினால் (ஏற்றால்)

**பிரதிஞோபரோத: :-** நான்கு வகை காரணத்தால் சித்தம் மற்றும் சைத்யம் தோன்றும் என்ற பிரதிஞ்ஞா நிராகரிக்கப்பட்டதாகும்.

**யௌகபத்யம் :-** இரண்டும் காரணமும் காரியம் ஒரே நேரத்தில் இருக்கும் நிலை உண்டாகும்,

**அன்யதா :-** காரியம் தோன்றும் வரையில் காரணம் இருக்கும் என்று ஏற்றாலோ இதனால் க்ஷணிக வாதமும் நிலைகுலையும்.

## ப்ரதிஸங்க்யாஅப்ரதிஸங்க்யா நிரோதாப்ராப்தி: அவிச்சேதாத் - 22

**ப்ரதிஸங்க்யா அப்ரதிஸங்க்யா நிரோதாப்ராப்தி: :-** பிரதி ___பிரதிகூலம், ஸங்க்யா ___ புத்தி எண்ண அலையாக அடையப்படுவத அல்லது விஷயமாக அடையப்படுவதா. ஏண்ணஅலையான புத்தி அதன் விஷயம் இவைகளின்நாசம் இயலாது அதுபோலஇருத்தல் உடையது நாசம்அடைதல்இயலாது

**அவிச்சேதாத் :-** காரிய ___ காரணமாவதால் எண்ண அலை (புத்தி) அழிவது இயலாது, நினைகூறுவது இயலுவதால் விஷயமாக இருப்பதும் அழிதல் இயலாது

## உபயதா ச தோஷாத் - 23

**உபயதா :-** சரியான ஞானத்தின் மூலம் அவித்தை அழியும் என்றாலும் தானே அழியும்என்றாலும்

**ச :-** இரண்டு நிலைகளிலும்

**தோஷாத் :-** தோஷம் உடையதால் சரியானஅறிவால்என்றால், காரணம் இல்லாமல் அழியும் என்று ஏற்ற நிலை அழியும், தானே என்றால் உபதேசம் உபயோகமற்றது என்ற நிலை ஆகும்.

## ஆகாஷே சாவிசேஷாத் - 24

**ஆகாஷே :-** "ஆத்மா ஆகாஷ: ஸம்பூத:"(ஆத்மாவிலிருந்து ஆகாயம் தோன்றியது) என்ற ஷ்ருதியும், சப்தம் என்ற குணம் உடையது என்ற யுக்தியும்

**ச :-** இரண்டுமே, ஆகமம் மற்றும் அனுமானமும்

**அவிசேஷாத் :-** நிலம் (பிருத்வீ) முதலியதுபோல வஸ்துதன்மையினையே குறிக்கிறது வஸ்துவின்மை அல்ல.

## அனுஸ்ம்ருதேஸ் ச - 25

**அனுஸ்மிருதே: :-** அனுபவமான பின்னர் உண்டானதின் நினைகூறல்

**ச :-** இருப்பதாலும், அனுபவிப்பவரான ஆத்மா க்ஷணிகம் அல்ல.

## நாஸதோ அத்ருஷ்டத்வாத் - 26

**ந :-** ஆவதியலாது,

**அஸத: :-** அஸத்திலிருந்து, இன்மையிலிருந்து காரியம் தோன்றுவது என்பது

**அத்ருஷ்டத்வாத் :-** அதுபோல, இன்மையிலிருந்து (முயல்கொம்பு முதலியதிலிருந்து) காரியம் தோன்றுவது காணப்படவில்லை என்பதால்.

## உதாஸீனானாமபி சைவம் ஸித்தி: - 27

**உதாஸீனானாம் :-** உதாஸீனமாக இருப்பவர்கள் (அசட்டையாக இருப்பவர்கள்)

**அபி :-** அவர்களிலும்

**சைவம் - ச ஏவம் :-** இவ்வாறு ஏற்றால். இன்மையிலிருந்து தோற்றத்தை ஏற்றால்.

**ஸித்தி: :-** அவர்களின் (உதாஸீனர்களின்) காரியம் நடந்தேரும் நிலை உண்டாகும், எந்தவொரு முயர்ச்சியும் இன்றி

**<u>நாபாவ உபலப்தே: - 28</u>**

**ந :-** இருத்தல் இயலாது

**அபாவ: :-** விஞ்ஞானத்திற்கு (ஆலய விஞ்ஞானம்) வேறுபட்டதாக விஷயங்களின் இன்மை என்பது

**உபலப்தே: :-** ஏனென்றால். அதற்கு (விஞ்ஞானம்) வேறுபட்டதாக விஷயங்கள் இருத்தல் காணப்படுவதால்

**<u>வைதர்ம்யாச்ச ந ஸ்வப்னாதிவத் - 29</u>**

**வைதர்ம்யாத் :-** வேறுபட்டதாக (விரோதனமானதாக) அதாவது கனவு என்பது நிராகரிக்கப்படும் ஞானமாகவும், விழிப்பு என்பது நிராகரிக்கப்படாத ஞானமாகவும் இருப்பதால்.

**ச :-** என்பதாலும் ந :- கூறுவது இயலாது

**ஸ்வப்னாதிவத் :-** விழிப்பு நிலை ஞானமானது கனவு நிலை ஞானத்தைப் போன்றது என்று எந்த ஆதாரமும் (சார்பும்) அற்றது என்பது

**<u>ந பாவோ அனுபலப்தே: - 30</u>**

**ந :-** ஏற்பது இயலாது

**பாவ: :-** வாசனைகள் (விஷயத்தின் சம்ஸ்காரம்) இருத்தலை

**அனுபலப்தே: :-** வெளிவிஷயங்களின் இன்மை ஏற்பதால் (அதன் மூலம் உண்டாகும் வாசனைகள் தோன்றுவத இயலாது)

**<u>க்ஷணிகத்வாச்ச - 31</u>**

**க்ஷணிகத்வாத் :-** ஆலயவிஞ்ஞானமானது க்ஷணிகம் என்று ஏற்பதால் (சர்வர் க்ஷணிகம் - எல்லாம் க்ஷணிகம் என்பதால்)

**ச :-** அதுவும் வாசனைகளுக்கு ஆதாரமாக இருத்தல் இயலாது

**ஸர்வதானுபபத்தேஸ்ச - 32**

**ஸர்வதா :-** எல்லா நிலைகளிலும் (எப்பொழுதும்)

**அனுபபத்தே: :-** நியாயமற்றது, தவறானது

**ச :-** என்பதாலும், முமுக்ஷுக்கள் பௌத்த மதத்தினை ஏற்பது கூடாது

**நைகஸ்மின்னஸம்பவாத் -33**

**ந :-** அவ்வாறு ஏற்பது இயலாது.

**ஏகஸ்மின் :-** ஒரே விஷயத்தில் பவதர்மங்கள் ஏற்பது

**அஸம்பவாத் :-** அவ்வாறு இருத்தல் இயலாது என்பதால்.

**ஏவம் சாத்மா கார்த்ஸ்ன்யம் - 34**

**ஏவம் :-** இப்படியாக

**ச :-** இந்த ஜைன சித்தாந்தத்தில்

**ஆத்மா :-** ஆத்மாவானது

**அகார்த்ஸ்ன்யம் :-** முழுமையற்றதாக அதாவது வரையறுக்கப்பட்டது என்ற தோஷத்தை அடைகிறது. அதனால் பானை முதலியவை போல ஆத்மாவும் அநித்தியம் ஆகின்றது என்பதால் பந்தம் மற்றும் மோக்ஷம் இயலும்

**ந ச பர்யாயாதப்யவிரோதோ விகாராதிப்ய: - 35**

**ந :-** இல்லை

**ச :-** எனபதும் இயலாது

**பர்யாயாதபி :-** முறையாக இருந்தாலும், அவயவங்கள் வளர்வது மற்றும் தேய்வது என்பது

**அவிரோத:** :- உடல் அளவு ஆத்மாவானதில் எந்த விரோதமும் இல்லை என்பது

**விகாராதிப்ய:** :- அவயவம் உடையது என்பதால் ஆத்மா மாற்றம் அடைவது என்பது முதலான தோஷம் அடையும், இதனால் ஆத்மா அநித்தியம் ஆவதால் பந்தம் மற்றும் மோக்ஷம் இயலாது.

## அன்த்யாவஸ்திதேஸசோபயநித்யத்வாதவிசேஷ: - 36

**அன்த்யவாஸ்திதே:** :- அன்த்யமான மோக்ஷநிலையில் ஜீவ பரிமாணமானது நித்தியம் என்பதால்

**ச** :- அதுமட்டுமல்லாமல்

**உபயநித்யத்வாத்** :- முதல் மற்றும் நடு (ஆதி மற்றும் மத்யமம்) நிலையிலும் அவ்வாறே இருப்பதாலும்

**அவிஷே:** :- மூன்று நிலையிலும், ஆத்மா சமான நிலையில் இருப்பதாலும் இந்த ஜைன சித்தாந்தமும் முமூக்ஷுக்கள் கைவிடவேண்டிய ஒன்றே

## பத்யுரஸாமஞ்ஜஸம் - 37

**பத்யு:** :- பதியான ஈஷ்வரன் பிரதானம் முதலிய உபாதானகாரணத்திற்கு தூண்டுதலாக இருப்பதால் நிமித்த காரணமாக இருத்தல் இயலாது

**அஸாமஞ்ஜஸம்** :- விசேஷ புருஷன் ஈஷ்வரன் என்று ஏற்பதால் புருஷனை உதாசீனர் என்று ஏற்பதாலும், அவ்வாறு பிரவிருத்தியில் ஈடுபடுவதாக ஏற்றாலும் விருப்பு ___ வெறுப்பு முதலியவர் கூடியவர் ஆவார் என்பதால் ஏற்புடையதல்ல

## ஸம்பந்தானுபபத்தேஸ் ச - 38

**ஸமபந்தானுபபத்தே:** :- உதாசீனர் என்பதால் ஈஷ்வரனுக்கு பிரதானத்தோடு எந்த விதமான சம்பந்தமும் இருத்தல் இயலாது (சம்யோகம் முதலான சம்பந்தங்கள்)

**ச** :- அதனாலும், ஈஷ்வரன் காரணமாதல் இயலாது (தடஸ்த ஈஷ்வரன் - சம்பந்தமற்ற ஈஷ்வரன்)

## அதிஷ்டானனுபபத்தேஸ் ச - 39

**அதிஷ்டானானுபபத்தே:** :- குயவன் களிமண்ணை அதிஷ்டானமாக கொண்டு பானை பிடிப்பதுபோல, தடஸ்தரான ஈஷ்வரன் பிரத்யஷ மற்றும் ரூபமற்றதுமான பிரகிருதியினை (பிரதானத்தை) அதிஷ்டானமாக கொண்டு செயல்பட இயலாது.

**ச** :- அதனாலும் அவர் நிமித்த காரணமாவது இயலாது

**<u>கரணவச்சேன்ந போகாதிப்ய: - 40</u>**

**கரணவத்** :- இந்திரியங்களை (புலன்களை) போலஎன்றால், அவை பிரத்யக்ஷமாக இல்லாதபோதிலும் ஜீவனால் தூண்டப்பட்டு செயல்படுவதுபோல

**சேத்** :- என்று கூறினால் **ந** :- தவறு

**போகாதிப்ய:** :- ஈஷ்வரனால் அவ்வாறு பிரத்யக்ஷமாக இல்லாத பிரதானம் தூண்டப்படுமானால், ஈஷ்வரனும் ஜீவனைப்போன்று போகம் முதலியதில் ஈடுபடும் தோஷம் உண்டாகும்

**<u>அன்தவத்வஸர்வஞ்ஞதா வா - 41</u>**

**அன்தவத்வம்** :- ஈஷ்வரனிலும் வரையறுக்கப்பட்டதான எண்ணிக்கை அல்லது அளவு ஏற்பதால் அவரும் பானை முதலியது போல அழிவு உடையவர் ஆவார் அல்லது

**அஸர்வஞ்ஞதா** :- அவர் எல்லாம் உணர்ந்தவர் என்று ஆவதில்லை

**வா** :- ஈஷ்வரன் பிரதானம், ஜீவன் மற்றும் தன்னுடைய எண்ணிக்கை அல்லது அளவினை தீர்மாணம் செய்பவர் என்று ஏற்றால் அல்லது ஏற்காவிட்டால்

**<u>உத்பத்யஸம்பவாத் - 42</u>**

**உத்பத்தி** :- வாசுதேவனிலிருந்து சங்கர்ஷனர். என்ற ஜீவன் அவரிலிருந்து பிரத்யும்னன் என்ற மனது, அவரிலிருந்து அனித்தன் என்ற அகங்காரம் தோன்றுவது

**அஸம்பவாத்** :- இயலாது என்பதால் பாஞ்சராத்திர சித்தாந்தமான பாகவத சித்தாந்தம் தவறானது

**<u>ந ச கர்து கரணம் - 43</u>**

**ந :-** தோன்றுவது இயலாது

**ச :-** என்தாலும். புாகவதம மதம் தவறானது

**கஸ்து: :-** அதாவது, கர்த்தாவிலிருந்து தேவதத்தன் முதலியவரிலிருந்து

**கரணம் :-** கருவியானது கோடாலி முதலியவை தோன்றுவது காணப்படுவதில்லை அப்படிப்பட்ட ஷ்ருதியும் இல்லை.

## விஞ்ஞானாதிபாவே வா ததப்ரதிஷேத: - 44

**விஞ்ஞானாதிபாவே வா :-** சங்கர்ஷனம் முதலியவர் வாசுதேவனைப் போன்ற விஞ்ஞானம் (அறிவு) படைத்தவர் அல்லது உருவம் படைத்தவர் என்று ஏற்றாலும்

**தத் :-** உத்பத்த (ஜீவனின்) இயலாதுஎன்பது

**அப்ரதிஷேத: :-** நிராகரிப்பது இயலாது.

## விப்ரதிஷேதாச்ச - 45

**விப்ரதிஷேதாத் :-** விரோதமான நிலைகள் ஏற்தாலும் "ஏகஸயாபி தந்தராக்ஷரஸ்ய அத்யேதா சதுர்வேதிப்யோஅதிக:" (பாஞ்சரத்திர தந்திரத்தில் ஒரு சிறிய விஷயம் அறிந்தவரானாலும் அவர் சதுர்வேதிகளுக்கும்மேலானவர்) என்று வேத நிந்தையானது காணப்படுவதாலும்

**ச :-** பாகவத மதம் ஏற்புடையதல்ல.

# இரண்டாம் அத்தியாயம் - மூன்றாம் பாதம்

## ந வியதஷ்ருதே: - 1

**ந :-** உத்பத்தி (தோற்றம்) ஏற்பதியலாது

**வியத் :-** ஆகாயத்தின்

**அஷ்ருதே: :-** அவ்வாறு அதனை நிரூபிக்கும் ஷ்ருதியானது காணப்படவில்லை என்பதால்

**அஸ்தி து - 2**

**அஸ்தி :-** சாந்தோகியத்தில் இல்லாது போனாலும் அதன் உத்பத்தி தைத்திரியத்தில் காணப்படகிறது

**து :-** என்றாலும், சாந்தோக்கியத்தில் நெருப்பு (தேஜம்) முதலில் தோன்றியதாகவும், தைத்திரீயத்தில் ஆகாயம் முதலில் தோன்றியதாகவும் கூறப்பட்டுள்ளதால் இரண்டுமே முதலில் தோன்றியதாக இருத்தல் இயலாது என்பதாலும் அதன் தோற்றத்தை ஏற்பது இயலாது

**கௌண்யஸம்பவாத் - 3**

**கௌணி :-** ஆகாயம் தோன்றியது என்று கூறும் "ஆத்மா: ஆகாஷ: ஸம்பூத:" (ஆத்மாவிலிருந்து ஆகாயம் தோன்றியது) என்ற ஷ்ருதி கௌணமானது (முக்கியமற்றது)

**அஸம்பவாத் :-** அது தோன்றுதல் இயலாது என்பதல்ல, அதாவது ஸமவாயி, அஸமவாயி மற்றும் நிமித்த காரணம் இல்லாததாலும் அது வியாபித்திருப்பதால் நித்தியம் என்றும் ஆவதால்

**ஷப்தாச்ச - 4**

**ஷப்தாத் :-** "வாயுஸ்சாந்தரிக்ஷம் சைதத்ம்ரும்" (வாயுவும் ஆகாயமும் அழிவற்றது) என்றும், "ஆகாஷ ஆத்மா" (ஆகாயம் ஆத்மா) என்பதா உதாரண ஷ்ருதியும் காணப்படுவதாம்

**ச :-** ஆகாயத்திற்கு உத்பத்தி இயலாது

**ஸ்யாச்சைகஸ்ய ப்ரஹ்மஷப்தவத் - 5**

**ஸ்யாத் :-** ஆவது இயலும்

**ச :-** முக்கியமற்றதாகவும் முக்கியமானதாகவும்

**ஏகஸ்ய :-** ஒரே பிரகரணத்தில் இருக்கும் "ஆத்மன: ஆகாஷ: ஸம்பூத:" (ஆத்மாவிலிருந்துஆகாயம் தோன்றியது) என்பதில் ஆகாயத்தில் முக்கியமற்றதாகவும் அதற்கு பின்னர் கூறப்பட்ட நெருப்பில் தோற்றம் முக்கியமானதும் என்று ஏற்பது.

**ப்ரம்மஷ்பதவத் :-** ஒரே பிரகரணத்தில் "அன்னம் ப்ரம்ம" (அன்னம் பிரம்மம்) என்ற இடங்களில் முக்கியமற்றதாகவும்."ஆனந்தம் பிரம்ம" (ஆனந்தம் பிரம்மம்) என்ற இடத்தில் பிரம்மத்தை குறிப்பதாகவும் ஏற்பது போல.

**ப்ரதிஞ்ஞா அஹானிரவ்யதிரேகாத் ஷப்தேப்ய: - 6**

**பிரதிஞ்ஞா :-** "ஒன்றை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகின்றது" என்கிற பிரதிஞ்ஞை (சூளுரை)

**அஹானி :-** நிராகரிக்கப்பட்டடதாகாது

**அவ்யதிரேகாத் :-** அந்த பரமாத்மாவிலிருந்து இங்கு இந்த ஜகத்தானது வேறுபடாது இருப்பதால்.

**ஷப்தேப்ய: :-** "சதேவ ஸோம்ய" (சத் மட்டுமே மென்மையானவனே சிருஷ்டிக்கு முன்னாள் இருந்தது) "ஐததாத்மியமிதம்" (இதன் சுவரூபமே இவை எல்லாம்) என்பதான ஷ்ருதிகள் காரணமானது காரியத்திலிருந்து வேறுபடாத நிலையினை கூறுவதால்

**யாவத்விகாரம் து விபாகோ லோகவத் - 7**

**யாவத் :-** எத்துனை வகைப்பட்டதான

**விபாகம் :-** மாற்றங்கள், பானை, தட்டு முதலியதாக உள்ளதோ

**து :-** நிச்சயமாக, ஆகாயத்தின் சிருஷ்டியினை கூறும் ஷ்ருதி கௌணமானது அல்ல

**விபாகோ :-** வேறுபட்டதாக காணப்படும் காரியங்கள் எனப்படுகிறது

**லோகவத் :-** இவ்வாறு உலகத்தில் காணப்படுவது போல, ஆகாயமும் வேறுபட்டதாக இருப்பதால் அதுவும் காரியமே ஆகம்.

**ஏதேன மாதரிஷ்வா வ்யாக்யாத: - 8**

**ஏதேன :-** ஆகாயம் தோற்றமடைந்து என்று நிரூபித்ததின் மூலம்

**மாதரிஷ்வா :-** வாயுவும், ஆகாயத்தினை உபாதியாக உள்ள பரமாத்மாவிலிருந்து தோன்றியது

**வ்யாக்யாத: :-** என்பது விளக்கப்பட்டதாகிறது.

## அஸம்பவஸ்து ஸதோ அனுபபத்தே: - 9

**அஸம்பவ: :-** இயலாது

**து :-** நிச்சயமாக, சந்தேகமில்லாமல்

**ஸத: :-** சத் சுவரூபமான பரமாத்மாவின் உத்பத்தியினை ஏற்பது

**அனுபபத்தே: :-** சத்திலிருந்து சத் தோன்றுவது இயலாது அதனில் எந்த வேறுபாடும் இல்லாததால் காரிய ___ காரண தன்மையானது இருத்தல் இயலாது என்பதால்

## தேஜோ அதஸ்ததா ஹ்யாஹ - 10

**தேஜ: :-** நெருப்பானது

**அத: :-** அதனால், காற்றிலிருந்து தோன்றுகிறது

**ததா :-** அப்படிப்பட்டதாக

**ஹி :-** நிச்சயமாக,

**ஆஹ :-** "வாயோரக்னி" (காற்றிலிருந்து நெருப்பு) என்பதா ஷ்ருதியும் கூறுகின்றது.-

## ஆப: - 11

**ஆப: :-** அதனால் நீரானது நெருப்பிலிருந்து தோன்றுகின்றது, அப்படிப்பட்டதாகவே நிச்சயமாக, "அன்னேராப:" (நெருப்பிலிருந்து நீர்) என்பதான ஷ்ருதியும் கூறுகின்றது

## ப்ருதிவ்யதிகாரரூபஷப்தாந்தரேப்ய: - 12

**ப்ருதிவீ :-** நிலமே இங்கு அன்னம் என்று கூறப்பட்டது, "தா அன்னமஸ்ருஜத" (அது அன்னத்தை சிருஷ்டித்தது) என்பதான ஷ்ருதியில், உணவு அல்ல

**அதிகாரரூபஷப்தாந்தரேப்ய: :-** "தத்தேஜோ அஸ்ருஜத" ( அது நெருப்பினை சிருஷ்டித்தது) என்று மகாபூதங்களின் சிருஷ்டியினை கூறும் அதிகாரம் (பிரகரணம்,

தலைப்பு) என்பதால், "யத் க்ருஷ்ணம் ததன்னம்" (எது கருப்போ அது அன்னம்) என்று நிலத்தினை குறபிப்பதான கருக்பு நிறம் கூறப்பட்டதாலும், "அத்ப்ய: பிருத்வீ" (நீரிலிருந்து நிலம்) என்பதா வேறு ஷ்ருதியினாலும் நிரூபணமாகின்றது.

__தத‌பித்யானாதேவ து தல்லிங்காத் ஸ: - 13__

**ததபித்யானாத் :-** அந்தந்த விஷயத்தினை குறித்த ஈக்ஷணம் (பார்த்தல், சந்தித்தல்) மூலமாக அதன் அதிஷ்டாதா காரியத்தினை தோற்றுவிக்கின்றன என்பதால்

**ஏவ :-** அப்படிப்பட்டதாகவே

**து :-** சந்தேகமில்லாமல்

**தல்லிங்காத் :-** "ய: ப்ருத்வ்யாம் திஷ்டன்" (எவர் நிலத்தில் ஊடுருவியிருந்து இதனை (அந்தர்யாமியாக) நியமனம் செய்கின்றாரோ) என்பதான ஷ்ருதியன் மூலம் பரமாத்மா அந்தர்யாமியாக இருந்து எல்லாவற்றையும் நியமன் செய்கிறார் என்ற லிங்கம் (குறி —— அடையாளம்) இருப்பதால்

**ஸ: :-** அந்த பரமாத்மாவே அதிஷ்டானித்து பூதங்களில் சிருஷ்டியினை செய்கின்றார், பூதங்கள் தாமாக சிருஷ்டி செய்வது அல்ல.

__விபர்யயேண து க்ரமோத உபபத்யதே ச - 14__

**விபர்யயேண :-** விபரீதமாக, எதிரானதாக

**து :-** நிச்சயம்

**கிரம: :-** கிரமமானது

**அத: :-** ஆகின்றது, பிரளய கிரமமானது

**உபபத்யதே :-** காரியம் காரணத்தில் லயம் அடைவதாகவே காணப்படுகின்றது, காரணம் லயமடைந்த பின்னர் காரியம் இருத்தல் இயலாது

**ச :-** என்று காணப்படுவதாலும்

__அந்தரா விஞ்ஞானமனஸீ க்ரமேண தல்லிங்காதிதி சேன்னாவிசேஷாத் - 15__

**அந்தரா :-** ஆத்மா மற்றும் பூத சிருஷ்டிக்கு இடையில்

**விஞ்ஞானமனஸீ :-** புத்தியும் மனதும்

**க்ரமேண :-** முறையாக தோன்றுகின்றது என்று

**தல்லிங்காத் :-** "ஏதஸ்மாத் ஜாயதே ப்ராண:" (இதனிலிருந்து (பரமாத்மாவிலிருந்து) தோன்றுகிறது பிராணன், மனது மற்றும் இந்திரியங்கள்) என்று ஷ்ருதியானது காணப்படுவதால், முன்பு கூறப்பட்ட "ஆத்மா: ஆகாஷ:" (ஆத்மாவிலிருந்து ஆகாயம்) என்ற கிரமத்திற்கு விரோதம் உண்டாகின்றது.

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** அது தவறு

**அவிசேஷாத் :-** புத்தி முதலியவை பௌதிகமானதால் (பூதங்களிலிருந்து தோன்றுவது) பூதங்களின் சிருஷ்டியானது கூறிய ஷ்ருதியானதில் எந்த மாற்றமும் இல்லை. அதுமடடுமல்லாமல், இங்கு கூறப்பட்ட ஷ்ருதியானதும் சிருஷ்டி கிரமத்தினை போதிப்பதாகவும் இல்லாது என்பதால்எந்த விரோதமும் இல்லை.

**சராசரவ்யபாஷ்ரயஸ்து ஸ்யாத்தத்வ்யபதேஷோ பாக்தஸ்தத்பாவபாவித்வாத் - 16**

**சராசரவ்யபாஷ்ரய: :-** சரம் (ஜங்கமம்) அசரம் (தாவரம்) என்பதான உடலினை முக்கியமாக குறிப்பது

**து :-** என்பதால் ஜீவன் நித்தியம் என்ற சாஸ்திரத்தில் எந்த விரோதமும் இல்லை

**ஸ்யாத் :-** என்றாகிறது

**தத்வ்யபதேஷ: :-** பிறப்பிறப்பு குறித்த வியவகாரமானது

**பாக்த: :-** ஜீவனை முக்கியமாக குறிப்பதாக இல்லாததால்

**தத்பாவபாவித்வாத் :-** ஏனென்றால், உடலினையே அந்த வியவகாரமானது சார்ந்ததாக நேர்மடை மற்றும் எதிர்மடையாக அறியப்படுவதால், உடல் தோன்றினாலே ஜாத கர்மம் முதலிய சாஸ்திர கர்மங்கள் இயலும் என்பதல்ல

**நாத்மாஷ்ருதேர் நித்யத்வாச்ச தாப்ய: - 17**

**ந :-** உத்பத்தி அடைவது இல்லை

**ஆதமா :-** ஜீவனது

**அஷ்ருதே: :-** அதன் (ஜீவன்) உத்பத்தியினை குறிக்கும் ஷ்ருதியும் இல்லாததால்

**நித்யத்வாத் :-** நித்தியம் என்பதால்

**ச :-** கூட

**தாப்ய: :-** "ஸ வா ஏஷமஹானஜ ஆத்மா" (இந்த மஹானான பிறப்பற்ற ஆத்மாவானது), "அஜோ நித்ய" (பிறப்பற்றது நித்தியம்) முதலான ஷ்ருதிகளாலும்

**ஞோத ஏவ - 18**

**ஞ: :-** சைத்தன்ய சுவரூபம்

**அத ஏவ :-** அதனால் தான் நிச்சயமாக ஜீவன் உத்பத்தி ஆவது இயலாது

**உத்க்ராந்திகத்யாகதீனாம் - 19**

**உத்கிராந்தி :-** "அஸ்மாத் ஷரீராத் உத்கிராமதி" (இந்த உடலிலிருந்து மேலெழும்புகிறது, வெளியேறுகிறது)

**கதி :-** "சந்த்ரமஸமேவ தே ஸர்வே கச்சந்தி" (சந்திரலோகத்தினையே அவர்கள் எல்லோரும் செல்கின்றனர் அடைகின்றனர்)

**ஆகதீனம் :-** மற்றும் "தஸ்மால்லோகாத்புனரேதி" (அந்த உலகத்திலிருந்து மீண்டும் இந்த கர்மலோகத்திற்கு வருகின்றனர்) என்பதான ஷ்ருதிகளால் ஜீவன் அணு என்று ஆவதால், ஜீவன் மஹான் (பெரியது) சர்வவியாபி (எல்லா இடத்திலும் வியாபித்திருப்பது) முதலான ஷ்ருதிகளுடன் விரோதம் உண்டாகின்றது.

**ஸ்வாத்மனா சோத்தரயோ: - 20**

**ஸ்வாத்மனா :-** ஜீவன் தானே கர்த்தாவுடன் சம்பந்தப்படுவதால்

**ச :-** ஆத்மா அணு என்பது நிரூபணமாகிறது

**உத்தரயோ: :-** உத்கிராந்தி (மேலெழும்பல்), கதி (செல்லுதல்) ஆகதி (திரும்பி வருதல்) ஆகியவற்றோடு உள்ள சம்பந்தத்தால்

**நாணுரதச்ஷ்ருதேரிதி சேன்நேதராதிகாராத் - 21**

**ந :-** ஜீவன் ஆவதில்லை

**அணு: :-** அணு அளவினனாக

**அதச்ஷ்ருதே: :-** அவ்வாறு அல்லாததாக (சர்வவியாபி) முதலியதாக கூறும் ஷ்ருதி காணப்படுவதால்

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** தவறு

**இதராதிகாராத் :-** அவை வேறு ___ பரமாத்மாவினை குறிப்பதான அதிகாரத்தில் (தலைப்பில்) உ்ளளதானதால்.

<u>**ஸ்வஷப்தோன்மானாப்யாம் ச - 22**</u>

<u>**ஸ்வஷப்தோன்மானாப்யாம்**</u>

**ஸ்வஷப்த :-** "ஏஷோ அணுராத்மா" (இந்த ஆத்மாவானது அணு அளவினதானது) என்ற ஷ்ருதி வாக்கியத்தாலும்

**உன்மானாப்யாம் :-** "பாலாக்ரஷதபாகஸ்ய" (முடியின் நூறில் ஒரு பகுதியினை நூறாக பிளந்தால் உண்டாகும் அளவு ஆத்மாவினுடையது) என்ற ஷ்ருதியின் மூலம் ஆத்மா சூக்குமமானது என்று கூறப்பட்டதாலும்

**ச :-** ஜீவன் (ஆத்மா) அணு அளவினது என்று ஆகிறது.

<u>**அவிரோதஸ்சந்தனவத் - 23**</u>

**அவிரோத: :-** எந்த விரோதமும் இல்லை

**சந்தனவத் :-** உடலின் ஒரு பகுதியில் வைக்கப்பட்ட சந்தனம் உடல் முழுவதிலும் குளிர்சியினை தருவதுபோல ஜீவன் அணு அளவினனாக இருந்தாலும் உடலினை வியாபித்திருக்கும் அனுபவங்களை அடைவது இயலும்.

<u>**அவஸ்திதிவைசேஷ்யாதிதி சேன்நாப்யுபகமாத் ஹ்ருதி ஹி - 24**</u>

**அவஸ்திதிவைசேஷ்யாத் :-** பிரதயக்ஷமாக சந்தனம் உடலின் ஒரு பாகத்தில் இருத்தல் அறியப்படுவதாலும், அவ்வாறு ஜீவனின் இருத்தல் அறியப்படாததாலும் உதாரணம் - உதாரிக்கப்பட்டதில் வைசேஷ்யம் (விரோதம்) உள்ளது

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** தவறு

**அப்யுபகமாத் :-** ஷ்ருதியில் அணு அளவினதாக ஜீவன் ஏற்கப்பட்டதால்

<u>**ஹ்ருதி**</u> **:-** "ஹ்ருத்யந்தர்ஜோதி" (இதயத்திலுள்ள ஜோதி) என்பதான ஷ்ருதியில் இதயத்திலுள்ளே இருப்பதாக

**ஹி :-** நிச்சயிக்கப்பட்டதாலும், விரோதம் நிச்சயம் இல்லை

<u>**குணாத்வா லோகவத் - 25**</u>

**குணாத் :-** தீபமானது வீட்டின் ஒரு மூளையில் (ஓரத்தில்) இருந்தாலும் அதன் குணமான வெளிச்சம் வீட்டினில் வியாபிப்பது என்பது

**வா :-** போலவோ

**லோகவத் :-** இப்படி உலகத்தில் காணப்படுவது போல, ஆத்மா (ஜீவன்) அணு அளவான போதும் அதன் குணமான சைத்தன்யமானது வியாபித்திருப்பதால் உடலில் உண்டாகும் அனுபவத்தை அனுபவிக்கும்

<u>**வ்யதிரேகோ கந்தவத் - 26**</u>

**வ்யதிரேகோ: :-** வேறுபட்டதாக இருத்தல் இயலும்

**கந்தவத் :-** வாசனையினைப்போல, வாசைன குணமானபோதும் குணியான திரவியத்திலிருந்து வேறுபட்டதாக அறியப்படுவபோல, ஆத்மாவின் குணமும் (சைத்தன்யமும் இருததல் இயலும்)

<u>**ததா ச தர்ஷயதி - 27**</u>

**ததா :-** ஆத்மாவின் ஞானமானது உடல் முழுவதையும் வியாபித்திருப்பதை

**ச :-** "ஆ லோமப்ய ஆ நகாக்ரேப்ய" (உச்சந்தலை முடி முதல் உள்ளங்கள் நகம் வரை) என்பதான ஷ்ருதியும்

**தர்ஷயதி :-** இதனையே கூறுவதாலும்

<u>**ப்ருதகுபதேஷாத் - 28**</u>

**ப்ருதக் :-** ஆத்மா மற்றும் ஞானமானது

**கர்தா :-** கரணம் (செய்பவர் ___கருவி9 என்று வேறுபட்டதாக

**உபதேஷாத் :-** "ப்ரஞ்யா ஷரீரம் ஸமாருஹ்ய" (ஞானம் மூலம் உடலில் நன்றாக நிலைப்பட்டு) என்று ஷ்ருதியானது உபதேசிப்பதால், ஜீவன் குணம்மூலம் உடல்முழுவதும் வியாபித்திருப்பது இயலும்

**<u>தத்குணஸாரத்வாத்து தத்வ்யபதேஷ: ப்ராஞுவத் - 29</u>**

**தத்குணஸாத்வாத் :-** புத்தி மற்றும் ஆத்மாவின் தாதாத்மியத்தால் (பிரிக்க முடியாத சம்பந்தத்தால், தர்ம அத்யாசத்தால்) ஜீவனில் புத்தியின் அணுத்தன்மை போக்கு —— வரவு, இன்ப —— துன்பம் முதலியவை காணப்படுகிறது

**து :-** ஜீவனில் அவையில்லை

**துத்வ்யபதேஷ: :-** அதனால் அணுத்தன்மை கூறப்படுகின்றது, இயல்பாக இல்லை (சுவரூபத்தில் இல்லை)

**ப்ராஞுவத் :-** பரமாத்மாவில் சகுண உபாசனைக்கா தஹர முதலிய உபாதிகளால் அணுத்தன்மை கூறப்படுவதுபோல.

**<u>யாவதர்த்மபாவித்வாச்ச ந தோஷஸ்தத்தர்ஷனதாத் -30</u>**

**யாவதாத்மபாவித்வாத் :-** புத்தியுடன் ஆத்மாவின் சம்பந்தம் ஆத்ம ஞானத்தால் சம்சாரம் நீங்காத வரையில் இருப்பது

**ச :-** என்பதாலும்

**ந தோஷ: :-** இங்கு எந்த தோஷமும் இல்லை

**தத்தர்ஷனாத் :-** உடலிலிருந்து பிரிந்த நிலையிலும் ஆத்ம - புத்தி சேர்க்கை காணப்படுவதால், "ஸமான: ஸன்னுபௌ லோகாவனுஸஞ்சரதி" (புத்தி சமானமாக (ஒன்றாக) இருந்து இரண்டு உலகத்தினிலும் சஞ்சரக்கின்றது) என்ற ஷ்ருதியிலும் காணப்படுவதால்.

**<u>பும்ஸ்த்வாதிவத்வஸ்ய ஸதோபிவ்யக்தியோகாத் -31</u>**

**பும்ஸ்த்வாதிவத் :-** குழைந்தை பருவத்தில் ஆணாக இந்தாலும் யௌவனத்தில் ஆண்மை வளர்ச்சி காணப்படுவதுபோல

**அஸ்ய :-** இந்த புத்தி ——ஆத்மாவின் சேர்க்கை

**ஸத: :- சூக்கும நிலையில் இருப்பதாக இருந்து**

**அபிவ்யக்தியோகாத் :-** விழிப்பு நிலையில் வெளிப்படுகின்றது. அதனால், ஆத்மாஞானம் உண்டாகும் வரையில் புத்தியுடன் சம்பந்தமானது இருக்கும் என்பது நிரூபணமாகின்றது.

## நித்யோபலப்த்யனுபலப்திப்ரஸங்கோ அன்யதரநியமோவான்யதா - 32

**நித்யோபலப்த்யனுபலப்திப்ரஸங்க: :-** ஆத்மாவானது இந்திரியம் முதலிய சாதனங்கள்இருக்கும்போது நித்தியமாக அடையப்படுவதாகவும், அந்த சாதனங்கள் இருந்தும் இன்மையினை (அந்தக்கரணத்தின்) நித்தியமான அடையப்படாததாகவும் ஆகும்நிலையோ

**அன்யதரநியம: :-** ஆத்மா - இந்திரியத்தின்தடையினை ஏற்க வேண்டும், ஆனால் அது இயலாது, ஆத்மா அவிகிரியம்(செயலற்றது) என்பதால், இந்திரியங்களின் சக்தியும் யதேச்சையாக தடைபடும் என்றும் ஏற்றல் இயலாது

**வா :-** என்பதாலோ

**அன்யதா :-** அந்தக்கரணத்தின் இருத்தலை ஏற்கவில்லை என்றால் உண்டாகும் என்பதால்,அந்தக்கரணத்தின் இருத்தலை ஏற்றல் அவசியம்

## கர்த்தா ஷாஸ்த்ரார்தவத்வாத் - 33

**கர்த்தா :-** ஆத்மாவே (ஜீவன்) கர்த்தா (செய்பவர்) புத்தி அல்ல

**ஷாஸ்த்ரார்தவத்வாத் :-** அப்பொழுதே சாஸ்திரத்தின் விதி ___ நிஷேதம் பிரயோஜனமுடையது ஆகும். "யஜேத" (யாகம் செய்யவும்), "தத்யாத்" (தானம் செய்யவும்) முதலிய சாஸ்திரங்கள்

## விஹாரோபதேஷாத் - 34

**விஹாரோபதேஷாத் :-** ஜீவனே கர்த்தா புத்தி இல்லை, அதன் (ஜீவனின்) கனவு நிலையில் செல்லுதல் கூறப்பட்டதால், "ஸ்வே ஷரீரே யதா காமம் பரிவர்த்தே" (தன்னுடைய உடலில் தன்னிஷ்டம்போல செயல்படுகிறது) என்பதான ஷ்ருதியில்

## உபாதானாத் - 35

**உபாதானாத் :-** ஜீவனே கர்த்தா புத்தி இல்லை, "ப்ராணான் க்ருஹீத்வா" (பிராணனை கிரகனம் செய்து) என்பதான ஷ்ருதியில் ஜீவன் மூலம்இந்திரியத்தின் கிரகணம் கூறப்பட்டுள்ளதால்.

## வ்யபதேஷாச்ச க்ரியாயாம் ந சேன்நிர்தேஷவிபர்யய: - 36

**வ்யபதேஷாத் :-** "விஞ்ஞானம் யஞும் தனுதே" (விஞ்ஞானமானது யஞ்ஞத்தை புரிகின்றது) என்பதான ஷ்ருதியில் விஞ்ஞானம் என்ற சொல் மூலம் ஜீவன் குறிப்பிடப்பட்டதால்

**ச :-** என்பதாலும்

க்ரியாயாம் :- லௌகிகமான செயல்களுக்கு அவரே கர்த்தா (செய்பவர்) என்று கூறப்பட்டதாலும்

**நசேத் :-** அவ்வாறு ஏற்காமல், விஞ்ஞானம் என்பது புத்தியினை குறிப்பதாக ஏற்றால்

**நிர்தேஷ விபர்யய: :-** புத்தி என்பது கருவி என்பதால் "விஞ்ஞானேன" என்று மூன்றாம்வேற்றுமை உண்டாகும்.

## உபலப்திவதனியம: - 37

**உபலப்திவத் :-** ஒரு விஷயத்தை கிரகணம் செய்யும்போது தான் சதுந்திரமானவனாக இருந்தாலும் இஷ்டமானதினையும் இஷ்டமில்லாததினையும் கிரகணம்செய்வதுபோல,

**அனியம: :-** அவ்வாறே இஷ்டமான, இஷ்டமில்லாத விஷயத்தை கிரகின்றான்

## ஷக்திவிபர்யயாத் - 38

**ஷக்திவிபர்யயாத் :-** புத்தியினை கர்த்தாவாக ஏற்றால் அதன் கரண (கருவி) சக்தியில் விரோதம் தோன்றும், புத்திக்கு வேறொரு கருவி ஏற்பது முதலியதாக

## ஸமாத்யபாவச்ச - 39

**ஸமாத்யபாவாத் :-** ஆத்மா (ஜீவன்) கர்த்தாவாக இல்லாதுபோனால் உபநிடதங்களின்பரமாத்மாவை சாக்ஷாத்கரிக்கும் உபாயமான சமாதியின்மை உண்டாகும்.

**ச :-** என்பதாலும், ஆத்மா(ஜீவன்) கர்த்தா

## யதா ச தக்ஷோபயதா - 40

**யதா :-** எவ்வாறு

**ச :-** உலகத்திலும் கூட

**தக்ஷ: :-** தச்சன்

**உபயதா :-** அவனுடைய உளி முதலிய கருவிகளின் சம்பந்தம் உள்ளபோது கர்த்தாவாக அதனால் துன்பமடைபவராக இருக்கின்றாரோ, அது இல்லாத (வீட்டில் மனைவி, குழைந்தைகளுடன்) போது தன்னியில்பினனாக கர்த்தாவல்லாத இன்பமானவரோ, அதுபோல ஜீவனும் புத்தி முதலிய கருவி சம்பந்தத்தால் கர்த்தாவாகவும் அதுவல்லாத நிலையில் தன்னியல்பில் பரமாத்மாவே என்பதுபோல

## பராத்து தச்ருதே: - 41

**பராத் :-** பரமாத்மாவினால் அடையப்படுவது

**து :-** ஜீவனின் கர்த்தாத்தன்மை இயல்பானது அல்ல

**தத் ஷ்ருதே: :-** அதனை நிரூபிப்பதாகவே ஷ்ருதி, உள்ளதால், "ஏஷ ஹ்யேஷயேவ சாது கர்ம காரயதி" (எவரை நல்ல நிலைக்கு கொண்டு செல்ல விரும்புகினறாரோ அவர் மூலம் நல்ல கர்மத்தை செய்விக்கிறார், கீழ்நிலைக்கு கொண்டுபோக விரும்புகின்றாரோ அவர் மூலம் கெட்ட கர்மத்தை செய்விக்கிறார்)

## க்ருதப்ரயத்னாபேக்ஷஸ்து விஹிதப்ரதிஷித்தாவையர்த்யாதிப்ய: - 42

**விஹிதப்ரதிஷித்தாவையர்தாதிப்ய: :-** வேத விகிதம் மற்றும் பிரதிக்ஷித்தமான (விதிக்கப்பட்ட மற்றும் நிந்திக்கப்பட்ட) கர்மமானது பிரயோஜனமில்லாது ஆகாமலிருக்க

**து :-** என்பதால், அவரில் (ஈஷ்வரனில்) வைஷம்ய மற்றும் நைர்க்ருண்ய தோஷம் உண்டாகாது.

**க்ருதப்ரயத்னாபேக்ஷ: :-** ஈஷ்வரன், ஜீவனை செயலில் தூண்டுவதில் அவனால் முன்னர் செய்யப்பட்ட கர்மத்தை எதிர்நோக்குகிறார்.

## அம்ஷோ நாநாவ்யபதேஷாதன்யதா சாபி தாஷகிதவாதித்வமதீயத ஏகே - 43

**அம்ஷ: :-** ஜீவன் ஈஷ்வரனின் கற்பிதமான அம்சம்

**நாநாவ்யபதேஷாத் :-** "ய ஆத்மனிதிஷ்டன் ஆத்மானமந்தரோ யமயதி" (எவர் ஆத்மாவினில் இருந்துகொண்டு ஆத்மாவினை நியபிக்கின்றாரோ) என்ற ஷ்ருதியானது பேதத்தை (பிரிவினை) கூறுவதால்

**அன்யதா சாபி :-** அவ்வாறு இல்லாததாகவும், ஜீவன் - ஈஷ்வரன் அபேதமாகவும் (பிரிவற்றதாகவும்) "த்வம் ஸத்ரீ த்வம் புமான்" (நீயே ஆண். நீயே பெண்) முதலியதாகவும்

**தாஷகிதவாதித்வம் :-** "பிரம்மதாஷா பிரம்ம தாஸா பிரம்ம கிதவா:" (பிரம்மமே தாஷன், பிரம்மமே தாசன், பிரம்மமே சூதாடி) முதலியதாக ஷ்ருதியலும் சேவகன், சூதாடி முதலிய கீழ்நிலையும் கூட

**அதீயத ஏக :-** அதர்வண வேதிகள் பிரம்ம சூக்தத்தில் படிக்கின்றார்கள்

## மந்த்ரவர்ணாச்ச - 44

**மந்த்ரவர்ணாத் :-** "பாதோஸ்ய சர்வா பூதானி" (எல்லா ஜீவனும் இதன் ஒரு பாகத்தில் நிலைபட்டு இருக்கின்றது) என்ற மந்திரமும்

**ச :-** ஜீவனில் அம்சத்தன்மையினை கூறுகின்றது.

## அபி ச ஸ்மர்யதே - 45

**அபி ச :-** அதுமட்டுமல்லாது, ஜீவன் ஈஷ்வானின் அம்சம் என்று

**ஸ்மர்யதே :-** "மமைவாம்ஷோ" (என்னுடைய அம்சமே ஜீவ லோகத்தில் (உடலில்) உள்ள ஜீவன்) என்பதான பகவத்கீதை ஸ்மிருதியும் கூறுகின்றது

## ப்ரகாஷாதிவன்நைவனம் பர: - 46

**ப்ரகாஷாதிவத் :-** பிரகாசம் முதலியதைபோல, சூரியனானது நீரில் பல பிரதிபிம்பமாக விழும் நிலையில் அந்த பிரதிபிம்பம் அசைந்தாலும், கலங்கினாலும் சூரியன் ஒன்றும் ஆகாததுபோல

**நைவம் பர: :-** அவ்வாறு, ஜீவாத்மாவானது துன்பத்தை அடைந்தாலும், பரமாத்மாவானது துன்பம் அடைவதில்லை

## ஸ்மரந்தி ச - 47

**ஸ்மரந்தி :-** "தத்ர ய பரமாத்மா" (அந்த பரமாத்மாவானவர் தாமரையிலை தண்ணீர் போல துன்பத்தால் தீண்டப்படுவது இல்லை) என்பதான ஸ்மிருதியம்

**ச :-** ஜீவனின் துன்பத்தால், பரமாதமா துன்பம் அடைவதில்லை என்று கூறுகின்றது

## அனுஞாபரிஹாரௌதேஹஸமபந்தாஜ்ஜ்யோதிராதிவத் - 48

**அனுஞாபரிஹாரௌ :-** "மித்ரம் சேவ்யம்" (நன்பனை உபசரிக்கவேண்டும்), "ஷ்ரு: பரிஹர்தவ்ய:" (எதிரியினை கைவிடவேண்டும்) என்பதானஅனுஞா மற்றும் பரிஹாரம் (ஏற்றல், தள்ளுதல்) ஆத்மாவினில் (ஜீவனில்)

**தேஹஸம்பந்தாத் :-** உடலோடு உண்டான தாதாத்மிய(பிரிக்கமுடியாத அதுவே என்ற என்னம் ) சம்பந்தத்தால் உண்டாவது

**ஜோதிராதிவத் :-** நெருப்பினைப்போல, நெருப்பு சூடானது, வெளிச்சம் தருவது என்ற இலக்கணை உடையதாக இருப்பது, சுடுகாட்டு நெருப்பு தீண்டத்தகாதது என்றும் மற்றவை ஏற்கக்கூடியது என்பது போன்றும்.

## அஸந்ததேஸ்சாவ்யதிகர: -49

**அஸந்ததே: :-** ஜீவாத்மா எல்லா உடலோடு சம்பந்தம் இல்லாதிருப்பதால்

**ச :-** ஆத்மா ஒன்றானபோது, ஸ்வாமி ஒன்றானபோதும்

**அவ்யதிகர: :-** அதன் கர்மபலனில் எந்த சாங்கர்யமும் (கலப்படமும்) உண்டாகாது

## ஆபாஸ ஏவ ச - 50

**ஆபாச: :-** ஜீவாத்மா பரமாத்மாவின் ஆபாசமே பிரதிபிம்பம்

**ஏவ :-** நீர்நிலையில் தோன்றும் சூரியனைபோல, அதுவாகவே அல்லாமல், வேற்றொன்றாகவும் அல்லாமல்

**ச :-** இருப்பதால் கர்மபலனில் எந்த கலப்படமும் உண்டாகாது

## அத்ருஷ்டானியமாத் - 51

**அத்ருஷ்ட :-** புண்ணிய ___ பாவமான அதிருஷ்டமானது

**அநியமாத்** :- எந்த முறையும் (நியமும்) இல்லாதிருப்பதால்,நிச்சயம் கர்மபலனோடு கலப்படம்உண்டாகும்.

**அபிஸந்த்யாதிஷ்வபி சைவம் - 52**

**அபிஸந்திஷு** :- சங்கல்பம் முதலியவையில்

**அபி** :- கூட

**சைவம் (ச ஏவம்)** :- அதிருஷடத்தினை நியமனம் செய்வது காணப்படுவதில்லை என்பதால், கர்மபலன் கலப்படம் உண்டாகம்.

**ப்ரதேஷாதிதி சேன்நாந்தர்பாவாத் - 53**

**ப்ரதேஷாத்** :- ஆத்மாவானது எங்களால் (கணாதர்) விபுவாக (வியாபித்திருப்பதாக) ஏற்கப்பட்டாலும் உடல் கூடியதான பிரதேசத்தில் ஆத்மா ___ மனது சம்பந்தம் உண்டானால், அந்த பிரதேசத்தால், இந்த பிரதேசம் இந்த பலனை அடையும் என்ற நியமம் உண்டாகும்

**இதி சேத்** :- என்று கூறினால் **ந** :- தவறு

**அந்தர்பாவாத்** :- எல்லா உடலிலும் அந்த ஆத்மாக்களின் இருத்தல் இருப்பதால் கர்மபலன் கலப்படம் உண்டாகும் தோஷம் மாறுவதில்லை.

## இரண்டாம் அத்யாயம் - நான்காம் பாதம்

**ததா ப்ராணா: - 1**

**ததா** :- அவ்வாறு, எவ்வாறு "ஏதஸ்மாத் ஜாயதே ப்ராண:" (இதனிலிருந்து (பரமாத்மா) பிராணன் தோன்றுகின்றது) என்பதான ஷ்ருதியில் ஆகாயம் முதலியதின் உத்பத்தி கூறப்பட்டதோ

**ப்ராணா:** :- பிராணன்களின் (இந்திரியங்களின்) உத்பத்தியும் கூறப்பட்டுள்ளது, என்பதால் இந்திரியமும் தோற்றமடைந்தவையே ஆகும்.

**கௌணய்யஸம்பவாத் - 2**

**கௌணி :-** இந்திரியங்களின் தோற்றத்தை நிரூபிக்கும் ஷ்ருதியினை கௌணமாக ஏற்றால் என்றால்

**அஸம்பவாத் :-** அது இயலாது, ஒன்றை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகும் என்கிற வேதாந்த பிரதிஞ்ஞாவானது அழிவடையும் என்பதாலும்இந்திரியங்கள் தோற்றமடைந்தவை ஆகும்.

## தத்ப்ராக்ஷ்ருதேஸ் ச - 3

**தத்பராக்ஷ்ருதே: :-** "ஜாயதே" (தோன்றுகின்றது) என்று பிராணனை (இந்திரியத்தை) குறித்து கூறும் வார்த்தையே ஆகாயம் முதலியவையில் அனுவிருத்தி (தொடர்ந்து வருவதாக) ஆவதால்

**ச :-** இந்திரியங்கள் தோற்றமடைந்தவை ஆகும்.

## தத்பூர்வகத்வாத்வாச் - 4

**தத்பூர்வகத்வாத் :-** பிரம்மத்திலிருந்து தோன்றிய தேஜம் (நெருப்பு), ஜலம் (நீர்) மற்றும் அன்னம் (நிலம்) ஆகியவற்றின் சிருஷ்டியினை கூறிய பின்னர்

**வாச: :-** "அன்னமயம் ஹி ஸோம்ய மன: ஆபோமய ப்ராணஸ்தேஜோமயீ வாக்" (அன்னமயமே, மென்மையானவனே, மனது, நீர்மயமானது பிராணன், நெருப்புமயமானது வாக்கு) என்பதா ஷ்ருதி பிராணன் முதலியவையினையும் பிரம்மத்தின் சிருஷ்டியாகவே கூறுகின்றது.

## ஸப்த கதேர்விசேஷிதத்வாச்ச - 5

**ஸப்த :-** இந்திரியங்களின் எண்ணிக்கை ஏழு ஆகும்.

**கதே: :-** "ஸப்த ப்ராணா: ப்ரபவந்தி தஸ்மாத்" (ஏழு இந்திரியங்கள் அதிலிருந்து தோன்றுகிறது) என்பதான ஷ்ருதியினால் அறியப்படுகிறது

**விசேஷிதத்வாத் :-** "ஸப்த வை ஷீர்ஷ்ண்யா ப்ராணா:" (ஏழு மட்டுமே நிச்சயமாக தலையில் இருக்கும் இந்திரியங்கள்) என்பதான ஷ்ருதியில் சீர்ஷ்ண்ம் (தலை) என்பதால் சிறப்பிக்கப்பட்டதால்

**ச :-** என்பதாலும்,

## ஹஸ்தாதயஸ்து ஸ்திதேதோநைவம் - 6

**ஹஸ்தாதய: :-** "ஹஸ்தௌ வை க்ரஹ:" (கைகளே கிரகம், அவை கர்மமான அதிகிரகததினால் கிரகிக்கப்பட்டவை) என்பதான ஷ்ருதியில் கை, கால் முதலியவையும் இந்திரியங்களாக கூறப்பட்டதால்

**து :-** நீங்கள் கூறுவது தவறு

**ஸ்திதே :-** அதனால் ஏழினை காட்டிலும்அதிகமான இந்திரியங்கள் உள்ளது என்ற நிலையில்

**அத: :-** இவ்வாறு

**நைவம் (ந ஏவம்) :-** ஏழு மட்டும் என்பது இயலாது.

## அணவஸ்ச - 7

**அணவ: :-** இந்திரியங்கள், இந்திரியங்களால் அறியப்படுபவை அல்லாததால் அணு அளவினதாக (பரமாணுஅளவினது அல்ல)

**ச :-** மிகவும் சூக்குமமாக இருப்பது.

## ஷ்ரேஷ்டஸ் ச - 8

**ஷ்ரேஷ்ட: :-** முக்கிய பிராணனும் பரமாத்மாவிலிருந்து தோன்றியது, இந்திரியங்களைப் போல

**ச :-** என்பதாலும்.அது குணங்களின் அதிகத்தன்மை உடையது என்பதாலும்

## ந வாயுக்ரியே ப்ருதகுபதேஷாத் - 9

**ந :-** நிச்சயமில்லை

**வாயுக்ரியே :-** முக்கிய பிராணனானது வாயுவோ அல்லது இந்திரியங்களின் செயலாவதோ, அதுவாயுவிசேஷமே ஆகும்.

**ப்ருதகுபதேஷாத் :-** "ஸ வாயுனா ஜ்யோதிஷா பாதி" (அது வாயுரூபமான ஜோதியினால் பிராகாசிக்கப்படுகிறது) "ஏதஸமாத் ஜாயதே ப்ராண:" (இதனிலிருந்து (பரமாத்மாவிலிருந்து) பிராணனானது தோன்றுகிறது) என்பதான ஷ்ருதியில் பிராணன் வேறுபட்டதாக கூறப்பட்டதால்

**சக்ஷுராதிவத்து தத்ஸஹஷிஷ்ட்யாதிப்ய: - 10**

**சக்ஷுராதிவத் :-** கசக்ஷு (கண்) முதலியதைபோல வேறொன்றிற்கு கட்டுப்பட்டது பிராணன்

**து :-** அதனால், ஜீவனை போல சுதந்திரமானது அல்ல

**தத்ஸஹஷிஷ்ட்யாதிப்ய: :-** பிராண - இந்திரிய சம்வாதம் (பேச்சு) நடக்கும் இடத்தில் பிராணன் இந்திரியங்களுடன் கூறப்பட்டுள்ளது அதுமட்டுமல்லாமல், அதுஅசேதனம் என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**அகரணத்வாச்ச ந தோஷஸ்ததா ஹி தர்ஷயதி - 11**

**அகரணத்வாத் :-** பிராணன் ஞானத்தை அடைய காரணமாக (கருவியாக) இல்லாததால்

**ந :-** கண்கள் முதலியதைபோல இல்லை

**தோஷ: :-** வேறு விஷயங்களினை கிரகணம் செய்வது(வேறு காரியஏற்பது) என்ற தோஷம் உண்டாவதற்கு

**ததா ஹி :-** அப்படிப்பட்டதாகவே

**தர்ஷயதி :-** "தான்வரிஷ்ட:" (அவைகளில் (இந்திரியம்) மேன்மையானதான பிராணன்) என்பதான இந்திரியங்களை தாங்குவதாக (நிலைபடுத்துவதாக) காண்பிக்கின்றது.

**பஞ்சவிருத்திர்மனோவத்வ்யபதிஷ்யதே - 12**

**பஞ்சவிருத்தி :-** "பிராணோ அபான:" (பிராணன், அபானன்,வியானன், உதானன் மற்றும் சமானன்) என்பதான ஷ்ருதியில் ஐந்து செயல்களுடையதாக பிராணனானது

**மனோவத் :-** ஐந்து விருத்திகளுடைய மனுதுபோல சுரோதிரம் முதலியதின் மூலம் சப்தம் முதலிய விஷயத்தை அடைவதாகவோ,அல்லது யோக சூத்திரத்தில் கூறப்பட்ட பிரமாண, விபர்யயம், விகல்பம், நித்திரை மற்றும் ஸ்மிருதி ஆகிய ஐந்து விருத்திகளோ

**வ்யபதிஷ்யதே :-** உள்ளதாக கூறப்படுகிறது

**அணுஸ் ச - 13**

**அணு:** :- முக்கிய பிராணன், சூக்குமமானது

**ச** :- வரையறுக்கப்பட்டதும் ஆகும்

**ஜ்யோதிராத்யதிஷ்டானம் து ததாமனனாத் - 14**

**ஜ்யோதிராத்யதிஷ்டானம்** :- கண் முதலியஇந்திரியம் ஆதித்யன் (சூரியன்) முதலிய தேவதைக்கு கட்டுப்பட்டதாக செயல்படுகின்றது

**து** :- தானே சுதந்திரமாக அல்ல

**ததாமனனாத்** :- அவ்வாறே, "அக்னிர்வாக்பூத்வா" (நெருப்பானது (தேவதை) வாக்காக வாயில்நுழைந்தது) என்பதான ஷ்ருதிகள் கூறுகினறன என்பதால்

**ப்ராணவதா ஷப்தாத் - 15**

**ப்ராணவதா** :- பிராணனை உடைய ஜீவன் இந்திரியங்களுடன் ஸ்வ —— ஸ்வாமி (தன்னுடையதுதான் முதலாளி) என்ற சம்பந்தத்தில் உள்ளது என்பதால் ஜீவனே போக்தா (அனுபவிப்பவர்)

**ஷ்பதாத்** :- "ஸ சாக்ஷுஷ: புருஷோ" (அந்த கண்களில் இருக்கும் புருஷன்) என்பதான ஷ்ருதிகள் இதனையே கூறுகின்றது.

**தஸ்ய ச நித்யத்வாத் - 16**

**தஸ்ய** :- ஜீவன் தன் புண்ணிய —— பாவ கர்மங்களால் அடையும் கர்த்தாதன்மை மற்றும் போக்தாதன்மை

**ச** :- என்பதாலும், தேவதையினை சேருவது இல்லை

**நித்யத்வாத்** :- அது நித்தியமானது என்பதாலே, இந்த கீழ்மையான அனுபவத்தை தேவதைகள் அடைவதில்லை என்பதாலும்

**த இந்திரியாணி தத்வ்யபதேஷாதன்யத்ர ஷ்ரேஷ்டாத் - 17**

**தே (த)** :- வாக் முதலிய

**இந்திரியாணி** :- இந்திரியங்கள்

**தத்வ்யபதேஷாத் :-** "ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராண:" (இதனிலிருந்து தோன்றுகிறது பிராணன்) என்பதான ஷ்ருதி மூலம் முக்கிய பிராணன் அவையிலிருந்து வேறுபட்டதாக கூறப்பட்டுள்ளதால்

**அன்யத்ர :-** வேறு இடத்திலும்

**ஷ்ரேஷ்டாத் :-** முக்கிய பிராணன் இந்திரியங்களிலிருந்து சிரேஷ்டமானதாக கூறப்பட்டதால், பிராணன் (இந்திரியம்) வேறு தத்துவமே ஆகும்.

**பேதஷ்ருதே: - 18**

**பேதஷ்ருதே: :-** "தே ஹ வாசமூசு:" (தேவதைகள் வாக்கிடம் கூறினார்கள்) என்பதானஷ்ருதியின் மூலம் வாக்கு முதலிய இந்திரியங்கள் பாபமடைந்ததாக கூறி இந்திரியத்தின் பிரகரணத்தை முடித்து பின்னர் "அத ஹேமமாஸன்யம்" (பின்னர் வாயிலிருக்கம் முக்கிய பிராணனிடம் கூறியது) என்பது மூலம் பிராணன்மற்றும் இந்திரியங்கள் வேறுபட்டவை என்று காண்பிக்கப்பட்டதால், இந்திரியங்கள் பிராணனை காட்டிலும் வேறு தத்துவமே ஆகும்

**வைலக்ஷ்ண்யாச் ச - 19**

**வைலக்ஷ்ண்யாத் :-** வேறுபட்டத்தன்மை உள்ளதாலும், தூக்கத்தில், பிராணன் இருத்தல்உடையதாகவும் மற்ற இந்திரியங்கள்இன்மையுடையதாகவும் இருப்பதாலும்.

**ச :-** என்பதாலும், இந்திரியங்கள் முக்கிய பிராணனை காட்டிலும் வேறு தத்துவமே ஆகும்.

**ஸஞ்ஞாமூர்திக்ல்ருப்திஸ்து த்ரிவ்ருத்குர்வத உபதேஷாத் - 20**

**ஸஞ்ஞாமூர்த்திக்ல்ருப்தி: :-** சஞ்ஞா ___ பெயர். மூர்த்தி ___ உருவம், க்லிருப்தி ___ சிருஷ்டிப்பது ஜீவன் என்பது

**து :-** நிச்சயமாக இயலாதது

**த்ரிவ்ருத்குர்வத: :-** "தாஸாம் த்ரிவ்ருதம்" (அவைகளை ஒவ்வொன்றையும் திரிவிருத்கரணம் செய்வேன்) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட திரிவிருத்கரணம் செய்வது பரமேஸ்வரரே ஆகம்

**உபதேஷாத் :-** "நாம ரூபே வ்யாகரவாணி" (பெயர் ___உருவங்களாக தோற்றத்தை செய்வேன்) என்பதான ஷ்ருதியில் ஈஷ்வரனையே வியாகரணம் (சிருஷ்டி செய்யும்) கர்த்தாவாக கூறப்பட்டதால்

**<u>மாம்ஸாதி பௌமம் யதாஷப்தமிதரயோஸ் ச - 21</u>**

**மாம்ஸாதி :-** மாமிசம், மலம் முதலிய

**பௌமம் :-** திரிவிருத்கரணம் அடைந்த பூமியின் காரியமானதால்

**யதாஷப்தம் :-** "மூத்ரம் லோஹிதம்" (மூத்திரம், இரத்தம், பிராணன் ஆகியவை நீரினுடைய காரியம்)என்பதான ஷ்ருதியும்

**இதரயோஸ் ச :-** எலும்பு, மஜ்ஜை மற்றும் வாக்கு நெருப்பினுடைய காரியம் என்றும் கூறப்பட்டுள்ளது

**<u>வைசேஷ்யாத்து தத்வாதஸ்தத்வாத - 22</u>**

**வைசேஷ்யாத் :-** நிலம் முதலியவையின் அதிகத்தன்மை காணப்படுவதால்

**து :-** நிலம் முதலியவை திரிவிருத்கரணம் அடைந்ததாக இருந்தாலும்

**தத்வாத: :-** இது நிலம், இது நீர், இது நெருப்பு என்று ஒவ்வொன்றும் கூறப்படுகின்றது

**தத்வாத: :-** அத்யாயம் முடிவதை குறிக்கின்றது.

## <u>இரண்டாம் அத்யாயம் சமாப்தம்</u>

## <u>மூன்றாம் அத்யாயம் - முதல் பாதம்</u>

**<u>ததந்தரப்ரதிபத்தௌரம்ஹதி ஸம்பரிஷ்வக்த: ப்ரஷ்ன நிரூபணாப்யாம் - 1</u>**

**ததந்தரப்ரதிபத்தௌ :-** இந்த உடலை விட்டு விலகி புதிய உடலை அடைய ஜீவன்

**ரம்ஹதி :-** செல்கின்றது

**ஸம்பரிஷ்வக்த: :-** பூதசூக்குமத்தால் (இந்திரியத்தால்) சூழப்பட்டதாக இருக்கிறது

**ப்ரஷ்னநிரூபணாப்யாம் :-** "வேத்த யதா" (அறிவீர்களா ஐந்தாவது ஆகுதியினை இடும்போது நீரானது எவ்வாறு "புருஷன்"என்ற பெயரை அடைகிறது என்று) என்று பிரஹ்மனன் கேட்க, "இதி து பஞ்சம்யா" (இவ்வாறே ஐந்தாவது ஆகுதியினை இடும்போது நீர், புருஷன் என்ற பெயரை அடைகின்றது) என்று ஷ்வேதகேது கூறுகின்றார்.

## த்ர்யாத்மகத்வாத்து பூயஸ்த்வாத் - 2

**த்ர்யாத்மகத்வாத் :-** திரிவிருத்கரணம் ஷ்ருதியினால் நிரூபிக்கப்பட்டதால், மற்ற இரண்டு பூதங்களும் (நிலம் மற்றும் நெருப்பு) கூடியதாக நீர் இருப்பதால் நீர் குறிப்பிடப்ட்டதால் மற்ற இரண்டும் குறிப்பிடப்பட்டதாக ஆகின்றது

**து :-**என்பதால், மற்ற பூதசூக்குமங்கள் குறிப்பிடப்படவில்லை என்பது தவறு

**பூயஸ்த்வாத் :-** நெருப்பு முதலியவையினை ஒப்பிட்டு நோக்கும் போது நீரே உடலில் அதிகமானதாக உள்ளது.

## ப்ராணகதேஸ் ச - 3

**ப்ராணகதே: :-** "தமுத்க்ராமந்தம் ப்ராளோ அனுத்க்ராமந்தி" (அந்த ஜீவன் விட்டுப்போகும்போது பிராணனும் அதனை தொடர்ந்து செல்கின்றது) என்பதான ஷ்ருதியில ஜீவனுடன் பிராணன், இந்திரியங்கள் பின் தொடர்ந்து செல்வது கூறப்பட்டுள்ளதால்

**ச :-** ஜீவன் பூதசூக்குமங்களால் சூழப்பட்டதாகவே செல்கின்றது

## அக்ன்யாதிகதிஷ்ருதேரிதி சேன்ந பாக்தத்வாத் - 4

**அக்ன்யாதிகதிஷ்ருதே: :-** "அக்னிம் வாகப்யேதி" (நெருப்பில் (தேவதையில்) வாக்கு லயமடைகிறது) என்பதான ஷ்ருதியில் இந்திரியங்கள் அதன் அதிஷ்டான தேவதையினை அடைகின்றது என்று கூறப்பட்டதால்

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** அது தவறு

**பாக்தத்வாத் :-** "தமுத்க்ராமந்தம்" என்று மேற்கூறிய ஷ்ருதியுடன் விரோதம் உண்டாகும் என்பதால் அக்னி முதலியவற்றைஅடைவது கௌணமே (முக்கியமற்றதே) ஆகும்.

**ப்ரதமே அஷ்ரவணாதிதி சேன்ந தா ஏவ ஹ்யுபபத்தே:  -  5**

**ப்ரதமே :-** முதலில் கூறப்பட்ட த்யு லோகம் என்ற அக்னியில் (பஞ்சாக்னி வித்யையில்)

**அஷ்ரவணாத் :-** ஷ்ரத்தையே ஆகுதியாக கூறப்பட்டது நீரானது அல்ல

**இதி சேத் :-** என்று கூறினால்   **ந :-** தவறு

**ஹி :-** "ஷ்ரத்தா வா ஆப:" (சிரத்தையே நீர்) "ஆபோ ஹாஸ்மை ஷ்ரத்தாம் ஸன்நமந்தே புண்யாய கர்மணே" (நிச்சயமாக, இந்த ஜீவனின் புண்ணிய கர்மத்திற்கு நீரே சிரத்தையினை உத்பத்தி செய்கின்றது) என்பதான ஷ்ருதியில்

**உபபத்தே: :-** நீரே சிரத்தையாககுறிப்பிடப்பட்டதால் கேள்விக்கு பதில் சரியானதேயாகும்.

<u>**அஷ்ருதத்வாதிதி சேன்நேஷ்டாதிகாரிணாம் ப்ரதீதே:  -  6**</u>

**அஷ்ருதத்வாத் :-** நீரைப்போல ஜீவன் ஷ்ருதியினால் குறிப்பிடப்படாததால், நீரினால் சூழப்பட்டதாக ஜீவன் செல்லும் என்று கூறுவது இயலாது

**இதி சேத் :-** என்று கூறினால்   **ந :-** தவறு

**இஷ்டாதிகாரிணாம் :-** "அத ய இமே" (எந்த கிருகஸ்தர் இந்த உடலிலிருந்துபோது இஷ்டம், பூர்தம் மற்றும் தத்தம் ஆகிய கர்மங்களை செய்கின்றனரோ அவர்கள் தூமம் முதலிய அபிமானி தேவதைகளை அடைகின்றனர்) என்பதான ஷ்ருதியில் இஷ்ட, பூர்தகர்மத்தினை செய்பவராக ஜீவன்

**ப்ரதீதே :-** கூறப்பட்டதாக அறிவது இயலும் என்பதால்,

**பாக்தம் வா அநாத்மவித்வாத்ததா ஹி தர்ஷயதி  -  7**

**பாக்தம் :-** இஷ்டம் முதலிய கர்மத்தினை செய்பவரில் அன்னத்தன்மை முக்கியமற்றதாகும்

**வா :-** இல்லாவிட்டால், "ஸ்வர்ககாமோ யஜேத" (சுவர்கத்தில் ஆசையுடையவர் யாகம் செய்வாராக) என்ற ஷ்ருதியுடன் விரோதம் உண்டாகும்

**அநாத்மவித்வாத் :-** கர்ம செய்பவர்கள் அநாத்மாவை அறிந்தவராக (ஆத்மாவை அறியாதவராக) உள்ளதால் அவர்களில் தேவதைகளால் அனுபவிக்கப்படும் அன்னத்தன்மை கூறப்பட்டது

**ததா ஹி :-** அப்படிப்பட்டதாகவே

**தர்ஷயதி :-** "அத யோ அன்யான்" (எவரொருவர் வேறு தேவதைகளை "அது வேறு, நான் வேறு" என்று உபாசனை செய்கின்றாரோ அவர் தேவர்களின் பசு (அனுபவத்திற்கு விஷயம்) ) என்பதான ஷ்ருதியில் காண்பிக்கப்பட்டுள்ளது

**<u>க்ருதாத்யயே அனுஷயவான்த்ருஷ்டஸ்ம்ருதிப்யாம் யதேதமனேவம் ச - 8</u>**

**க்ருதாத்யயே :-** அனுபவித்த பின்னர்

**அனுஷயவான் :-** அதனை (அனுபவித்து முடிந்த) கர்மத்தை காட்டிலும் வேறு கர்மத்தினால் சூழ்ந்ததாக இந்த லோகத்தை அடைகின்றது.

**த்ருஷ்டஸ்ம்ருதிப்யாம் :-** "தத் ய இஹ ரமணீயகரணா" (எவர் இங்கு புண்ணியத்தை உடையவரோ, பிராம்மணர் முதலிய சரீரத்தையும், பாவம் உடையவர் நாய்முதலிய உடலையும் அடைவர்) என்பதான ஷ்ருதியும் "ப்ரேத்ய கர்மபலமனுபூய" (மரணத்திற்கு பின்னர் தங்கள் கர்மபலனை அனுபவித்து அதனில் எஞ்சியிருக்கும் கர்மத்தினால் விசேஷ தேசம், ஜாதி முதலியவை கூடியதான பிறப்பை அடைவர்) என்பதான ஸ்மிருதியும்

**யதேதம் :-** எவ்வாறு (தூமம் முதலிய வழி) சென்றார்களோ அதே வழியில் திரும்புவர்

**அனேவம் :-** அல்லது, வேறு வழியாகவோ திரும்புவார் (அப்ரம் முதலியவழி)

**ச :-** என்றும் கூறியுள்ளதால்.

**<u>சரணாதிதி சேன்நோபலக்ஷணார்தேதி கார்ஷ்ணாஜினி: - 9</u>**

**சரணாத் :-** "ரமணியசரணா" , "கபூய சரணா" என்ற ஷ்ருதியானது கூறும் சரணம் என்பது நல்ல ஆசரனையினை குறிப்பதால் அப்படிப்பட்டவர்கள் நல்ல பிறவியினை அடைவார்கள்

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** தவறு

**உபலக்ஷணார்தா :-** அனுஷயத்தினை (கர்மகூட்டத்தை) குறிக்கும் சொல் சரணம் என்பது

**இதி :-** என்று ஏற்கிறார்

**கார்ஷ்ணாஜினி: :-** ஆசாரியர் கார்ஷ்ணாஜினி:

**<u>ஆனர்த்யாக்யமிதி சேன்ந ததபேக்ஷத்வாத் - 10</u>**

**ஆனர்த்யக்யம் :-** சரணம் என்பது தன்னடைய உண்மையான பொருளான ஆசரனையினை (கடைபிடித்தல்) கூறாமல் முக்கியமற்ற கர்மகூட்டம் என்ற பொருளை குறிப்பதாக ஏற்றால் அது பொருளற்றதாக ஆகும்

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** தவறு

**ததபேக்ஷத்வாத் :-** கர்மத்தை செய்வதற்கு ஆசாரமானது அவசியம் என்பதால் அதனை எதிர்நோக்கியே கர்மம் செய்யப்படுவதால்.

## ஸீக்ருததுஷ்க்ருதே ஏவேதி து பாதரி: - 11

**ஸீக்ருததுஷ்க்ருதே :-** நல்ல கர்மங்களும் கெட்ட கர்மங்களும் (புண்ணிய ___ பாவம்)

**ஏவ :-** என்பதே **இதி :-** என்று

**து :-** இந்த சரணம் என்ற சொல்லின் பொருளாக

**பாதரி: :-** ஆசாரியர் பாதரி ஏற்கின்றார்

## அனிஷ்டாதிகாரிணாமபி ச ஷ்ருதம் - 12

**அனிஷ்டாதிகாரிணாம் :-** "யே வை கே சாஸ்மால்லோகத்ப்ரயந்தி" (எவரொருவர் இந்த உலகத்திலிருந்து பிரிந்து போகிறாரோ) என்பதான ஷ்ருதியானது இஷ்டம், பூர்தம் முதலிய கர்மங்கள் புரியாதவர்

**அபி :-** கூட

**ச :-** மற்ற கர்மத்தை செய்பவரும் (கெட்ட கர்மம்)

**ஷ்ருதம் :-** சந்திரலோகம் அடைவர் என்று கூறியுள்ளது

## ஸம்யமனே த்வனுபூயேதரேஷாமாரோஹாவரோஹௌ தத்கதிதர்ஷனாத் - 13

**ஸம்யமனே :-** எம புரியில் என்று கூறியுள்ளதால்

**து :-** நீங்கள் கூறியது தவறு

**அனுபூய :-** அங்கு (எம புரியில்) கர்மங்களை (கெட்ட) அனுபவித்த பின்னர் திரும்புகின்றனர் என்று

**இதரேஷாம் :-** இஷ்டம் முதலிய கர்மத்தை செய்யாமல்வேறு கர்மத்தை செய்பவர்களை குறித்து

**ஆரோஹாவரோஹௌ :-** போக்கு ___ வரவு கூறப்பட்டதால்

**தத்கதிதர்ஷணாத் :-** இவ்வாறே, "அயம் லோகோ நாஸ்தி" (இந்த லோகமே உள்ளது பரலோகம் இல்லை என்ற எண்ணுபவர்கள் மீண்டும் மீண்டும் என் வசத்தை அடைகின்றனர்) என்பதான ஷ்ருதியும் காண்பிப்பதால்

**ஸ்மரந்தி ச - 14**

**ஸ்மரந்தி :-** நசிகேதர் முதலியவர்களின் கதைகளலும் ஸ்மிருதியும் இவ்வாறே கூறுகின்றது

**ச :-** என்பதாலும் கெட்ட கர்மம் செய்பவர் எமபுரி செல்வர் என்பது நிச்சயம்.

**அபி ச ஸப்த - 15**

**அபி ச :-** அதுமட்டுமல்லாமல், புராணத்திலும் கூட

**ஸப்த :-** ரௌரவம் முதலிய ஏழுவகை நரகங்கள் பாவ கர்மத்தை செய்பவர் அடைவர் என்று கூறுகின்றது.

**தத்ராபி ச தத்வ்யாபாராதவிரோத: - 16**

**தத்ர :-** அந்த ரௌரவம் முதலிய நரகங்களில்

**அபி :-** கூட ச :- நிச்சயமாக

**தத்வ்யாபாராத் :-** எமனின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதால், எமனின் கட்டளைப்படி நடப்பதால்

**அவிரோத: :-** இங்கு எந்த விரோதமும் இல்லை

**வித்யாகர்மணோரிதி து ப்ரக்ருதத்வாத் - 17**

**வித்யாகர்மணோ: இதி :-** "அத ஏதயோ: பதோ்ன" (இனி இந்த இரண்டு வழிகளிலும்) என்பதான ஷ்ருதியில் "ஏதயோ:" (இந்த இரண்டு) என்பதால் வித்யா மற்றும் கர்மமேகூறப்பட்டதால்

**து :-** நீங்கள் கூறுவது தவறு கர்மமோ அல்லது உபாசனையோ இல்லாமல் சந்திரலோகம் அடைவது என்பது

**ப்ரக்ருதத்வத் :-** வித்யை மற்றும் கர்மமே இங்கு தேவமார்கத்தை மற்றும் பித்ருமார்கத்தை அடையும் வழிகளாக கூறபபட்டதால்.

## ந த்ருதீயே ததோபலப்தே: - 18

**ந த்ருதீயே :-** மூன்றாவதான (கர்மம் மற்றும் வித்யை அல்லாத) வழியினை அடைந்த பாவிகளுக்கு உடலை அடைய ஐந்தாவது ஆகுதியோ அல்லது வேறு ஆகுதியோ இருப்பதில்லை

**ததோபலப்தே: :-** அவ்வாறே, "ஜாயஸ்வம்ரியஸ்வ" (பிறத்தலும் - இறத்தலும்) என்பதான ஷ்ருதியில் இவ்வாறே காணப்படுகின்றதால்

## ஸ்மர்யதேபி ச லோகே - 19

**ஸ்மர்யதே :-** ஸ்மிருதிகளிலும் (மகாபாரதம் முதலிய இதிகாச ஸ்மிருதியிலும்கூ

**அபி :-** கூட

**ச :-** இவ்வாறே, ஐந்தாவது ஆகுதி இல்லாமலேயே

**லோகே :-** திருஷ்டத்யுமனன், தரௌபதி, துரோணம் சீதா முதலியவர்களின் பிறப்பு கூறப்பட்டுள்ளது.

## தர்ஷணாச்ச - 20

**தர்ஷணாத் :-** நான்கு வகை பிறப்பில் (கரு, முட்டை, வேர்வை மற்றும் முலை) வேர்வை மற்றும் முலைத்துவருவது புணர்ச்சி இல்லாது நடப்பதாக காணப்படுவதாலும்

**ச :-** பாபம் செய்பவர்களுக்கும் அவ்வாறே ஆவது இயலும்

## த்ருதீயஷப்தாவரோத: ஸம்ஷோகஜஸ்ய - 21

**த்ருதீயஷப்த :-** "ஆண்டஜம் ஜீவஜம் உத்பிஜ்ஜம்" (முட்டையிலிருந்து, கருவிலிருந்து, முளையிலிருந்து)என்பதான ஷ்ருதியில் மூன்றாவதாக கூறப்பட்ட உத்பீஜ்ஜம் என்பது மூலம் கூறப்பட்டதால்

**அவரோத: :-** எந்த விரோதமும் இல்லை

**ஸம்ஷோகஜஸ்ய :-** வேர்வையிலிருந்து உண்டாகும் பிராணிகளில்

## ஸாபாவ்யாபத்திருபபத்தே: - 22

**ஸாபாவ்யாபத்தி: :-** திரும்பும்போது ஜீவனானது ஆகாயம் முதலியவற்றின் சமானத்தன்மையினையே அடையும் அதன் சுவரூபத்தைஅல்ல

**ஊபபத்தே: :-** இவ்வாறே அது இயலும் என்பதால்ஒன்று வேறொன்றின் சுவரூபத்தை அடைவது இயலாதுஎன்பதால்

## நாதிசிரேண விசேஷாத் - 23

**நாதிசிரேண :-** ஜீவனானது சிறிதுகாலம்மட்டுமே ஆகாயம் முதலியதுடன் சமானநிலையினை அடைகின்றது

**விசேஷாத் :-** "அதோ வைகளு துர்நிஷ்ப்ரபதரம்" (இவ்வாறு இந்த கீழேவருதல் மிகவும்கடினமானதே) என்பதான ஷ்ருதியில் விசேஷமானது (சிறப்பு) காணப்படுவதாக இருப்பதால்

## அன்யாதிஷ்டிதேஷு பூர்வவதபிலாபாத் - 24

**அன்யாதிஷ்டிதேஷு :-** வேறு ஜீவனானது நிலைபட்ட நெல், கோதுமை முதலியதில் சம்பந்தப்பட்டதாக இருக்கினறான், கீழே வரும் ஜீவன்

**பூர்வவதபிலாபாத் :-** ஆகாயம் முதலியதில் போல, அவ்வாறே கூறப்பட்டுள்ளதால்.

## அஷூத்தமிதி சேன்ந ஷப்தாத் - 25

**அஷூத்தம் :-** அக்னிஷ்டோமம் முதலிய யாகங்களில் "பஷூம் ஆலபேத்" (பசுவினை வதம் செய்யவும்) என்று அதன் பாகங்களை உபயோகிக்க

கூறியுள்ளதால் அது பாவம் என்பதால், கீழே வரும் ஜீவன் நெல், கோதுமை பிறப்பு எடுத்தல் அவசியம்

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** தவறு

**ஷப்தாத் :-** "ந ஹிம்ஸயாத் ஸர்வாபூதானி" (எந்த உயிரிணத்தையும் துன்புறுத்தக்கூடாது) என்பதான ஷ்ருதி உத்சர்கம் (பொதுவானது), ஆனால் "பசும் ஆலபேத்" (பசுவினை கொல்லவும்) முதலிய ஷ்ருதி அபவாதம் (விசேஷமானது) என்பதால்அதுவேத விகிதம் (வேதத்தால் விதிக்கப்பட்டது) ஆகின்றதால் பாவம் இல்லை

## ரேத: ஸிக்யோகோத - 26

**ரேத: ஸிக்யோக: :-** நெல், கோதுமை நிலை அடைந்த பின்னர் கீழே வரும் ஜீவனானது வீரியத்தினோடு சம்பந்தம் அடைகின்றது

**அத :-** இவ்வாறே, "யோ ரேத: ஸிஞ்சதி" (எவர் வீரியத்தை கர்பத்தில் இருகின்றாரோ) என்பதான ஷ்ருதியில் அந்த வீரியத்தை இடும் கர்தாவோடு சம்பந்தம் கூறப்பட்டுள்ளது.

## யோனே: ஷரீரம் - 27

**யோனே: :-** அந்த கர்பத்தில் வீரியத்தை இட்ட பின்னர் அங்கு அந்த ஜீவனின் புண்ணிய ___ பாவத்திற்கு ஏற்ப

**ஷரீரம் :-** அதற்கு தகுந்த உடலானது தோற்றமடைகின்றது என்று "ரமணீயசரணா" என்பதான ஷ்ருதி கூறுகின்றது.

# மூன்றாம் அத்தியாயம் - இரண்டாம் பாதம்

## ஸந்த்யே ஸ்ருஷ்டிராஹ ஹி -1

**ஸந்த்யே :-** சந்தியில் (கூடும் இடத்தில்) விழிப்பம் தூக்கமம் கூடும் இடத்தில், கனவு நிலையில்

**ஸ்ருஷ்டி: :-** சிருஷ்டியானது வியாவஹாரிக சத்தியத்தன்மை உடையது

**ஆஹ :-** என்றே "அத ரதான்" (இனி ரதத்தினை அதன் குதிரைகளை அதற்கு பாதையினை படைக்கிறார்) என்பதான ஷ்ருதி கூறுகின்றது

**ஹி :-** நிச்சயமாக

**<u>நிர்மாதாரம் சைகே புத்ராதயஸ் ச - 2</u>**

**நிர்மாதாரம் :-** கனவில் ஆசைப்பட்ட விஷயத்தை சிருஷ்டிப்பது பரமாத்மாவே

**ச :-** என்றும்

**ஏகே :-** சில வேத சாகைகளில் (கிளை) கூறப்பட்டுள்ளது

**புத்தராதய: :-** புத்திரன் முதலியவர்களே இங்கு காமம் (ஆசைப்பட்ட விஷயம்) என்றும் ஏற்கப்படுகிறது

**ச :-** என்பதாலும் கனவு நிலை வியாவகாரிக சத்தியத்தன்மை உடையது

**<u>மாயாமாத்ரம் து கார்த்ஸ்ன்யேனானபி வ்யக்தஸ்வரூபத்வாத் - 3</u>**

**மாயாமாத்ரம் :-** கனவு நலை வெறும் மாயையே

**து :-** நிச்சயம்வியாவகாரிக சத்தியம் அல்ல

**கார்த்ஸ்யேன :-** முழுமையாக, தேசம், காலம் ஆகிய எல்லா தர்மங்களும்

**அனபிவ்யக்தஸ்வரூபத்வாத் :-** அங்கு வெளிப்பட்டதாக இருப்பதில்லை என்பதால்

**<u>ஸீசகஸ்ச ஹி ஷ்ருதேராசக்ஷதே ச தத்வித: - 4</u>**

**ஸீசக: :-** கனவினை சூசகமாக (சமிஞ்ஞையாக) (எதிர்கால நன்மை ___ தீமைகளுக்கான)

**ச ஹி :-** என்றே நிச்சயமாக

**ஷ்ருதே: :-** "யதா கர்மஸு காம்யேஷு ஸ்திரியம் ஸ்வப்னேஷு" (காமிய கர்மம் செய்யும்போது அழகான பெண்ணை கண்டால் அந்த கர்மம்நன்றாக நிறைவுபெற்றது) என்பதான ஷ்ருதியும்

**ஆசக்ஷ்தே ச :-** இவ்வாறே ஏற்கின்றனர்,

**தத்வித: :-** கனவு நிலையினை குறித்த சாஸ்திரததை அறிந்தவரும்.

**<u>பராபித்யானாத்து திரோஹிதம் ததோ ஹ்யஸ்ய பந்தவிபர்யயௌ - 5</u>**

**பராபித்யானாத்** :- பரமாத்மாவினை தியானம் செய்வதுமூலம்

**து** :- சந்தேகமில்லாமல் வெளிப்படுகின்றது

**திரோஹிதம்** :- அவித்தை முதலியதால் மூடப்பட்ட ஜீவனின் ஐஷ்வரியமானது

**ததோ ஹி** :- அதனால் தான் நிச்சயமாக

**அஸ்ய** :- ஜீவனின்

**பந்தவிபர்யயௌ** :- ஈஷ்வரனை குறித்த அஞ்ஞானத்தால் பந்தமும் அவரின் ஞானத்தால் மோக்ஷமும் உண்டாகின்றது.

**<u>தேஹ யோகாத்வா ஸோ பி - 6</u>**

**தேஹயோகாத்** :- உடல் முதலியதுடன் உண்டாகும் சம்பந்தத்தால்

**வா** :- வேறு வகையாக அல்ல

**ஸோ அபி** :- அந்த ஈஷ்வரத்தன்மையானது ஜீவனில் வெளிப்படாததும்கூட

**<u>ததபாவோ நாடீஷு தச்ஷ்ருதேராத்மனி ச - 7</u>**

**ததபாவ:** :- கூறப்படும் கனவின் இன்மைநிலையே தூக்கம்

**நாடீஷு** :- நாடிகளுள்ளில் பிரவேசித்து செல்கிறது

**தச்ஷ்ருதே:** :- அதனை கூறும் ஷ்ருதியானது அவ்வாறு கூறுகின்றது

**ஆத்மனி** :-ஆத்மாவில் நிலைபடுகின்றது என்று.

**ச** :- என்பதால்,ஆத்மாவே தூக்கம் நிலைபடும் இடம்

**<u>அத: ப்ரபோதோ அஸ்மாத் - 8</u>**

**அத:** பரமாத்மாவிலே தூக்கம் நிலைபடுவதால் (தூக்கத்தில் ஜீவன்)

**ப்ரபோத:** :- "ஸத ஆகம்ய" (சத்திலிருந்து திரும்பிவந்தாலும், சத்திலிருந்தே திரும்பிவருகின்றோம் என்று அறிவதில்லை) என்பதான ஷ்ருதியில் தூக்கத்திலிருந்து ஜீவனின் விழிக்கும் நிலை

**அஸ்மாத் :-** இந்த பரமாத்மாவிலருந்தே என்று கூறுகிறது.

**<u>ஸ ஏவ து கர்மானுஸ்ம்ருதிஷப்தவிதிப்ய: - 9</u>**

**ஸ ஏவ து :-** அந்த ஜீவன் (தூங்கும் ஜீவனே விழித்தெழுகிறது)

**கர்மானுஸ்ம்ருதிஷப்தவிதிப்ய: :-** கர்மம் (மீதமுள்ளது)ஆனுஸ்மிருதி (தன்னை குறித்த ஞாபகம்),ஷப்த (சாஸ்திர பிரமாணத்தால் அறியப்படுவது) மற்றும் விதி (கர்மம் மற்றும் உபாசனையினை குறிக்கும் விதி) மூலமாக இவ்வாறே அறியப்படுகிறது.

**<u>முக்தே அர்தஸம்பத்தி: பரிசேஷாத் - 10</u>**

**முக்தே :-** மயக்க நிலையில் இருக்கும் ஜீவன்

**அர்தஸம்பத்தி: :-** பாதி தூக்க நிலையில் இருக்கிறான்

**பரிசேஷாத் :-** மயக்கம், தூக்க நிலையில்லை, கனவு நிலை இல்லை ___ அங்கு விஷயம் அறியப்படாததால், தூக்க நிலை இல்லை அங்கு உடல் நடுக்கம், கண்கள் பிளந்திருத்தல்,, முகம் விகாரம் அடைதல் முதலியவைகாணப்படுவதால், மரணநிலை இல்லை மூச்சு இருப்பதால் உடல் சூடு இருப்பதால் (இதய துடிப்பு) ஆகையால் இது வேறு வழியில்லாததால் (பரிசேஷமாக) ஏற்கப்படுகிறது.

**<u>ந ஸ்தானதோபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி - 11</u>**

**ந :-** இல்லை

**ஸ்தானத: :-** இயல்பாகவோ அல்லது உபாதிகாரணத்தாலோ

**அபி :-** கூட

**பரஸ்ய :-** பரமாத்மாவில்

**உபயலிங்கம் :-** சவிசேஷம் மற்றும் நிர்விசேஷம் (உருவம் கூடியது மற்றும் உருவமற்றது) ஆகிய இரு நிலைகளும்

**ஸர்வத்ர :-** "அஷப்தம்" (சத்தமற்றது, தீண்டலற்றது) முதலான ஷ்ருதி விசேஷங்கள் அற்றதாகவே உபதேசிக்கின்றது.

**ஹி :-** நிச்சயமாக

**<u>ந பேதாதிதி சேன்ந ப்ரத்யேகமதத்வசனாத் - 12</u>**

**ந :-** தவறு, வேதாந்த வாக்கியங்கள் விசேஷங்கள் அற்றதாகவே பரமாத்மாவினை உபதேசிக்கின்றது என்பது

**பேதாத் :-** "சதுஷ்பாத் பிரம்ம" (நான்கு பாதங்களுடையது பிரம்மம்), "ஷோடஷகலா புருஷன்" (பதினாறு கலைகள் உடைய புருஷன்) என்பதான ஷ்ருதியில் பேதமானது (விசேஷமானது) கூறப்பட்டதால்

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** இல்லை

**ப்ரத்யேம் :-** ஒவ்வொரு உபாதியிலும்

**அதத்வசனாத் :-** "யஸ்சாயமஸ்யாம் ப்ருத்வ்யாம்" (எந்த தேஜோமயம், அமிருதமயமான புருஷன் பிருத்வியில் உள்ளாரோ, அவரே இவர் அதுவே ஆத்மா) என்பதான ஷ்ருதியில் பேதமற்ற (விசேஷமற்றதாக) கூறப்பட்டதால்

**<u>அபி சைவமேகே - 13</u>**

**அபி ச :-** அதுமட்டுமல்லாது

**ஏவம் :-** இவ்வாறே, விசேஷத்தை(பேதம்) நிந்திப்பதாகவும் விசேஷமற்றதை (பேதமற்றதை) போற்றுவதாகவும்

**ஏகே :-** சில சாகையில் (கிளை)கூறப்படுகிறது. "ம்ருத்யுமாப்னோதி" (மரணத்திலிருந்து மரணத்தையே அடைகின்றார்எவர் இங்கு பல (பேதம்) உள்ளதுபோல காண்கிறாரோ என்பதா ஷ்ருதியில்

**<u>அரூபவதேவ ஹி தத்ப்ரதானத்வாத் - 14</u>**

**அரூபவத் :-** ரூபம் முதலிய ஆகாரம் அற்றதாகவே பரமாத்மாவை நாம் நிச்சயிக்கவேண்டும்

**ஏவ ஹி :-** இப்படிப்பட்டதாக மட்டும், ரூபம் முதலியவை இருப்பதாக அல்ல

**தத்ப்ரதானத்வாத் :-** "அஸ்தூலம்" (ஸ்தூலமல்லாதது, சூக்குமமல்லாதது) என்பதா ஷ்ருதிகள் இப்படிப்பட்டதாகவே பரமாத்மாவை கூறுவதில் தாத்பர்யம் உடையதால்.

## ப்ரகாஷவச்சாவையர்த்யம் - 15

**ப்ரகாஷவத் :-** உபாதி காரணமாக சூரியன்முதலியதின் பிரகாசமானது வளைந்து, நீண்டுகாணப்படுவதுபோல

**ச :-** உபாதி காரணமாக பரமாத்மா பிருத்வீ முதலிய ஆகாரத்தை (உருவத்தை) அடைந்தது போல காணப்படுகிறது

**அவையர்த்ம் :-** என்பதால், உருவம் கூடியதாகபரமாத்மாவினை குறிக்கும் ஷ்ருதிகள் பிரயோஜானமற்றது அல்ல.

## ஆஹ ச தன்மாத்ரம் - 16

**ஆஹ :-** கூறுகின்றது **ச :-** இதனையே

**தன்மாத்ரம் :-** "யதா ஸைந்தவகன:" (எவ்வாறு உப்புகட்டி எல்லா இடத்திலும் அதே அளவு கறிப்பு உடையதாக உள்ளதோ, அவ்வாறே பரமாத்மா பிரஞ்ஞான கனமே ஆகும்) என்பதான ஷ்ருதிகளும்.

## தர்ஷயதி சாதோ அபி ஸ்மர்யதே - 17

**தர்ஷயதி :-** "அதாத ஆதேஷ:" (அதனால் இதுவே உபதேசம், இது இல்லை இதுஇல்லை என்று) என்பதான ஷ்ருதியும் விசேஷங்களை நிராகரிப்பது மூலம் காண்பிக்கின்றது

**சாதோ :-** அதுபோல

**அபி ஸ்மர்யதே :-** ஸ்மிருதியும் கூட கூறுகின்றது, "அனாதிமத்பரம் ப்ரமம்" (அனாதியான பரமாத்மா ஸத் அல்ல, இந்திரியத்தால் அறியப்படுவதல்ல, அஸத் அல்ல, பரோசக்ஷமானதும் அல்ல) என்று

## அத ஏவ சோபமா ஸீர்யாதிவத் - 18

**அத ஏவ :-** அதனால் தான்,மற்றவற்றை நிராகரிப்பது மூலம் பரமாத்மாவானது உபதேசிக்கப்படுவதால்

**ச உபமா :-** உபமாவும், உதாரணமும்

**ஸீர்யகாதிவத் :-** நீரில் பிரதிபலிக்கும் சூரியனையே என்று

**அம்புவதக்ரஹணாத்து ந ததாத்வம் -19**

**அம்புவத் :-** நீரானது சூரியனிலிருந்து வேறுபட்டதாக அறியப்படுவதுபோல

**அக்ரஹணாத் :-** இங்கு உபாதியனாது வேறுபட்டதாக அறியப்படாததால்

**து :-** நிச்சயமாக **ந :-** இல்லை

**ததாத்வம் :-** உதாரணம் - உதாரிக்கப்பட்டது சமமாக இல்லை.

**வ்ருத்திஹ்ராஸபாக்த்வமந்தர்வாவாதுபயஸாமஞ்ஜஸ்யாதேவம் - 20**

**வ்ருத்திஹ்ராஸபாகத்வம் :-** நீரில் தோன்றும் சூரியனின் பிரதிபிம்பம் நீர் கூடுதல்மற்றும் குறைதலுடன் சம்பந்தபட்டதுபோல இருப்பதுபோல

**ஏவம் :-** உபாதியின் வளர்ச்சி மற்றும் தேய்தலுடன் சம்பந்தப்பட்டதுபோல

**அந்தர்பாவாத் :-** விசேஷமற்றதான பரமாத்மாவும் உபாதியுடன் கூடியிருப்பதால் காணப்படுவதால்

**உபயஸாமஞ்ஜஸ்யாத் :-** உதாரணம் - உதாரிக்கப்பட்டது இரண்டும் சமமானதாக இருப்பதால்

**ஏவம் :-** இப்படியே காணப்படுகின்றது

**தர்ஷணாச் ச - 21**

**தர்ஷணாத் :-** "அனேன ஜீவேன" ( இந்த ஜீவனில் நான் புகுந்து நாம - ரூபத்தினை சிருஷ்டிப்பேன்) என்பதான ஷ்ருதியில் பரமாத்மாவே உடலினுள் பிரவேசிப்பதாக காணப்படுவதால்

**ச :-** பரமாத்மா விசேஷமற்றது ஆகும்.

**ப்ரக்ருதைதாவத்வம் ஹி ப்ரதிஷேததி ததோ ப்ரவீதி ச பூய: - 22**

**ப்ரக்ருத :-** இங்கு இந்த பிரகரணத்தில் (தலைப்பில்) "த்வே வாவ ப்ரம்மணோரூபே" (இரண்டு வகைப்பட்டது பிரம்மத்தின் ரூபம் ஒன்று மூர்தம் (உருவமுடையது) மற்றது அமூர்த்தம் (உரூவமற்றது) என்பதான ஷ்ருதியில்

**ஏதாவத்வம் :-** பரமாத்மா மூர்தம் மற்றும் அமூர்தம் ஆகிய வரையறையினை உபதேசித்து

**ஹி :-** நிச்சயமாக அதமையே

**ப்ரதிஷேததி :-** "நேதி நேதி" (இது இல்லை.இதுஇல்லை) என்பதாக நிராகரிக்கின்றது

**ததோ :-** அதற்கு பின்னர்

**ப்ரவீதி :-** கூறுகின்றது

**ச பூய: :-** இதனையே மீண்டும், "ந அன்யத்பரமஸ்தி" (இதனை காட்டிலும் வேறொன்று சிரேஷ்டமானது (மேன்மையானது) இல்லை) என்றும் அதனால், சூன்யவாதம் இங்கு கூறப்பட்டதாக ஆகாது.

**<u>ததவ்யக்தமாஹ ஹி - 23</u>**

**தத் :-** அந்த பரமாத்மா

**அவ்யக்தம் :-** அவியக்தமானது (தோற்றமடையதாது)

**ஆஹ :-** என்று கூறுகின்றது "ந சக்ஷுஷா க்ருஹ்யதே" (அதனை கண்களால் கான இயலாது) என்பதான ஷ்ருதியும்

**ஹி :-** தீர்மாணமாக

**<u>அபி ச ஸம்ராதனே ப்ரத்யக்ஷானுமானாப்யாம் - 24</u>**

**அபி ச :-** அதுமட்டுமல்லாமல்

**ஸம்ராதனே :-** பக்தி, தியானம், பிரணிதானம் என்பதான சம்ராதனை மூலம் யோகிகள்இந்த அவியக்த ஆத்மாவினையே

**ப்ரத்யக்ஷானுமானாப்யாம் :-** ப்ரத்யக்ஷம் - ஷ்ருதி மற்றும்அனுமானம் - ஸ்மிருதி மூலமாகவும். "கஷ்சித்தீர:" (மோக்ஷமடைய விரும்பும் ஒரு தீரன்) என்பதான ஷ்ருதியும், "யம் வினித்ரா"(தூக்கம் என்ற தமோகுணமற்ற) முதலான ஸ்மிருதியும் இதனையே கூறுகின்றது

**<u>ப்ரகாஷாதிவச்சாவைஷேஷ்யம் ப்ரகாஷஸ்ச கர்மண்யப்யாஸாத் - 25</u>**

**ப்ரகாஷாதிவத் :-** பிரகாசம் (வெளிச்சம்) முதலியவை விரல் முதலியவை உபாதிகளிலிருந்து வேறுபட்டதானாலும் பிரிவற்றதால் (ஒன்றுபோல) காணப்படுவதுபோல

**ச :-** இங்கும், பரமாத்மாவிலும்

**அவைஷேஷ்யம் :-** வேறுபடாததே (பிரிவுபடாததே)

**ப்ரகாஷஸ்ச :-** பரமாத்மாவும்

**கர்மணி :-** தியானம் முதலியதில்வேறுபட்டது போன்று காணப்பட்டாலும்

**அப்யாஸாத் :-** "தத்வமஸி" (அது நீ ஆகிறாய்) என்பதான ஷ்ருதி பிரிவற்றதாக மீண்டும் மீண்டும் கூறுவதால்

## அதோ அனந்தேன ததாஹி லிங்கம் - 26

**அத: :-** பிரிவு உபாதியினால் உண்டாவது அது வித்யை மூலம் நீங்குவதால்

**அனந்தேன :-** அனந்தமான (வரையறையற்ற) பரமாத்மாவுடன் ஒன்றாகிறார் (பிரிவு படாமலிருக்கிறார்)

**ததா :-** அப்படிப்பட்டதாகவே

**ஹி :-** நிச்சயமாக

**லிங்கம் :-** "ஸ யோ ஹ வை" (எவரொருவர் அந்த பரமாத்மாவை அறிகின்றரோ அவர் அந்த பரமாத்மாவை அறிகின்றாரோ அவர் அந்த பரமாத்மாவகவே ஆகின்றார் (இருக்கின்றார்) என்பதான ஷ்ருதியும் இதனையே உணர்த்துகின்றது.

## உபயவ்யபதேஷாத்வஹிகுண்டலவத் - 27

**உபயவ்யபதேஷாத் :-** தியானிப்பவர் ___ தியானிக்கப்படுவது என்று பேதமமும் (பிரிவும்), "தத்வமஸி" என்பது மூலம் அபேதமும் (பிரிவற்ற நிலையும்) கூறப்படுவதால்

**து :-** இங்கு விசேஷம் இருக்கின்றது

**அறிகுண்டலவத் :-** அஹி ___ பாம்பு என்பதாக அபேதமும், அதன் நீலம், வளைவு முதலிய ஆகாரமாக பேதமும் கூறப்படுவதுபோல

## ப்ரகாஷாஷ்ரயவத்வா தேஜஸ்த்வாத் - 28

**ப்ரகாஷாஷ்ரயவத் :-** ப்ரகாஷம் அதன் ஆஷ்ரயமான (இருப்பிடமான) சூரியனில் எவ்வாறு பேதமானது(பிரிவு) இல்லாததுபோல

**வா :-** இங்கும்

**தேஜஸ்தவாத் :-** இரண்டிலும் பிரகாசமானது இருந்தாலும் வேறுபட்டதுபோல கூறப்படுவதுபோல, ஜீவன் மற்றும் ஈஷ்வரனில் பேதம் மற்றும் அபேதம் ஏற்கவேண்டும்.

## பூர்வவத்வா - 29

**பூர்வவத் :-** "ப்ரகாஷாதிவச்சாவைஷேஷ்யம்" என்பதான சூத்திரத்தில் கூறுப்பட்டதுபோல, பேதம் கற்பனையானது அபேதம் - பாரமார்திகமானது என்பது போல

**வா :-** இங்கம் நாம் புரிந்துகொள்ளவேண்டும்

## ப்ரதிஷேதாச்ச - 30

**ப்ரதிஷேதாத் :-** "நான்யதோஸ்தி த்ரஷ்டா" (இதனை காட்டிலும் வேறு பார்ப்பான் இல்லை) என்பதான ஷ்ருதி பரமாத்மாவினை காட்டிலும் வேறு சேதனம் அற்றதையும் "நேதி நேதி" என்பதா ஷ்ருதி இந்த ஜகத்தினை நிராகரிப்பதாலும்

**ச :-** இரண்டற்றதாக பரமாத்மா மட்டுமே உள்ளது என்பது நிரூபணமாகின்றது

## பரமத: ஸேதுரன்மானஸம்பந்தவ்யபதேஷேப்ய: - 31

**பரம் :-** மற்ற விஷயங்கள்

**அத: :-** பரமாத்மாவை காட்டிலும் வேறானதாக உள்ளது

**ஸேதுரன்மானஸம்பந்தவ்யபதேஷேப்ய: :-** ஸேது ___"ய ஆத்மா ஸேதுர்வித்ருதி:" (இந்த ஆத்மா பாலம் போன்று தாரணை செய்வது வேறுபடுத்துவது) என்று கூறப்பட்டதாலும்,

**உன்மான** - "ததேதத்ப்ரம்ம சதுஷ்பாதஷ்டாஷபம் ஷோடஷகலம்" (இந்த பிரம்மமானது நான்கு பாதம் உடையது. ஏட்டு குலம்புடையது, பதினாறு கலைகள் உடையது) என்பதா ஷ்ருதி வரையறை உடையதாக பரமாத்மாவை கூறுவதாலும்

**ஸம்பந்த** - "ஸதா ஸௌம்யா ததா ஸம்பன்னோ பவதி" (ஸத்துடன் ஸௌம்யனே, சேர்ந்திருப்பவனாக ஆகின்றார்) என்பதா ஷ்ருதி சம்பந்தத்தினையும்

**பேத** -"ய ஏஷோ அந்தர் ஆதித்யே" (எவர் இந்த சூரியனில்இருக்கிறரோ) "அந்தரக்ஷுணி" (கண்களுக்குள் இருக்கிறாரோ) என்பதா ஷ்ருதி பேதத்தினையும்

**வ்யபதேஷேப்ய:** - கூறுவதாக இருப்பதால்

## ஸாமான்யாத்து - 32

**ஸாமான்யாத் :-** பாலம் நீரினை வகைப்படுத்துவது போல, பரமாத்மா ஜகத்தினை வகைப்படுத்துகின்றது

**து :-** என்பதால், சமானத்தன்மையே இங்கு கூறப்பட்டது, பரமாத்மாவினை காட்டிலும் வேறு பிரிவற்ற (வரையற்ற) விஷயத்தை நிரூபிக்க அல்ல

## புத்யர்த: பாதவத் - 33

**புத்யர்த: :-** "சதுஷ்பாத" முதலிய கற்பனையானது உபாசனைக்காக

**புாதவத் :-** பிரம்மத்தின் பிரதீகமான (உருவகம்) மனதில் உபாஸனைக்காக வாக்கு முதலிய பாதங்களானது கற்பனை செய்யப்பட்டது போன்று.

## ஸ்தானவிஷேஷாத் ப்ரகாஷாதிவத் - 34

**ஸ்தானவிஷேஷாத் :-** உபாதி காரணமாக பரமாத்மாவில் சம்பந்தம் மற்றும் பேதமானது கூறப்படுகிறது.

**ப்ரகாஷாதிவத் :-** பிரகாசம் முதலியவைப்போல

## உபபத்தேஸ் ச - 35

**உபபத்தே: :-** "ஸ்வமபீதோ பவதி" (தன்னை அடைந்து ஆகின்றது) என்பதான ஷ்ருதி பிரிவற்ற நிலையினை கூறுவதாலும்

**ச :-** சம்பந்தம் மற்றும் பேதமானது இங்கு முக்கியமானதாக (முக்கிய பொருளுடையதாக) ஏற்பது இயலாது

## ததான்யப்ரதிஷேதாத் - 36

**ததா :-** அதுபோல, ஸேது முதலியது மூலம் வேறு விஷயம் கூறப்படுவது என்று இல்லை

**அன்யப்ரதிஷேதாத் :-** "ஆத்மைவாதஸ்தாத" (ஆத்மாவே கீழே உள்ளது) என்பதான ஷ்ருதிகளும் வேறு விஷயத்தினை நிராகரிப்பதால், பரமாத்மா பிரிவற்றது (இரண்டற்றது) என்றாகிறது.

<u>**அனேன ஸர்வகதத்வமாயாமஷப்தாதிப்ய: - 37**</u>

**அனேன :-** ஸேது முதலியதின் முக்கியத்தன்மையும், வேறு விஷயம் இருப்பதும் நிராகரிக்கப்பட்டதால்

**ஸர்வகதத்வம் :-** பரமாத்மா சர்வகதம் (எல்லா இடத்திலும் வியாபித்திருப்பது, வரையற்றது) என்பது நிரூபணமாகின்றது.

**ஆயாமஷப்தாதிப்ய: :-** "ஆகாஷவத்ஸர்வகதஸ்ச நித்ய:" (ஆகாயத்தை போன்று வியாபித்திருப்பதும் நித்தியமானது) என்பதானஷ்ருதியின் மூலமும் பரமாத்மா வியாபித்திருப்பது என்று நிரூபணமாகின்றது.

<u>**ஃபலமத உபபத்தே: - 38**</u>

**ஃபலம் :-** கர்மத்தின் பலனானது

**அத: :-** ஈஷ்வரன் மூலமாகவே அடையப்படுகின்றது

**உபபத்தே: :-** அவரே சிருஷ்டி, ஸ்திதி மற்றும் சம்ஹாரம் செய்பவர் என்பது முன்பே நிரூபிக்கப்பட்டதால் இவ்வாறே அடையப்படுகின்றது.

<u>**ஷ்ருதத்வாச்ச - 39**</u>

**ஷ்ருதத்வாத் :-** "ஸ வா ஏஷ மஹானஜ ஆத்மா அன்னாதோ வஸீதான:" (இந்த மஹானான பிறப்பற்ற ஆத்மாவானது அன்னத்தை உண்பது, கர்மத்தின் பலனைத்தருவது) என்பதான ஷ்ருதியும்

**ச :-** ஈஷ்வரன் மூலம் பலன் அடையப்படுவதை கூறுவதாலும்

<u>**தர்மம் ஜைமினிரத ஏவ - 40**</u>

**தர்மம் :-** "சோதனா லக்ஷணோ அர்தோ தர்ம:", "யாகாதிரேவ தர்ம" என்பதாக யாகம் முதலியவையான தர்மங்களே

**ஜைமினி: :-** ஆசாரியர் ஜைமினி:

**அத: :-** அதே ஷ்ருதி மற்றும் தர்கத்தை வைத்து

**ஏவ :-** தர்மமே பலன்தருவதாக கூறுகின்றார்

**பூர்வம் து பாதராயணோ ஹேதுவ்யபதேஷாத் - 41**

**பூர்வம் :-** முன்பு கூறப்பட்ட, ஈஷ்வரனையே பலன் தருபவராக

**து :-** ஏற்கின்றார். தர்மத்தை அல்ல

**பாதராயண: :-** ஆசாரியர் பாதராயணர்

**ஹேதுவ்யபதேஷாத் :-** "ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி" (நல்ல நிலை அடைவிக்க விரும்புபவர் மூலம் நல்ல கர்மத்தை செய்விக்கின்றார்) "அன்னாதோ வஸீதான:" (அன்னத்தை உண்பவர் கர்ம பலனை தருபவர்) என்பதான ஷ்ருதிகள் மூலமும் ஸ்மிருதிகள் மூலமாகவும் ஈஷ்வரனே பலன் தருபவராக கூறப்பட்டதால்.

## மூன்றாம் அத்யாயம் - மூன்றாம் பாதம்

**ஸர்வவெதாந்தப்ரத்யயம் சோதனாத்யவிஷேஷாத் -1**

**ஸர்வவேதாந்த ப்ரத்யயம் :-** வேதாந்தத்தில் கூறப்பட்ட உபாசனைகளானது வேறுபட்டது அல்ல

**சோதனாத்யவிஷேஷாத் :-** அதில் காணப்படும் தூண்டுதல் முதலியவை வேறுபட்டதாக இல்லாததால்

**பேதான்நேதி சேன்நைகஸ்யாமபி - 2**

**பேதாத் :-** யாகமானது திரவியம் மற்றும் தேவதை காரணத்தால் வேறுபடுவதுபோல, இங்கும் வேத்யமானது (அறிபடுவிஷயம்) வேறுபடுவதால் உபாசனை வேறுபடுகிறது.

**ந :-** ஒன்றானது அல்ல

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** என்பத தவறு

**ஏகஸ்யாமபி :-** ஒடே உபாசனையிலும் இப்படிப்ட்ட குணங்களின் வேறுபாடு காணப்படுவதால்

**ஸ்வாத்யாயஸ்ய ததாத்வேன ஹி ஸமாசாரே அதிகாரச்ச ஸவவச்ச தன்நியம: - 3**

**ஸ்வாத்யாயஸ்ய :-** முண்டகோபநிஷத்தில் கூறப்பட்ட ஷுரோ விரதம் சுவாத்யாயத்தின் தர்மம் உபாசனையுடையது அல்ல

**துதாத்வேன :-**அப்படிப்பட்டதாகவே அது விதிக்கப்பட்டடதாக காணப்படுகிறது

**ஹி :-** நிச்சயமாக

**ஸமாசாரே :-** விரதத்தினை கூறும் வேத பாகமானத அவ்வாறு இருப்பதாலும்

**அதிகாராத் :-** "நைதத் அசீர்ணவ்ரதோ அதீத" (இதனை விரதத்தை கடைபிடிக்காதவர் படித்தல் கூடாது) என்பதான பகுதியில் இருப்பதாலும்

**ச :-** அதுபோல

**ஸவவத் :-** சவ ஹோமத்தினைப் போல

**ச :-** கூட என்று

**தன்நியம: :-** அதர்வ வேதத்தினரின் நியமம்

**தர்ஷயதி ச - 4**

**தர்ஷயதி :-** "ஸர்வே வேதா யத்பதம்" (எல்லா வேதங்களும் எந்த பதத்தினை குறித்து கூறுகின்றதோ) என்பதான ஷ்ருதிகள்

**ச :-** வேதாந்தத்தில் கூறப்பட்ட உபாசனைகளானது வேறுபடாதது என்று கூறுகின்றது.

**உபஸமஹாரோ அர்தாபேதாத்விதிஷேஷவத் ஸமானே ச - 5**

**உபஸம்ஹார: :-** குணங்களை (வெவ்வேறு இடத்தில் கூறப்பட்ட) சம்பந்தப்படுத்தி ஏற்கவேண்டும்

**அர்தாபேதாத் :-** உபாசனையால் அடையப்படும் உபாஸ்யமானது (பலனானது) எல்லா இடங்களிலும் ஒன்றாக காணப்படுவதால்

**விதிஷேஷவத் :-** அக்னிஹோத்ரமானது ஒரு இடத்தில் கூறப்பட்டாலும் அதன் குணங்கள் எவ்வாறு சம்பந்தபடுத்தி ஏற்கப்படுகிறதோ

**ஸமானே ச :-** அதுபோலவே உபாசனையில் ஏற்பது வேண்டும்.

## அன்யதாத்வம் ஷப்தாதிதி சேன்நாவிஷேஷாத் - 6

**அன்யதாத்வம் :-** உபாசனையானதுவேறுபட்டதாக ஏற்கவேண்டும்.

**ஷப்தாத் :-** "த்வம் ந் உதகாய" (நீ எங்களுக்காக உத்கானம் செய்வாயாக),"தமுத்கீதமுபாஸாஞ்சகிரிரே" (அதனையே (பிராணன்) உத்கீதமாக உபாசனை செய்தார்கள்) என்பதான ஷ்ருதிகளால்

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** அது தவறு

**அவிஷேஷாத் :-** இந்த ஷ்ருதிகளில் எந்த விசேஷமும் காணப்படாததால், உபாசனையானது வேறுபட்டது அல்ல.

## ந வா ப்ரகரணபேதாத் பரோவரீயஸ்தவாதிவத் - 7

**ந :-** இல்லை

**வா :-** நிச்சயம் உபாசனை ஒன்றாக இருத்தல்

**ப்ரகரணபேதாத் :-** பிரகரணங்கள்வேறுபடுவதால்

**பரோபரீயஸ்தவாதிவத் :-** எவ்வாறு, "ஏஷ பரோவரீயான் உத்கீத:" (இந்த உத்கீதமானது மேன்மையானது, அன்ந்தமானது) என்பதா ஷ்ருதியில் கூறப்பட்ட பரோவரீயம் (மேன்மையானது) என்ற குணம் கூடிய உத்கீத உபாசனை, கண், சூரியனில் உள்ள ஹிரண்யஷ்ம்ரு(தங்க முடி) முதலியவையான குணம் கூடிய உத்கீத உபாசனையினை காட்டிலும் வேறுபட்டது.

## ஸஞ்ஞாதஸ்சேத்ததுக்தமஸ்தி து ததபி - 8

**ஸஞ்ஞாத: :-** உத்கீதம் என்ற பெயரானது இரண்டஇடத்திலும் ஒன்றானது என்பதால் உபாசனை ஒன்றாகும்.

**சேத் :-** என்று கூறினால்

**ததுக்தம் :-** "ந வா ப்ரகரணபேதாத்" (3/3/7) என்ற சூத்திரத்தில் இதற்கு பதில் கூறப்பட்டது

**அஸ்தி து ததபி :-** அக்னிஹோத்ரம் முதலிய கர்மங்கள் வேறுபட்டதாக காணப்பட்டாலும், அதுவும் காடக சாகையில் காணப்படுவதால், காடகம் என்ற பெயரையே அடையவேண்டும் என்றாகும். (அதனால் பிரகரணம் வேறுபடாது இருந்தால் பெயர் ஒன்றானால் உபாசனையும் ஒன்றாகும்)

## வ்யாப்தேஷ்ச ஸமஞ்ஜஸம் - 9

**வ்யாப்தே: :-** ரிக், யஜுர் மற்றும் சாம வேதத்தில் ஓம்காரமானத கூறப்பட்டுள்ளதால் எந்த ஓங்காரமானது உபாசிக்கப்படவேண்டும் என்ற நிலையில் உத்கீத அவயவமான ஓங்காரம் என்று

**ச :-** அதனால் அத்யாசம், அபவாதம் மற்றும் ஐக்கியம் சரியல்ல என்பதால்

**ஸமஞ்ஜஸம் :-** இந்த நிலையே தோஷமற்றது, சரியானது

## ஸர்வாபேதாதன்யத்ரேமே - 10

**ஸர்வாபேதாத் :-** எல்லா சாகையிலும் (கிளையிலும்) பிராணவிஞ்ஞானமானது பிரிவற்றதாக கூறப்பட்டதால்

**அன்யத்ர :-** மற்ற சாகையிலும்இவ்வாறே

**இமே :-** வசிஷ்ட முதலிய குணம் கூடியதாக ஏற்கவேண்டும்.

## ஆனந்தாதய: ப்ரதானஸ்ய - 11

**ஆனந்தாதய: :-** ஆனந்தத்தன்மை முதலிய குணங்கள் எல்லா இடங்களிலும் ஏற்கவெண்டும் (உபாசனையில்)

**ப்ரதானஸ்ய :-** பிரம்மமே எல்லா சாகையிலும் அறிபடுவிஷயமாக கூறப்பட்டதால்.

## ப்ரியஷிரஸ்த்வாதயப்ராப்திருபசயாயபசயௌ ஹி பேதே -12

**ப்ரியஷிரஸ்த்வாத்யப்ராப்தி: :-** ஒரு சாகையில் கூறப்பட்ட ப்ரியஷிரஸ்த்வாதி தர்மங்கள் மற்ற இடங்களில் ஏற்கப்படுவது இயலாது

**உபசயாபசயௌ :-** ஏற்ற —— தாழ்வு உண்டாகும்

**ஹி :-** பிரியம், மோதம், பிரமோதம் மற்றும் ஆனந்தம் ஒவ்வொன்றும், மற்ற அனுபவிப்பவரை சம்பந்தப்படுத்தி பார்க்கும் போதும்

**பேதே :-** என்பதால் பேதத்திலேயே இருத்தல் இயலும், இரண்டற்ற பரமாத்மாவில் இல்லை.

## இதரே த்வர்தஸாமான்யாத் - 13

**இதரே :-** ஆனந்தம் முதலிய தர்மங்கள்

**து :-** நிச்சயமாக, மற்ற இடங்களிலும் சம்பந்தம் அடையும் (ஏற்கப்படும்)

**அர்தஸாமான்யாத் :-** பரமாத்மா எல்லா இடங்களிலும் இரண்டற்றதானதே.

## ஆத்யானாய ப்ரயோஜனாபாவாத் - 14

**ஆத்யானாய :-** "இந்திரியயேப்ய: பரா ஹ்யார்தா" (இந்திரியங்களை காட்டிலும் விஷயம் சூக்குமமானது) என்பதா ஷ்ருதியில் தியானம் மூலம் சரியான அறிவு அடைய புருஷன்பரமாத்மாவோடு இரண்டற்றதாக கூறப்பட்டது, விஷயம் முதலியவை அல்ல

**ப்ரயோஜனபாவாத் :-** அவை (விஷயம் முதலியவை) பரமாக நிரூபத்தில் எந்தா பிரயோஜனமும் இல்லை.

## ஆத்மஷப்தாச்ச - 15

**ஆத்மஷப்தாத் :-** "ஏஷ ஸர்வேஷு பூதேஷு கூடோத்மா" (இங்குள்ள எல்லா ஜீவனிலும்அந்த ஆத்மாவே பிரகாசிக்கின்றது) என்பதான ஷ்ருதியில் இங்கு கூறப்பட்ட புருஷன் ஆத்மா என்று கூறப்பட்டதால்

**ச :-** வேறு பிரமாணத்தாலும் ஆத்மா அறியப்பட இயலாதது என்றும் கூறியதாலும் புருஷனே பரமாக கூறப்பட்டது

## ஆத்மக்ருஹீதிரிதரவதுத்தராத் - 16

**ஆத்மக்ருஹீதி :-** "ஆத்மைவேதமக்ர ஆஸீத்" (ஆத்மாவே சிருஷ்டிக்க முன்னர்இருந்தது) என்பதான ஷ்ருதியில் ஆத்மா என்பது பரமாத்மாவே

**இதரவத் :-** மற்றவைபோல, "ஆத்மன ஆகாஷ:" (ஆத்மாவிலிருந்து ஆகாயம் தோன்றியது) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்டதுபோல

**உத்தராத் :-** "ஸ ஈக்ஷத" (அது பார்த்தது) என்று இதற்குமேலே கூறப்பட்ட வாக்கியத்தில் பரமாத்மாவே குறிப்பிடப்பட்டதுபோல இங்கும் பரமாத்மாவே குறிப்பிடப்பட்டது என்று அறியவேண்டும்.

## அன்பயாதிதி சேத்ஸ்யாதவதாரணாத் - 17

**அன்வயாத் :-** அன்வயம் (வாக்கியங்களை சம்பந்தம்) செய்து பார்கும்போது பரமாத்மா குறிப்பிடப்பட்டதாக அறியப்படவில்லை

**இதி சேத் :-** என்று கூறினால்

**ஸ்யாத் :-** பரமாத்மாவே குறிப்பிடப்பட்டது

**அவதாரணாத் :-** "ஆத்மாஎ இதம்" (ஆத்மாவேஇதம்)என்பதான ஷ்ருதியில் ஆத்மா இரண்டற்றது, பிரிவற்றது என்பதே தீர்மாணமாக கூறப்பட்டதால்.

## கார்யாக்யானாதபூர்வம் - 18

**கார்யாக்யானாத் :-** "த்விஜோ நித்யமபஸ்பர்ஷேத்" (இருபிறப்பாலர் நித்தியம் தூய்மைசெய்ய தீண்டவேண்டும்)என்பதான ஸ்மிருதி எவ்வாறு ஆசமனத்தை கர்மத்தின்அனுஷ்டானத்தின் தூய்மைக்காக என்பதுபோல

**ஆபூர்வம் :-** "ஷ்ரோத்ரியா அஷிஷ்யந்த ஆசமந்தி" (ஷ்ரோதிரியர்கள், உணவு உண்ணும் முன்னர். உண்ட பின்னர் ஆசமனம் செய்கின்றனர்) என்பதான ஷ்ருதி பிராணவித்யையில் ஆசமனத்தை அன்க்தா (அக்னிதன்மையற்ற) நிலையினை அங்கமாக அபூர்வத்திற்கு விதிக்கின்றது.

## ஸமான ஏவம் சாபேதாத் -19

**ஸமானே :-** ஒரு சாகையில் உண்டானது இயலும்

**ஏவம் :-** வெவ்வேறு சாகையில் ஒரு வித்யையின் குணங்களானது சம்பந்தப்படுத்தி ஏற்பதுபோல

**அபேதாத் :-** உபாசனைக்கு ஏற்கப்பட்டதில்பிரிவினை இருப்பதால்

**ஸம்பந்தாதேவமன்யத்ராபி -20**

**ஸம்பந்தாத் :-** ஒரே சாகையில் கூறப்பட்ட ஷாண்டில்ய வித்யையில் எவ்வாறு ஒரே வித்யை என்பதால் குணங்களானது சம்பந்தம் செய்து ஏற்கப்பட்டதோ

**ஏவம் :-** அவ்வாறே

**அன்யத்ராபி :-** மற்ற இடங்களிலும், ஸத்யவித்யாவிலும் ஏற்பதுஇயலும்.

**ந வா விஷேஷாத் - 21**

**ந வா :-** இல்லை,இரண்டும் (உபநிஷத்) இரண்டு இடத்தில் இருப்பது என்பது

**விஷேஷாத் :-** உபாசனையானது ஒரு ஸ்தான விசேஷத்தோடு சம்பந்தப்பட்டதாக இருப்பதால்.

**தர்ஷயதி ச - 22**

**தர்ஷயதி :-** "தஸ்மையதஸ்ய ததேவ ரூபம்" (அந்த இந்த கண்ணில் இருக்கும் புருஷனுக்கு அதுவே ரூபம்) என்பதான ஷ்ருதியிலும் இவ்வாறே கூறப்பட்டுள்ளது

**ச :-** என்பதாலும்,இரண்டு உபநிஷதும்(வித்யையும்) வேறுபட்டது ஆகும்.

**ஸம்ப்ருதித்யுவ்யாப்த்யபி சாத: - 23**

**ஸம்ப்ருதித்யுவ்யாப்தி :-** ஸம்பருதி, த்யுவியாப்தி முதலிய தர்மங்களை ஷாண்டில்ய வித்யையில் ஏற்றல் கூடாது

**அபி ச :-** அதுமட்டுமல்லாமல்,ஒரே பிரம்மமும் வெவ்வேறு வகையில் உபாசனை செய்யப்படுவத இயலும்

**அத: :-** ஆயதன (உபாசனை செய்யும் இடம்) விசேஷமாக கூறப்பட்டதால்

**பருஷவித்யாயாமிவ சேதரேஷாமனாம்னானாத் - 24**

**புருஷவித்யாயாம் :-** தாண்டி முதலிய பிராம்மணத்தில் புருஷவித்யையில் புருஷன் யஞமாக கற்பனை செய்யப்படுவது

**இவ :-** என்பதுபோல  **ச :-** இங்கும்

**இதரேஷாம் :-** தைத்திரீயத்தில் கூறப்பட்ட புருஷவித்யையிலும்

**ஆனாம்னானாத் :-** கூறப்படாததால், அங்கு கூறப்பட்ட (தாண்டி) புருஷ யஞ் தர்மங்களானது தைத்திரீயத்தில் ஏற்பது இயலாது.

**<u>வேதாத்யர்தபேதாத் - 25</u>**

**வேதாதி :-** "ஸர்வம் ப்ரவித்" (எதிரியின் எல்லா உருபுகளையும் அழிக்கவும்) என்பதான மந்திரமும் அதன் கர்மங்களும் வித்யையில் ஏற்பது இயலாது

**அர்தபேதாத் :-** வேதமுதலிய பொருளானதுடன் எந்த சம்பந்தமும் இல்லாததால்

**<u>ஹானௌ தூபாயஷப்தஷேஷத்வாத் குஷாச்சந்தஸ்துத்யுபகானவத்ததுக்தம் - 26</u>**

**ஹானௌ :-** பிரம்மஞானத்தை அடைந்தவரின் கடைசி காலத்தில் பாவம் மட்டுமே அழிவதாக கூறும் ஷ்ருதிகளில்

**து :-** அவரின் மகன் முதலியவர்களால் அது ஏற்கப்படுவதாகவும் ஏற்கவேண்டும்

**உபாயனஷப்தஷேஷத்வாத் :-** உபாயம் (ஏற்றல்) சொல் ஹான (விடுதல்) சொல்லின் அங்கமாக கூறப்பட்டுள்ளதால்

**குஷச்சந்தஸ்துத்யுபகானவத் :-** பூர்வமீமாம்ஸையில் கூறப்பட்ட குஷம், சந்தஸ், ஸ்துதி மற்றும் உபகானம் போன்று

**<u>ததுக்தம்</u> :-**"அபிது வாக்யசேஷத்வர்" என்ற ஜைமினி சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

**<u>ஸாம்பராயே தர்தவ்யாபாவாத்ததா ஹ்யன்யே - 27</u>**

**ஸாம்பராயே :-** உடலை விடும்போது வித்யையின் சாமார்த்தியத்தில் புண்ணிய ___ பாவத்தின் அழிவானது உண்டாகின்றது

**தர்தவ்யாபாவாத் :-** அந்த வித்வான்களுக்கு நடுவில் (இடையில்) அடையப்படவேண்டியது எதுவும் இல்லததால்

**ததா :-** அப்படிப்பட்டதாகவே

**ஹி** :- நிச்சயமாக

**அன்யே** :- வேறு சாகையில் "அஷ்வ இவ ரோமாணிவிதூய பாபம்" (குதிரை தன் மியிரினை விடுவதுபோல, வித்வான்கள்பாவத்தை விடுகிறார்கள்) என்று காணப்படுகின்றது.

**சந்தத உபயாவிரோதாத் - 28**

**சந்தத:** :- உயிருள்ளவர் தன்னுடைய விருப்பம்போல வித்யையினை அனுஷ்டானம் செய்யலாம், அதனால் அவர் உயிருள்ளபோதே கர்மமானது அழிவடைகின்றது.

**உபயாவிரோதாத்** :- இவ்வாறு நியாயமாகவும், தாண்டி முதலிய ஷ்ருதியில் இரண்டிற்கும் எந்த விரோதம் இல்லாதும் ஆகின்றது.

**கதேரர்தவத்வமுபயதா அன்யதா ஹி விரோத: - 29**

**கதே:** :- தேவயான வழியினை

**அர்தவத்வம்** :- அடைவது என்பது

**உபயதா** :- பிரிவாக அடைய முடியும், சகுண வித்யையில் இருப்பதாகவும், நிர்குண வித்யையில் இல்லை என்றும்

**அன்யதா** :- இல்லாவித்டால், எல்லாவிடத்திலும் தேவயானத்தை ஏற்றால்

**ஹி** :- நிச்சயமாக

**விரோத:** :- "வித்வான் புண்யபாபே விதூய" (வித்வான் புண்ணிய ___ பாவத்தினை விடுத்து) என்ற ஷ்ருதியோடு விரோதம் உண்டாகும்.

**உபபன்னஸ்தல்லக்ஷனார்தோ பலப்தேர்லோகவத் - 30**

**உபபன்ன:** :- பிரிவாக தேவயான மார்கத்தில் (வழியில்) செல்வது என்று ஏற்பது நியாயமே

**தல்லக்ஷணார்தோபலப்தே:** :- செல்கைக்கு காரணமான பொருளானது (பலன்) சகுண உபாசனையில் காணப்படுகின்றது.

**லோகவத் :-** பாலமானது அது இணைக்கும் கிராமத்தை அடைதற்கு உதவியாக இருக்கும், ஆனால், அது ஆரோகியத்தினை அடைய உதவியாக இருப்பது இல்லை என்பதுபோல

## அனியம: ஸாவாஸாமவிரோத: ஷப்தானுமானாப்யாம் - 31

**அநியம: :-** எந்தவித்யாசமும்இல்லாமல்

**ஸர்வாசாம் :-** சகுண உபாசனை செய்பவருகெலலாம் தேவயானம் அடையப்படவேண்டும்

**அவிரோத: :-** இப்படி ஏற்பதால், இந்த பிரகரணத்தோடு எந்த விரோதமும் உண்டாகாது

**ஷப்தானுமானாப்யாம் :-** "தத்ய இத்தம் விது" (எவர் இந்த பஞ்சாக்னியினை இவ்வாறு அறிகின்றாரோ) என்பதான, ஷ்ருதியும். "ஷுக்ல க்ருஷ்ணே கதி ஹ்யேதே" (தேவயானம் மற்றும் பித்ருயானம்) என்பதான ஸ்மிருதியும் இதனையே கூறுகின்றது.

## யாவததிகாரமவஸ்திதிராதிகாரிகாணாம் - 32

**யாவத் அதிகாரம் :-** எதுவரை பிராரப்த கர்மம் உள்ளதோ

**அவஸ்திதி: :-** அதுவரை நிலைபடுதல் உண்டாகும்

**ஆதிகாரிகாணாம் :-** சரியான அறிவினால் கர்மமானது அழிந்த ரிஷி அபாந்தரதமர் முதலிய தத்துவஞானிகளுக்கு

## அக்ஷரதியாம் த்வவரோத: ஸாமான்யதத் பாவாப்யாமௌபஸதவத்துக்தம் - 33

**அக்ஷரதியாம் :-** பரமாத்மாவினை குறிப்பதான விசேஷமான பிரதிஷேகமான "அஸ்தூல, அனணு" முதலியவை

**து :-** நிச்சயம், எல்லா இடத்திலும்

**அவரோத: :-** ஏற்க வேண்டும்

**ஸாமான்யதத்பாவாப்யம் :-** பிரிவினை (த்வைதத்தை) நிராகரிப்பது மூலம் பரமாத்மாவை நிரூபித்தலும். அந்த பரமாத்மாவே எல்லா இடத்திலும் நிரூபிக்கப்பட்டதாலும்

**ஔபஸதவத் :-** உபஸத யாக மந்திரம் எல்லா இடத்திலும் பொதுவானது என்பதுபோல

**ததுக்தம் :-** என்று ஆசாரியர் ஜைமினியின் சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

## இயதாமனனாத் - 34

**இயத் - ஆமனனாத் :-** இயத் - இவ்வளவு என்று வரையறைக்கப்பட்டுள்ளது, "த்வா சுபர்ணா" (இரண்டு பறவைகள்) மற்றும் "ருதம் பிபந்தௌ" (கர்மபலனை அனுபவிப்பதான) என்பதான ஷ்ருதியும் ஒன்றான பரமாத்மாவையே குறிப்பதால், வித்யையும் ஒன்றே.

## அந்தரா பூதக்ராமவத்ஸ்வர்மன: - 35

**அந்தரா :-** எல்லாவற்றிற்கும் உள்ளே இருப்பதாக கூறப்பட்டதால்

**பூதக்ராமவத் :-** பூதங்களின் (பஞ்சபூதம்) கூடத்தில் ஊடுருவியிருப்பதாக பரமாத்மா நிரூபிக்கப்பட்டதுபோல

**ஸ்வாத்மன: :-** "யத் சாக்ஷாதபரோக்ஷாத் ப்ரம்ம" ( எது நேரடியாக அனுபத்திற்கு உள்ளது, அது பிரம்மம்) மற்றும் "ய ஆத்ம ஸர்வாந்தர:" (எந்த ஆத்மா எல்லா இடத்திலும் வியாபித்துள்ளதோ) எல்லாவற்றிற்கும் உள்ளே ஊடுருவியிருப்பதோ) என்பதான ஷ்ருதியும் ஸ்வாத்மாவை எல்லாவற்றிற்கும் ஊடுருவியிருப்பதாக கூறியுள்ளதால், வித்யை ஒன்றே.

## அன்யதா பேதானுபபத்திரிதி சேன்னோபதேஷாந்தரவத் - 36

**அன்தா :-** வித்யையினை வேறுபட்டதாக ஏற்காவிட்டால்

**பேதானுபத்தி: :-** ஷ்ருதியில் கூறப்பட்ட பிரிவுகளானது ஏற்புடையது போகும்

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** தவறு

**உபதேஷாந்தரவத் :-** "தத்வமஸி" (நீ அது ஆகிறாய்) என்பதான ஷ்ருதி ஒன்பதுமுறை கூறப்பட்டாலும் வித்யையில் வேறுபாடும், ஏற்புடையது என்பது இல்லையோ, அதுபோல இங்கும்

## வ்யதிஹாரோ விஷிம்ஷந்தி ஹீதரவத் - 37

**வ்யதிஹாரः** :- விசேஷண —— விசேஷ்ய பாவம் உபாசனைக்காக கூறப்பட்டது

**விஷிம்ஷந்தி** :- "த்வம் வா அஹமஸ்மி" (நீயும் (தேவதையே) நானே ஆகிறேன்) என்பதான ஷ்ருதியும் அதனை சிறப்புடையதாக கூறுவதால்

**ஹி** :- நிச்சயமாக

**இதரவத்** :- சர்வாத்மத்வம் முதலிய குணங்களை போல

**சைவ ஹி ஸத்யாதய: - 38**

**சைவ** :- "தத்யத்ஸத்யம்" (அது, எது சத்யமோ அது ஆதித்யனே) என்பதான ஷ்ருதியில் ஹிரண்யகர்பர் உபாசிக்கப்படவேண்டியதாக கூறுவதால்

**ஹி** :- நிச்சயமாக, வித்யா வேறுபட்டது அல்ல, ஒன்றே ஆகும்.

**ஸத்யாதய:** :- சத்யம் முதலிய குணங்களை இதனால், மற்ற இடத்திலும் ஏற்கவேண்டும்.

**காமாதீதரத்ர தத்ர சாயதனாதிப்ய: - 39**

**காமாதி** :- சத்யகாம முதலிய குணங்கள்

**இதரத்ர** :- சர்வவஷீ முதலிய பிருகதாரண்கத்தில் கூறப்பட்ட குணங்களும்

**தத்ர** :- சாந்தோகியத்தில் ஏற்கவேண்டும்

**ச** :- நிச்சயம்

**ஆயதனாதிப்ய:** :- இரண்டிலும் ஆயதனம் (உபாசனை விஷயம்) ஒன்றே ஆகும்.

**ஆதராதலோப: - 40**

**ஆதராத்** :- "பூர்வோ அதிதிப்யோ அஷ்னீயாத்" (முன்னர் அதிதிகளுக்கு உணவிடவேண்டும்) என்பதான ஜாபால ஷ்ருதியில் பிராணாக்னி ஹோத்திரமானது ஏற்கப்பட்டுள்ளது

**அலோப:** :- அதனால், உணவு இல்லாத நிலையிலும் அக்னிஹோத்ரம் இல்லாது போகாது

## <u>உபஸ்திதே அதஸ்த்வசனாத் - 41</u>

**உபஸ்திதே :-** உணவு பொருளானது இருக்கும்போது

**அத: :-** அந்த அடையப்பட்ட உணவுபொருள்கொண்டு பிராணக்னிஹோத்ரம் செய்யவேண்டும்

**தத்வசனாத் :-** "தத்யத்பக்தம்" (எது அருந்த உணவாக முதன் முதலில் அடையப்பட்டதோ) என்பதான ஷ்ருதியும், இதனையே கூறுகிறது.

## <u>தன்னர்தாரணாநியமஸ்தத்ருஷ்டே: ப்ருதக்ய ப்ரதிபந்த: ஃபலம் - 42</u>

**தன்நிர்தாரணாநியம: :-** கர்மங்கத்தினை சார்ந்ததான உபாசனையினை நித்திய கர்மத்தைபோல அனுஷ்டிப்பது கூடாது, இதில் எந்த நியமமும் இல்லாததால்

**தத்த்ருஷ்டே: :-** "தேன உபௌ குருத:" (அதனால் உத்கீத அவயவமான ஓங்காரத்தை ரஸத்தமம் முதலியது கூடியவராக அறிந்தவரும் அறியாதவரும் அதன் மூலம் கர்மம் செய்கின்றனர் ) என்பதான ஷ்ருதியில் இதுவே (நியமமற்றதே) கூறப்பட்டதால்

**பிருதக் ஹி :-** நிச்சயம் வேறுபட்டதாக (கர்மபலனிலிருந்து)

**அபிரதிபந்த: :-** தடையற்றதாக

**ஃபலம் :-** இந்த உபாசனைகளின் பலனானது விசேஷமாக அடையப்படுகிறது.

## <u>ப்ரதானவதேவ ததுக்தம் - 43</u>

**ப்ரதானவத் :-** "யதேந்த்ராய ராஞே" (எவ்வாறு, இந்திரனுக்கு, இராஜாவுக்கு) என்பதா ஷ்ருதியில் கூறப்பட்டதான தேவதை இந்திரன்ஒருவன் ஆனாலும் இராஜா, அதிராஜா முதலிய குணங்களால் வெவ்வேறு தேவதையாக ஏற்கப்படுகிறதோ அதுபோல, வாயு மற்றும் பிரணனின் சுவரூபமானது ஒன்றான போதும் ஆத்யாத்மிகம் முதலிய நிலையினை ஏற்று வித்யையின் பிரயோகமும் வேறுபடுகிறது

**ததுக்தம் :-** "நானா வா தேவதா ப்ருதக்ஞானாத்" (தேவதை வேறுபட்டது, அதன் ஞானம் வேறுபட்டதாக அடையப்படுவதால்) என்பதான ஆசரியர் ஜைமினியின் சூத்திரத்தில் இதுவே கூறப்பட்டது.

**லிங்கபூயஸ்த்வாத்தத்தி பலீயஸ்ததபி - 44**

**லிங்கபூயஸ்த்வாத் :-** வாஜசனேயகஅக்னிரகஸியத்தில் கூறப்பட்ட அக்னி வித்யையானது சுதந்திரமானது, "யத்கிஞ்சேமானி பூதானி" (இதனில் இந்த பிராணி எந்த சங்கல்பம் செய்தாலும் அதுஇந்த அக்னியின் செயலே ஆகும்) என்பதால்பல லிங்கங்கள் உள்ளது

**தத் ஹி :-** லிங்க பிரமாணமே, ஷ்ருதி முதலிய பிரமாணங்களில். பிரகரணம் முதலிய பிரமாணத்த காட்டிலும்

**பலீய: :-** பலம் உடையது

**ததபி :** இதனையும் கூட, ஆசாரியர் ஜைமினி "ஷ்ருதிலிங்க வாக்ய பிரகரண ஸ்தான ஸமாக்யானாம் ஸமவாயே பாரதௌர்பல்யமர்தவிப்ரகர்ஷாத்" என்பதான சூத்திரத்தில் கூறியுள்ளார்.

**பூர்வவிகல்ப: ப்ரகரணாத்ஸ்யாத்க்ரியா மானஸவத் - 45**

**பூர்வவிகல்ப: :-** மனஸ்சித் முதலிய அக்னிகள் சுதந்திரமானவை அல்ல, முன்னால் கூறி துவங்கபபட்ட அக்னியின் சங்கல்பகமாத்மகமானது

**பிரகரணாத் :-** என்று பிரகரணத்தின் அதன்

**ஸ்யாத் க்ரியா :-** அங்கமே ஆகும்

**மானஸவத் :-** "மனேக்ரஹம் க்ரஹ்ணாதி" (மனிதனை கிரகபாத்திரமாக ஏற்கிறார்) என்று பன்னிரெண்டு நாள் செய்யப்படும்கர்மத்தில் இது (மனோகிரகம்) பத்தாவது நாளின் அங்கமானது போல

**அதிதேஷாச்ச - 46**

**அதிதேஷாத் :-** "ஏகைக ஏவ தாவான்" (அதனில் ஒவ்வொரு அக்னியும் முன்புள்ளதின் அளவே ஆகும்) என்பதான ஷ்ருதியிலும் அதிதேசமாதினாலும் இது சாம்பாதிக அக்னியின் அங்கமே

**ச :-** என்பதாலும்

**வித்யைவ த நிர்தாரணாத் - 47**

**வித்யா ஏவ :-** மனஸ்சித் முதலிய வித்யையான அக்னியானது சுதந்திரமானவையே

**து :-** சுதந்திரமற்றவை அல்ல

**நிர்தாரணாத் :-** இவ்வாறே தீர்மாணம் ஷ்ருதியினால் செய்யப்பட்டதால்

**<u>தர்ஷனாச் ச - 48</u>**

**தர்ஷனாத் :-** மனஸ்சித் முதலிய அக்னிகள் சுதந்திரமானவை என்பதற்க லிங்கங்களும் காணப்படுகிறது

**ச :-** என்பதாலும், அது சுதந்திரமானவையே.

**<u>ஷ்ருத்யாதிபலீயஸ்த்வாச்ச ந பாத: - 49</u>**

**ஷ்ருத்யாதிபலீயஸ்த்வாத் :-** ஷ்ருதி முதலிய பிரமாணம் பலம் கூடியது என்பதாலும் கர்மத்தின் பிரகரண பிரமாணம் மூலமாக மனஸ்சித் அக்னியின் சுதந்திரத்தன்மை

**ச :-** என்பதும் நிச்சயம்

**ந :-** செய்வது இயலாது

**பாத: :-** நிராகரணமானது

**<u>அனுபந்தாதிப்ய: ப்ரஞ்ஞாந்தரப்ருதக்தவவத்த்ருஷ்டேஸ்ச ததுக்தம் - 50</u>**

**அனுபந்தாதிப்ய: :-** அனுபந்தம் முதலிய காரணம் கொண்டும் மனஸ்சித் முதலிய அக்னிகள் சுதந்திரமானவை

**ப்ரஞ்ஞாந்தரப்ருதக்த்வவத் :-** ஷாண்டில்ய வித்யை முதலிய மற்ற வித்யைகள் வேறுபட்டவை என்பதுபோல

**த்ருஷ்ட: :-** ராஜசூய யாக பிரகரணத்தில் காணப்பட்டாலும்அவேஷ்டி யாகம் மூன்று வர்ணத்தினரோடும் சம்பந்தம் உடையதால் பிரகரணத்திலிருந்து வேறுபடுத்துவது காணப்படுவதுண்டு

**ச :-** என்பதாலும்

**ததுக்தம் :-** "க்ரத்வர்தாயாம்" என்ற பூர்வமீமாம்ஸை சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

## <u>ந ஸாமான்யாதப்யுபலப்தேர்ம்ருத்யுவன்ன ஹி லோகாபத்தி: - 51</u>

**ந :-** கிரியையின் அங்கமில்லை

**ஸாமான்யாதாபி :-** மானஸ கிரகத்தினோடு சமானமாக இருந்தபோதிலும் (மானஸதன்மை என்பது)

**உபலப்தே: :-** ஷ்ருதி முதலிய பிரமாணங்களால் சுதந்திரமானதாக அடையப்படுவதால்

**ம்ருத்யுவத் :-** "ஸ வாஏஷ ஏவ ம்ருதியு ஏஷ ஏதஸ்மின்மண்டலே புருஷ:" (இந்த ஆதித்ய மண்டலத்தில்உள்ள புருஷனே மிருத்யு), "அக்னிர்வை ம்ருத்யு" (அக்னியே மிருத்யு) என்பதான ஷ்ருதியில் ஆதித்ய புருஷன் மற்றும் அக்னியில் மிருத்யு என்ற சொல் சமமாக உபயோகப்படுத்தப்பட்டாலும் அவை முழுவதுவமாக சமம் அல்ல

**ந ஹி :-** அதுபோல, நிச்சயம் இல்லை

**லோகபத்தி: :-** "அஸௌ வாவ லோக:" ( இந்த த்யு லோகம் அக்னி ஹே கௌதமனே, இந்த ஆதித்யனே சமித்) என்பதா ஷ்ருதியில் சமித் முதலியவை சமானமாப இருந்தாலும்த்யு லோகம் அக்னிதன்மை உடையது அல்ல

## <u>பரேண ச ஷப்தஸ்ய தாத்வித்யம் பூயஸ்த்வாத்வனுபந்த: - 52</u>

**பரேண :-** "அயம் வாவ லோக:"(இந்த லோகமே அக்னிஸ்சித் ஆகும்) என்பதான இதற்கு பின்னால் உள்ள ஷ்ருதியுடன் சமானத்தன்மை

**ச :-** உள்ளதாலும்

**ஷப்தஸ்ய :-** நடுவில் உள்ள பிராம்மணபாகம்

**தாத்வித்யம் :-**வித்யாவின் விதித்தன்மைக்கு பிரயோஜனம் உடையது என்பதாக உள்ளது

**பூயஸ்த்வாத்வனுபந்த: :-** மானஸ அக்னியில் பல அக்னியின் அவயவவமானது உண்டாகும்போது அது கர்மத்தின் அக்னியோடு படிக்கப்பட்டதாக இருக்கிறது என்பதால்.

## <u>ஏக ஆத்மான: ஷரீரே பாவாத் - 53</u>

**ஏகே :-** சிலர், சார்வாகர்கள்

**ஆத்மான:** :- உடலிலிருந்து வேறுபட்டதான ஆத்மாவினை ஏற்பதில்லை

**ஷரீரே** :- உடல் உள்ளபோதே

**பாவாத்** :- ஆத்மாவின் தர்மங்கள்இருப்பதாக உள்ளதால்

**வ்திரேகஸ்தத்பாவாபாவித்வான்ன தூபலப்திவத் - 54**

**வ்யதிரேக:** :- உடலிலிருந்து வேறுபட்டது ஆத்மா

**தத்பாவாபாவித்வாத்** :- உடல் உள்ளபோதும் இறந்தவரில் ஆத்மாவின் சைத்தன்யம் முதலிய தர்மங்கள் காணப்படாததால்

**ந ஹி** :- அவ்வாறு இல்லாமல், நிச்சயம் இப்படியாகாது

**உபலப்திவத்** :- பூதங்களின் உபலப்தி (அடைதல்) பூதங்களின் தர்மம் ஆவதில்லை என்பதுபோல பௌதிகமான உடலின் உபலப்தியும் உடலின் தர்மம் அல்ல அதனிலிருந்து வேறுபட்டது.

**அங்காவபத்தாஸ்து ந ஷாகாஸீ ஹி ப்ரதிவேதம் - 55**

**அங்காவபத்தா:** :- அங்கத்தினை சார்ந்த உத்கீதம் முதலிய உபாசனைகள்

**து** :- நிச்சயம்

**ந ஷாகாஸீ** :- அந்த சாகைகளில் மட்டும் வரையறுக்கப்படுதல் இயலாது

**ஹி** :- நிச்சயம்

**ப்ரதிவேதம்** :- எல்லா சாகைகளிலும் ஏற்கப்படவேண்டும்

**மந்த்ராதிவத்வா அவிரேத: - 56**

**மந்த்ராதிவத் வா** :- மந்திரம், கர்மம், குணம் முதலியவற்றை ஒரு சாகையிலிருந்து வேறு சாகையில் ஏற்பதுபோலவோ

**அவிரோத:** :- இங்கு உத்கீதம் முதலிய உபாசனையினை வேறு சாகையில் ஏற்பது எந்த தவறும் இல்லை

**பூம்ன: க்ரதுவஜ்ஜ்யாயஸ்த்வம் ததா ஹி தர்ஷயதி - 57**

**பூம்ன: :-** "பிராசீனஷான ஔபமன் யவ:" (பிராசீனசாலன் என்ற உபமன்யுவின் மகன்) என்பதான ஷ்ருதியில் எல்லா உபாசனைக்குமே

**க்ரதுவத் :-** தர்ஷபூர்ணமாசம் முதலிய யாகத்தினைபோல, ஒரே அங்கம்கூடியதான பிரதான யாகம் செய்யப்படுவதுபோல

**ஜ்யாயஸ்த்வம் :-** இங்கம் பிரதானமாக (முக்கியமாக) நிரூபிக்கப்பட்டுள்ளது

**ததா ஹி :-** இவ்வாறாகவே நிச்சயம்

**தர்ஷயதி :-** "தஸ்ய ஹ வா" (இந்த வைஷ்வாநர ஆத்மாவின் தலையே த்யுலோகம்) என்பதான ஷ்ருதியில் காணப்படுகிறது.

**நானா ஷப்தாதிபேதாத் - 58**

**நானா :-** வித்யையானது வேறுபட்டது

**ஷப்தாதிபேதாத் :-** காரணம் வேத, உபாசீத முதலிய சொறகள்வேறுட்டது என்பதால் (சப்தபேதாத் கர்மபேத: - சொறகள் வேறுபடுவதால் கர்மம்வேறுபடுகிறது என்பதால்)

**விகல்போ அவிஷிஷ்டஃபலத்வாத் - 59**

**விகல்ப: :-** சகுண வித்யையில் விகல்பத்தினையே ஏற்கவேண்டும்.

**அவிஷிஷ்டஃபலத்வாத் :-** அறிபடுவிஷயமானது வேறுபடாதது என்பதான சமமான பலன் கூறப்பட்டடதால்

**காம்யாஸ்து யதாகாமம் சமுச்சீயேரன்ந வா பூர்வஹேத்வ பாவாத் - 60**

**காம்யா: து :-** காமியமானபலனுடைய வித்யைகளிலோ

**யதா காமம் :-** விருப்பப்பட்டபடி

**சமச்சீயேரன் :-** சமுச்சயம் (சேர்த்து செய்வது) செய்யலாம்

**ந வா :-** இல்லை, செய்யாதிருக்கலாம்

**பூர்வஹேத்வாபாவாத் :-** ஏனென்றால், சமமான பலனுடைய கர்மத்தில் விகல்பத்தினை செய்யலாம் என்ற வேறு முன்மாதிரி இல்லாத காரணத்தால்.

## அங்கேஷு யதாஷ்ரயபாவ: - 61

**அங்கேஷு :-** கர்மத்தின் அங்கமான உத்கீதம் முதலிய உபாசனைகளில்

**யதாஷ்ரயபாவ: :-** கர்மத்தில் அதன் அங்கமானது ஒன்றாக (சேர்த்து) செய்யப்படுவதுபோல, சமுச்சயம் செய்யவேண்டும்

## ஷிஷ்டேஸ் ச - 62

**ஷிஷ்டே: :-** ஸ்தோத்திரம் முதலியதின் சம்பந்தம் மூன்று வேதங்களிலும் கூறப்பட்டதுபோல

**ச :-** இங்கும். கர்மத்தினை சார்ந்த உபாசனைகளும். அங்கம் மற்றும் உபாசனையில் எந்தவேறுபாடும் இல்லை

## ஸமாஹாராத் - 63

**ஸமாஹாராத் :-** வேறு வேதத்தில் கூறப்பட்டட பிரணவம் முதலியவை வேறு இடத்தில் ஏற்கப்படுவது போல, அங்கத்தினை சார்ந்த உபாசனையிலும் ஏற்கப்படுவதால்.

## குணஸாதாரண்யஷ்ருதேஸ் ச - 64

**குணஸாதாரண்ய ஷ்ருதே: :-** உத்கீத உபாசனையில் அதன் குணமான ஓங்காரமானது "தேனேயம் த்ரயீ வித்யா வர்ததே" (இந்த ஓங்காரத்தினாலேயே ரிக்வேதம் முதலிய மூன்று வேதமும் பிரவிருத்திக்கின்றதே) என்பதான ஷ்ருதியில் மூன்று வேதத்தினில் பொதுவாக கூறப்பட்டது

**ச :-** என்பதாலும்

## ந வா தத் ஸஹபாவாஷ்ருதே: - 65

**ந வா :-** அங்கத்தினை சார்ந்ததான உபாசனைகளின் சமுச்சயம் இல்லாதும் போகலாம்

**தத் ஸஹபாவாஷ்ருதே: :-** "க்ரஹம் க்ரஹீத்வா" (கிரகம் பாத்திரத்தை கிரகணம் செய்து) என்பதான ஷ்ருதியில் அங்கமானது சேர்ந்து இருப்பதாக கூறப்பட்டதுபோல, அங்கத்தினை சார்ந்திருப்பதாக இருப்பதான உபாசனையினை குறிக்கும் ஷ்ருதி இல்லாததால்.

**தர்ஷனாச் ச - 66**

**தர்ஷனாத் ச :-** "ஏவம் வித்த வை ப்ரம்மா" (இவ்வாறு அறிபவரான பிரம்மன் (வேத கர்மத்தின்பிரம்மா, கட்டுப்படுத்துபவர்) யாகம், யஜமானன் மற்றும் ரித்விக்கினைகாப்பாற்றுகிறார்) என்பதான ஷ்ருதியில் அங்கத்தினை சாராததாக உபாசனைகள் கூறப்பட்டுள்ளதாலும்.

## மூன்றாம் அத்யாயம் - நான்காம் பாதம்

**புருஷார்தோ அத: ஷப்தாதிதி பாதராயண: - 1**

**புருஷார்த: :-** மோக்ஷம் (வீடு) என்கிற புருஷார்தத்திற்கு

**அத: :-** ஆத்மாவின் ஞானத்தான் உண்டாகிறது

**ஷப்தாத் :-** "தரதி ஷோகம் ஆத்மவித்" (ஆத்மாவினை அடைந்தவர் துன்பத்தை கடக்கிறார்) என்பதான ஷ்ருதியும் கூறுகின்றது இதனையே

**இதி :-** என்று

**பாரராயண: :-** ஆசாரியர் பாதராயணர் ஏற்கின்றார்.

**ஷேஷத்வாத் புருஷார்தவாதோ யதா அன்யேஷ்விதி ஜைமினி: - 2**

**ஷேஷத்வாத் :-** ஆத்மா கர்த்தா என்கிற நிலையில் கர்மத்தின் அங்கம் ஆவதல் (விரிஹி (நெல்) மீது நீர் தெளிப்பது போல)

**புருஷார்தவாத: :-** ஞானத்தால் புருஷார்தம் அடையப்படுவதான ஷ்ருதிகள் அர்தவாதம் (போற்றி கூறுதல்) மட்டுமே

**யதா :-** எங்ஙனம்

**அன்யேஷு :-**திரவிய சம்ஸ்கார கர்மத்தில் பாவமற்ற நிலை முதலிய பலன் அர்த்தவாதமோ

**இதி :-** அதுபோல என்று

**ஜைமினி :-** ஆசாரியர் ஜைமினி ஏற்கிறார்.

**ஆசார தர்ஷனாத்  - 3**

**ஆசார :-** பிரம்மஞானிகளும் வித்யையுடன் கர்மத்தை புரிவது என்பது

**தர்ஷனாத் :-** "ஜனகோ ஹ வைதேஹ:" (விதேஹ தேச மன்னன் ஜனகன் பெரிய தக்ஷிணை கூடிய பெரிய யாகங்களை செய்தார்) என்பதான ஷ்ருதியில் காணப்படுவதால்.

**தச்ச்ருதே:  - 4**

**தச்ச்ருதே: :-** "யதேவ வித்யயா கரோதி" (எதனை நாம் வித்யையுடன் (ஞானத்துடன்) செய்கிறோமோ அது. ஆதிக பலனடையதாக ஆகின்றது) என்பதான மூன்றாம் வேற்றுமை ஷ்ருதியில் வித்யையானது கர்மத்தின் அங்கம் என்று கூறப்பட்டதாலும்.

**ஸமன்வாரம்பணாத்  - 5**

**ஸமன்வாரம்பணாத் :-** "தம் வித்யாகர்மணி" (அவருடைய வித்யாவும். கர்மமும் இறந்தவருடன் தொடர்ந்து செல்கிறது) என்பதான ஷ்ருதியும் வித்யை மற்றும் கர்மத்தினை சேர்த்து கூறுவதால்

**தத்வதோ விதானாத்  - 6**

**தத்வத: :-** "ஆசார்ய்குலாத்வேதமதீத்ய" (ஆசாரியிடத்திலிருந்து

வேதத்தினை படித்து) என்பதான ஷ்ருதியும், வேதபொருளை முழுவதுமாக அறிந்தவருக்கு

**விதானாத் :-** கர்மத்தினை விதித்து இருப்பதால்

**நியமாச்ச  - 7**

**நியமாத் :-** "குர்வன்நேஹ" (கர்மத்தை புரிந்து கொண்டே நூறு வயது வாழ ஆசைப்படவேண்டும்) என்பதான ஷ்ருதியில் உயிருள்ள வரையில் கர்மத்தை செய்ய நியமித்திருப்பதால்

**ச :-** கூட, வித்யை (நிர்குண) கர்மத்தின் அங்கமாகும்.

**அதிகோபதேஷாத்து பாதராயணஸ்யைவம் தத்தர்ஷனாத் - 8**

**அதிகோபதேஷாத் :-** சம்சாரியான ஜீவனை காட்டிலும் வேறுபட்ட கர்தா, போக்தா (செய்பவர், அனுபவிப்பவர்) அல்லாத பரமாத்மா உபதேசிக்கப்பட்டதால்

**து :-** தத்துவஞானத்தின் பலன் கூறும் ஷ்ருதி அர்தவாதமல்ல

**பாதராயணஸ்ய :-** ஆசாரியர் பாதராயணரின்

**ஏவம் :-** முடிவும் (நிலையும்) இவ்வாறே இருக்கிறது

**தத்தர்ஷனாத் :-** "ய: சர்வஞ சர்வவித்" என்பதான ஷ்ருதியில் இவ்வாறே சம்சாரியான ஜீவனைகாட்டிலும் வேறான பரமாத்மா குறிப்பிடப்படுவது காணப்படுவதால்

**துல்யம் து தர்ஷனம் - 9**

**துல்யம் :-** சமானமே "ஏதத்வைஸ்ம" (இதனை அறிந்த கவஷேயரின் மகன் கூறினார் அத்யயனம் எதற்கு) என்பதா ஷ்ருதியிலும்

**து :-** வித்யை(நிர்குண) கர்மத்தின் அங்கமல்ல என்பது

**தர்ஷனம் :-** ஆசாரத்தை கடைபிடிப்பது என்பது கர்ம அங்கமானாலும், ஆகாவிட்டாலும்

**அஸார்வத்ரிசீ - 10**

**அஸார்வத்ரிசீ :-** "யதேவ வித்யயா கரோதி" (எதனை வித்யை (அறிந்து) செய்கிறரோ) என்பதான ஷ்ருதி பராத்ம வித்யையினை குறிப்பது அல்ல உத்கீத வித்யையினை மட்டுமே குறிப்பது.

**விபாக: ஷதவத் - 11**

**விபாக: :-** "தம் வித்யாகர்மணி" (அவரின் வித்யை மற்றும் கர்மமானது) என்பதான ஷ்ருதியல் கூறப்பட்ட வித்யை ஒருவருக்கும், கர்மம் வேறு ஒருத்தருக்கம் பின்தொடர்ந்து செல்வதாக சம்பந்தப்படுகிறது.

**ஷதவத் :-** இருவருக்கும் நூறு கொடு என்றால் தலா ஐம்பது கொடுப்பது போல

**ஆத்யயனமாத்ரவத: - 12**

**அத்யயனமாத்ரவத:** :- "ஆசார்யகுலாத்வேதமதீதய" என்பதான ஷ்ருதியானது வேதத்தினை படிப்பவரை குறித்து விதிப்பதானதால் ஆத்மஞானத்தினை அறிந்தவருகில்லை

**நா விஷேஷாத் - 13**

**ந** :- "குர்வன்னேவ" (கர்மத்தை புரிந்துகொண்டே) என்பதான ஷ்ருதிகள் தத்துவ ஞானத்தை அடைந்தவரை குறித்து அல்ல

**அவிசேஷாத்** :- வித்வான் என்று விசேஷமான கூறப்படாததால்

**ஸ்துதயே அனுமதிர்வா - 14**

**ஸ்துதயே** :- துதிப்பதற்காகவோ

**அனுமதி:** :- தத்துவ ஞானிக்கு கர்மத்தின் அனுமதி

**வா** :- என்றோ ஏற்கலாம்.

**காமகாரேண சைகே - 15**

**காமகாரேண** :- தன் விருப்பப்படி கர்மத்திற்கு சாதனமான பிரஜை (மலர்) முதலியவர்களை தியாகம் செய்தனர் சில வித்வான்கள்

**ச** :- என்றும்

**ஏகே** :- "ஏதத்த ஸ்மவை" (முன்புள்ள வித்வான் மகன் மற்றும் கர்மத்தினை விரும்புவதில்லை) என்பதான ஷ்ருதியின் மூலம் அறியப்படுகின்றது

**உபமர்தம் ச - 16**

**உபமர்தம்** :- "யத்ரவா அஸ்ய" (எங்கு இவருக்கு (வித்வானுக்கு) எல்லாமே ஆத்மாவாக ஆனதோ அவர் எதனை எதன்மூலம் காண்பார்) என்பதான ஷ்ருதியும் தத்துவஞானம், கர்மத்திற்கு காரணமான செயல், செயல்முறை மற்றும் பலனை அழிக்கின்றது

**ச** :- என்றும்

**ஊர்த்வரேதஸ்ஸீ ச ஷப்தே ஹி - 17**

**ஊர்த்வரேதஸ்ஸீ** :- சன்யாச ஆசிரமத்திலேயே பிரம்ம வித்யையானது சிரவணம் செய்யப்படவேண்டும்

**ச** :- என்பதாலும், வித்யை கர்ம அங்கம் இல்லை என்று அறியப்படுகிறது

**ஷப்தே** :- "த்ரயேதர்மஸ்கந்தா" (மூன்று தர்ம பிரிவுகள்) என்பதான ஷ்ருதிகளும் சன்யாசத்தை நிரூபிப்பதாகவே

**ஹி** :- உள்ளதாலும்

**பராமர்ஷம் ஜைமினிரசோதனா சாபவததி ஹி - 18**

**பராமர்ஷம்** :- "பிரம்மஸம்ஸ்தோ அம்ருதத்வமேதி" (பிரம்மத்தில் நிலைபட்டவர் மரணமற்ற நிலை அடைகிறார்) என்பதான ஷ்ருதியும் அந்தபரம்பரையாக (குருட்டு பரம்பரை) அடையப்பட்ட சன்யாசத்தினை மறுமொழிகிறது

**ஜைமினி:** :- என்று ஆசாரியர் ஜைமினி ஏற்கிறார்

**அசோதனா** :- சன்யாசத்தைவிதிப்பதான எந்தசொல்லும் அதனில் இல்லை

**ச** :- என்பதாலும்

**அபவததி** :- "வீரஹா" (கர்ம- அக்னியினை அனைய விட்டவன் மகனை கொன்ற பாவத்தை அடைகிறான்) என்பதான ஷ்ருதிகள் சன்யாசத்தை நிந்திக்கின்றதாகவும் உள்ளதால்

**ஹி** :- நிச்சயமாக

**அனுஷ்டேயம் பாதராயண: ஸாம்யஷ்ருதே: - 19**

**அனுஷ்டேயம்** :- சன்யாஸ ஆசிரமமானது கடைபிடிக்கப்படவேண்டியது என்று

**பாதராயண:** :- ஆசாரியர் பாதராயணர் கருதுகிறார்

**ஸாம்யஷ்ருதே: :-** "த்ரயோ தர்மஸ்கந்தா:" (மூன்று தர்ம பிரிவுகன்) என்பதான ஷ்ருதியானது கிருகஸ்த ஆசிரமத்தை குறிப்பதுபோல சன்யாச ஆசிரமத்தையும் குறிப்பதாக உள்ளதால்

**விதிர்வா தாரணவத் -20**

**விதி: :-** ஆசிரமத்தை விதப்பதாக ஏற்கவேண்டும்

**வா :-** என்றோ கூறலாம்

**தாரணவத் :-** "அதஸ்தாத் ஸமிதம்" (அந்த தேவதைகளுக்கு ஹவிஸ் உள்ள ஜுஹுவில் சமித்தினை தாரணம் செய்கிறார்) என்பதான ஷ்ருதியினைபோல

**ஸ்துதிமாத்ரமுபாதானாதிதி சேன்நாபூர்வத்வாத் - 21**

**ஸ்துதிமாத்ரம் :-** உத்கீதம் முதலிய உபாசனைகளில் "ஸ ஏஷ ரஷானாம் ரஸதம்" (இந்த உத்கீதமான ஓங்காரமானது பூதங்களின் சாரத்தின் சாரம்) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட ரஸதம் முதலியவை ஸ்துதி மட்டுமே

**உபாதானாத் :-** உத்கீதம் முதலியகர்ம் அங்கங்களானது ஏற்கப்படுவதால்

**இதி சேத் :-** என்று கூறினால் ந :- தவறு

**அபூர்வத்வாத் :-** அவை அபூர்வத்திற்காக என்பதால்

**பாவஷப்தாச் ச - 22**

**பாவஷப்தாத் :-** "உத்கீதமுபாஸீத" (உத்கீதத்தினை உபாசனை செய்வீர்களாக) என்பதான விதி வாக்கியங்கள் இருப்பதால்

**ச :-**என்பதாலும், "ஸ ஏஷ ரஸானாம்" என்பதான வாக்கியங்கள் விதியாகவே ஏற்கவேண்டும்

**பாரிப்லவார்தா இதி சேன்ந விஷேஷிதத்வாத் - 23**

**பாரிப்லவார்தா: :-** "அத ஹ யாஞயவலக்யஸ்யத்வே பார்யே" (யாஞ்யவல்கியருக்கு இரண்டு மனைவிகள் என்று எல்லோரும் அறிந்ததே) என்பதான ஷ்ருதியில் வரும் ஆக்யாயிகம் (கதை) பாரிப்லவ என்ற அஷ்வமேத யாக

கர்மத்தினை புரியும்போது மாலை நேரத்தில் இராஜா அவருடைய குடும்பத்தினருக்கும் கதையினை கூறுவதான கர்மத்தின் அங்கம்

**இதி சேத் :-** என்று கூறினால்

**ந :-** தவறு

**விசேஷிதத்வாத் :-** "மனுர்வைவஸ்வதோ ராஜா" (விவஸ்வானின் மகன் மனு) என்பதான ஷ்ருதி வாக்கியங்களில் முதல்நான் கூறப்படவேண்டியது என்பதாக விசேஷமாக பெயரெடுத்து கதைகள் குறிக்கப்பட்டதால்

## <u>ததா சைகவாக்யதோபபந்தாத் - 24</u>

**ததா :-** இந்த கதைகளானது வித்யையின் பொருட்டே

**ச :-** நிச்சயமாக

**ஏகவாக்யதோபபந்தாத் :-** கூறப்பட்டுள்ள அந்தந்த வித்யையோடு ஏகவாக்கியத்தன்மை (உண்டாவதாக)ஏற்புடையதாக இருப்பதால்

## <u>அத ஏவ சாக்னீன்தனாத்யனபேக்ஷா - 25</u>

**அத ஏவ :-** வித்யை புருஷார்தத்திற்கு என்று இந்த பாதத்தின் துவக்கத்தில் கூறப்பட்டது

**ச :-** போலவும்

**அக்னீன்தனாததி :-** நெருப்பு, எரிபொருள் முதலிய ஆசிரம கர்மங்களின்

**அனபேக்ஷா :-** எதிர்பார்ப்பு இல்லை.

## <u>ஸர்வாபேக்ஷா ச யஞாதிஷ்ருதேருஷ்வவத் - 26</u>

**ஸர்வாபேக்ஷா :-** ஆசிரம கர்மங்கள் எல்லாவற்றின் எதிர்பார்பும் உள்ளது ஞானம் அடைய உதவியாக

**ச :-** நிச்சயமாக

**யஞாதிஷ்ருதே: :-** "பிராம்மணா விவிதிஷந்தி யஞேன தானேன" (பிராம்மணார்கள் இதனை அறிய ஆசைப்படுகின்றனர் யாகத்தின் மூலம்,

தானத்தின் மூலம், அறிவழற்ற (குறைவற்ற) தவத்தின் மூலம்) என்பதான ஷ்ருதியும் ஞானம் உண்டாக ஆசிரம கர்மங்களான யாகம் முதலியவற்றை கூறுகின்றது

**அஷ்வவத் :-** குதிரை தேரில்பூட்டப்படுகிறது உழும் ஏரில் அல்ல அதுபோல கர்மமும் ஞானம் உண்டாக உதவுவது மோக்ஷத்தில் அல்ல.

**ஷமதமாத்யுபேத: ஸ்யாத்தாபி து தத்விதேுஸ்ததங்கதயா தேஷாமவஷ்யமனுஷ்டேயத்வாத் - 27**

**ஷமதமாத்யுபேத: ஸ்யாத் :-** ஷமம், தமம் முதலியவை உடையவராக இருக்கவேண்டும்.

**ததாபி :-** இருந்தாலும் கூட பரமாத்மாவை அடைய (அறிய) விரும்புபவர் (அதாவது, "விவிதிஷந்தி" என்பதான ஷ்ருதியில்நிகழ்காலமாக இருப்பதால் விதியாக இயலாது.)

**து :-** நிச்சயமாக

**ததுத்விதே: :-** "தஸ்மாத் ஏவம்வித்" (அதனால் இவ்வாறு அறிந்தவர் சமம், தமம் முதலியவை கூடியவராக ஆத்மாவை அறிகிறார்) என்பதான ஷ்ருதி

**ததங்கதயா :-** ஷமம் ,தமம் முதலியவற்றினை அங்கமாக கூறுவதால்

**தேஷாம் :-** அவைகளை விதிப்பதாக உள்ளது என்பதால்

**அவஷ்யானுஷ்டேயத்வாத் :-** நிச்சயமாக அவைகளை கடைபிடித்தல் அவசியம்.

**ஸர்வான்னனானுமிதிஸ்ச ப்ராணாத்யயே தத்தர்ஷனாத் - 28**

**ஸர்வான்னானுமிதி: ச :-** எல்லாவற்றையும் (எதனையும்) அன்னமாக ஏற்கலாம் என்று அனுமதி உள்ளது

**ப்ராணாத்யயே :-** "ந ஹ வாஸ்ய" (இவ்வாறு பிராணனை அன்னமாக அறிந்தவருக்கு எதுவும் உண்ணத்தகுதி அல்லாததாக ஆகாது) என்பதான ஷ்ருதி பிராணன் பிரியும் வேலையில் கூறியுள்ளது

**தத்தர்ஷனாத் :-** "மடசீஹதேஷு குருஷு" (ஷலபர்களால் குருதேசத்தின் நிலத்திலுள்ள அன்னமானது அழிக்கப்பட்டதால்) என்பதா ஷ்ருதியில் சாக்ராயண ரிஷி யானைபாகனின் பாத்திரத்தில் உள்ள எச்சள் உளுந்தை உண்னுவதும் அதன் பின்னர் அவன் குடித்தநீரை ஏற்காததும் காணப்படுகிறது.

## அபாதாச்ச - 29

**அபாதாத் ச :-** இது உண்ணப்படலாம், இது உண்ணப்படகூடாது என்பதாக பகுத்துக்கூறும் சாஸ்திரத்துடன் எந்த விரோதமும் இல்லாததாலும் "ந ஹ வா ஏவம்வித்" என்பதான ஷ்ருதி அர்த்தவாதம் மட்டுமே ஆகும்

## அபி ச ஸ்மர்யதே - 30

**அபி ச :-** அதுமட்டுமல்லாமல்

**ஸ்மர்யதே :-** "ஜீவிதாத்யயமாபன்ன:"(உயிர் பிரிந்துவிடும் நிலையில் உள்ளவர்) என்பதா ஸ்மிருதியும் கூட ஆபத்காலத்தில் (கஷ்ட நிலையில்) வித்வானுக்கும்,அவித்வானுக்கும்(பிராணன் அன்னம் என்று அறிந்தவருக்கும் அறியாதவருக்கும்) எல்லாவற்றினையும் உண்னலாம் என்பதை நிரூபிக்கின்றது.

## ஷப்தஸ்சாதோ அகாமகாரே - 31

**ஷப்த: ச :-** "தஸ்மாத் பிராம்மண: ஸுராம் ந பிபேத்" (அதனால் பிராமணன் மது அருந்துதல் கூடாது) என்பதான ஷ்ருதியும்

**அத: :-** பிராணவித்திற்கு ஸர்வான்னத்தை புசிப்பதுகூறுவது அர்தவாம் மட்டுமே என்பதால்

**அகாமகாரே :-** தன் விருப்பப்படி பிரவிருத்திப்பதையே நிராகரிக்கின்றது

## விஹிதத்வாச்சாஷ்ரமகர்மாபி - 32

**விஹிதத்வாத் ச :-** "யாவஜ்ஜீவனம் அக்னிஹோத்ரம் ஜுஹோதி" (உயிருள்ளவரை அக்னிஹோத்திரத்தை செய்யவும்) என்பதான ஷ்ருதியும் விதித்துள்ளதால்

**ஆஷ்ரமகர்ம :-** ஆசிரம கர்மங்களை நித்திய கர்மத்தை கடைபிடித்தல் வெண்டும்

**அபி :-** ஆசிரமத்தில் நிலைபாடு உள்ள முமுக்ஷு அல்லாவரும்

## ஸஹகாரித்வேன ச - 33

**ஸஹகாரித்வேன :-** பித்னை உத்பத்தி ஆவதில் உதவிபுரிவதாக இருப்பதாலும், "தமேதம் வேதானுவசனேன ப்ராம்மணா விவிதிஷந்தி யஞேன" (அந்த உபநிடத்தில் கூறப்பட்ட புருஷனை பிராம்மணர்கள், ஸ்வாதயாயம், யஞ்ஞம் முதலியவற்றால் அறிய ஆசைப்படுகிறார்கள்) என்பதா ஷ்ருதியில் விதிக்கப்பட்டதாலும்.

**சு :-** யாகம் முதலிய கர்மத்தை அனுஷ்டிக்கவேண்டும்

## ஸர்வதாபி த ஏவோபயலிங்காத் - 34

**ஸர்வதா அபி :-** ஆசிரமத்தில் நிலைபாடு என்ற நிலையிலும், வித்யைக்கு உதவிபுரிவத என்ற நிலையிலும்

**தே ஏவ :-** அந்த யஞ்ஞம் முதலியவைகளை நிச்சயம்அனுஷ்டிக்க வேண்டும்

**உபயலிங்காத் :-** "விவிதிஷந்தி யஞேன" (அறிய ஆசைப்படுகிறார்கள் யஞ்ஞத்தின் (மூலமாக) என்பதான ஷ்ருதியும், "அனாஷ்ரித: கர்மபலன்" (கர்மத்தின் பலனில் பற்று இல்லாமல்) என்பதான ஸ்மிருதியும் இதனையே குறிப்பதாக உள்ளது

## அனபிபவம் ச தர்ஷயதி - 35

**அனபிபவம் :-** பிரம்மசர்யம் முதலிய சாதனைகளை கடைப்பிடிப்பவரை விருப்பு ___ வெறுப்பு முதலிய கிலேசங்கள் தீண்டாது

**ச :-** என்பதும்

**தர்ஷயதி :-** "ஏஷ ஹ்யாத்மா ந நஷ்யதி யம் ப்ரம்மசர்யேணானுவிந்ததே" (பிரம்மச்சரியத்தால் அடையப்படும் இந்த ஆத்ம அழிவடையாது) என்பதான ஷ்ருதியும் இதனையே காண்பிக்கின்றது.

## அந்தரா சாபி து தத்த்ருஷ்டே: - 35

**அந்தரா :-** ஆசிரமம் இல்லாத பருஷருக்கும்

**ச அபி :-** கூடவும், நிச்சயமாக

**து :-** பிரம்ம வித்யையில் அதிகாரம் உள்ளது

**தத் த்ருஷ்டே:** :- இதனையே ரைக்வர் முதலானவரின் ஷ்ருதியும் காண்பிக்கின்றது.

<u>**அபி ச ஸ்மர்யதே - 37**</u>

**அபி ச** :- அதுமட்டுமல்லாமல்

**ஸ்மர்யதே** :- ஸம்வர்தர் முதலிய மஹாயோகிகளின் இதிகாசத்தில் ஸ்மிருதியும் கூறுகின்றது.

<u>**விஷேஷானுக்ரஹஸ் ச - 38**</u>

**விஷேஷானுக்ரஹ:** :- ரைக்வர் முதலிய அனாஷ்ரமிக்கும் ஜபம் முதலிய ஞான சாதனைகள் மூலம்

**ச** :- வித்யையில் அதிகாரம்கூறப்பட்டது

<u>**அதஸ்த்விதரஜ்ஜ்யாயோ லிங்காச்ச - 39**</u>

**அத: து** :- அனாஷ்ரமியினை சம்பந்தப்படுத்தி பார்க்கும்போது

**இதரத்** :- ஆஷ்ரமத்துடன் கூடிய நிலை

**ஜ்யாய:** :- மேன்மையானது

**லிங்காத் ச** :- "தேனைதிப்ரம்மவித்" என்பதான ஷ்ருதிமற்றும் ஸ்மிருதிகள் இதற்கு லிங்கம் (அறிகுறி)

<u>**தத்பூதஸ்ய து நாதத்பாவோ ஜைமினேரபி நியமாதத்ரூபாபாவேப்ய: - 40**</u>

**தத்பூதஸ்ய** :- சன்யாச ஆசிரமத்தை அடைந்தவர்

**து** :- நிச்சயமாக **ந** :- இயலாது

**அதத்பாவ:** :- அதிலிருந்து வழுவது (நழுவுவது)

**ஜைமினி: அபி** :- என்று ஆசாரியர் ஜைமினியும் கூட ஏற்கின்றார்.

**நியமாதத்ரூபாபாவேப்ய: நியமம் :-** "அரண்யமியாதிதி பதம் ததோ ந புனரேயாத்" (காட்டிற்கு செல்லவும் (சன்யாசம்) இதுவே சாஸ்திர வழி, அங்கிருந்து திரும்பப்கூடாது)என்பதான சாஸ்திரம்

**அதத்ரூபம் :-** "ப்ரம்மசர்யாதேவ ப்ரவ்ரஜேத்" (பிரம்மசரியத்திலிருந்தே சன்யாசம் அடையவும்) என்பதான சாஸ்திரம் உள்ளது. திரும்பிவருவது என்று அல்ல

**அபாவம் :-** இப்படிப்பட்ட ஆசாரத்தினை சிஷ்டர்களும் கடைபிடிப்பதில்லை

## <u>ந சாதிகாரிகமபி பதனானமானாத்ததயோகாத் - 41</u>

**ந ச :-** இல்லை நிச்சயமாக

**ஆதிகாரிகம் அபி :-** அதிகார சாஸ்திரத்தில் கூறப்பட்ட பிராயசசித்தமானதும் நைஷ்டிக பிரம்மசாரிக்க மட்டுமே (நைஷ்டிக பிரம்மசாரி ___ பிரம்மசரியத்தைஏற்க குருவிற்கு பணிவிடை செய்துகொண்டிருப்பவர்)

**பதனானுமானாத் :-** "ஆரூமோ நைஷ்டிகம் தர்மம்" (நைஷ்டிகத்தில் நிலைப்பட்டவர்) என்பதா ஷ்ருதியில் அவர் வாழ்வது குறிப்பிடப்பட்டதால்

**தத் அயோகாத் :-** அவருக்கு பிராயச்சித்தம் இல்லாததால்

## <u>உபபூர்வமபி த்வேகே பாவமஷனவதததுக்தம் - 42</u>

**உபபூர்வம் :-** உப என்கிற பகுதி கூடியதான உபபாதகமாக (மகாபாதகமாக அல்லாமல்) ஏற்கப்பட்டதால்

**அபி து ஏகே :-** பல ஆசாரியர்கள் நிச்சயம்

**பாவம் :-** பிராயச்சித்தத்தை குறிப்பதாக ஏற்கின்றனர்

**அஷனவத் :-** உபகுர்வாணானான பிரம்மசாரி மது- மாமிசம் உண்டால் அவர் விரதம்கலங்கப்பட்டதால், அதற்கு தூய்மைபடுத்தும் சம்ஸ்காரம் கூறப்பட்டதுபோல

**ததுக்தம் :-** என்பதே "ஸமா விப்ரதிபத்தி ஸ்யாத்" என்பதான பூர்வமீமாம்ஸை சூத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது

## <u>பஹிஸ்தூபயதாபி ஸ்ம்ருதேராசாராச்ச - 43</u>

**பஹி: :-** (சிஷ்டர்கள்) பஹிஷ்காரம் (விலக்கிவைத்தல்)

**து :-** நிச்சயம் செய்யவேண்டும்

**உபயதா :-** சன்யாசஆசிரமத்திலிருந்து நழுவுவது என்பது (பெண்ணை அடைவதால்) உபபாகமானாலும் மகாபாதகமானாலும்

**ஸ்ம்ருதே: ஆசாராத் :-** "ப்ராயஸ்சித்தம் ந பஷ்யாமி" (பிராயச்சித்தத்தை நான் காணவில்லை) என்பதான ஸ்மிருதியும் சிஷ்டர்களின்ஆசாரமும் இவ்வாறு இருப்பதால்

**ச :-** அவர்களை சிஷ்டர்கள்

**ஸ்வாமின: ஃபலஷ்ருதேரித்யாத்ரேய: - 44**

**ஸ்வாமின: :-** யஜமாரே கர்ம அங்கமான உபாசனையினை செய்யவேண்டும்

**ஃபலஷ்ருதே: :-** "வர்ஷதி ஹாஸ்மை" (அவர் மழை பெய்ய நினைத்தால், பெய்யும் மழை) என்பதான பலன் அவருக்கு கூறப்பட்டதால்

**இதி :-** என்று

**ஆத்ரேய: :-** ஆசாரியர் ஆத்ரேயர் ஏற்கின்றார்.

**ஆர்த்விஜ்யமித்யௌடுலோமிஸ்தஸ்மை ஹி பரிக்ரீயதே - 45**

**ஆர்த்விஸ்யம் :-** உபாசனையினை செய்யவேண்டியது ரித்விகின் கடமை

**இதி :-** என்று

**ஔடுலோமி: :-** ஆசாரியார் ஔடுலோமி ஏற்கின்றார்

**தஸ்மை :-** ஏனென்றால், அவரை

**ஹி :-** நிச்சயமாக

**பரிக்ரீயதே :-** தக்ஷினை மூலம் வரணம் செய்து கர்மம் செய்ய யஜமானர் நியமிக்கிறார் (விலை கொடுத்து வாங்குகிறார்)

**ஷ்ருதேஸ்ச - 46**

**ஷ்ருதே: :-** "யாம் வை காஞ்சன" (ரித்விக் யாகத்தில் எந்த விஷயத்தை வேண்டினாலும்அது யஜமானருக்காவே வேண்டப்பட்டது) என்பதான ஷ்ருதியும்

**ச :-** ரித்விக் செய்யும் கர்மத்தின் பலன் யஜமானருக்கு செல்வதாக கூறுகின்றது.

## ஸஹகார்யந்தர வித: பக்ஷேண த்ருதீயம் தத்வதோ வித்யாதிவத் - 47

**ஸஹகார்யந்தவிதி: :-** "பால்யம் ச பாண்டித்யம் ச நிர்வித்ய முனி:" (பால்யத்தன்மையினையும் பண்டிதத்தன்மையினையும் விடுத்து முனியாகிறார்) என்பதான ஷ்ருதியில் வித்யைக்கு உதவிபுரிவதான மௌனமானது அபூர்வமானதால் அதனை விதியாக ஏற்கவேண்டும்

**பக்ஷேண :-** பிரிவு காணப்படும் நிலையில் சாக்ஷாத்காரம் உண்டாவது இயலாது என்பதால்

**திருதீயம் :-** சிரவணம், மனனம் மற்றும் நிதித்யாசனத்தில் மூன்றாவதானது மௌனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

**தத்வத: :-** பரோக்ஷ ஞானமுடைய சன்யாசிகளுக்கு இது விதி என்று ஏற்பதியலும்

**வித்யாத்வத் :-** தர்ஷபூர்ணமாச யாகத்தின் முக்கிய விதிக்கு அன்வாதானம் (அக்னியயினை ஏற்பது) என்பதான அங்கத்தின் விதியினைபோல

## க்ருத்ஸ்னபாவாத்து க்ருஹிணோபஸம்ஹார: - 48

**க்ருத்ஸ்னபாவாத் :-** பெரிய முயர்ச்சியுடன் கூடியதான பல கர்மங்கள் யஞ்ஞும் முதலியவை விதிக்கப்பட்டதால்

**து :-** சமம் முதலிய இயன்றவரை

**க்ருஹிண: :-** கிருகஸ்த ஆசிரமத்தில் உள்ளவருக்கு

**உபஸம்ஹார: :-** உள்ளதாக ஏற்கப்பட்டது தவறில்லை.

## மௌனவதிதரேஷாம்ப்யுபதேஷாத் - 49

**மௌனவத் :-** சன்யாசம் மற்றும் கிருகஸ்தஆசிரமம் ஷ்ருதியில் ஏற்கப்பட்டது போல

**இதரேஷாம் :-** வானபிரஸ்தர் மற்றும் பிரம்மசரிய ஆசரமும் ஷ்ருதியினால் ஏற்கப்பட்டதால்

**அபி :-** என்பதாலும்

**உபதேஷாத் :-** நான்கு ஆசிரமத்திற்கும்,இங்கு கூறப்படும் உபதேசம் சமானமாக விகல்பத்தோடும் சமுச்சயத்தோடும் உள்ளதாக ஏற்கவேண்டும்.

## அனாவிஷ்குர்வன்அன்வயாத் - 50

**அனாவிஷ்குர்வன் :-** "தஸ்மாத் ப்ராம்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேன திஷ்டாஸேத்" (அதனால், பிராம்மணர், பண்டிதத்தன்மையினை விடுத்து பாலகனாக இருப்பாராக) என்பதான ஷ்ருதியில் பாலனாக,அதாவது எவ்வாறு குழந்தை தன்னடைய விருப்பு — வெறுப்புகள் இல்லாமல் பற்றற்று இருக்கிறதோ அதுபோல தன்னுடைய ஞானம் முதலியவற்றை வெளிக்காட்டாமல் இருத்தல்வேண்டும்

**அன்வயாத் :-** இதுவே ஞானத்தின் அப்யாஸத்தில் ஊடுருவி வருவதாக இருக்கிறது

## ஐஹிகமப்யப்ரஸ்துதப்ரதிபந்தே தத்தர்ஷனாத் - 51

**ஐஹிகம் :-** இந்த ஜன்மத்திலேயே

**அபி :-** கூட, ஞானம் உண்டாவது இயலும்

**அப்ரஸ்துதப்ரதிபந்தே :-** மிகவும் பலம் கூடியதான தடையானது (ஞானத்திற்கு) இல்லாது இருக்குமாயின்

**தத்தர்ஷனார் :-** "கர்ப ஏவைதத் ஷயானோ வாமதேவ:" (கர்பத்தில் இருக்கும்போதே இதனை வாமதேவர் அறிந்தார்) என்பதான ஷ்ருதியும் இதனையே நிரூபிக்கின்றது.

## ஏவம் முக்திஃபலாநியமஸ்ததவாஸ்தாவத்ருதேஸ்ததவஸ்தாவத்ருதே: - 52

**ஏவம் :-** பரமாத்ம சாக்ஷாத்காரத்தினைப்போல

**முக்திஃபலாநியம: :-** முக்தி பலனில் எந்த வேறுபாடும் இல்லை

**ததவஸ்தாவத்ருதே: :-** வேதாந்தத்தில் அந்த முக்தி நிலையானது வேறுபடாததாகவே நிரூபிக்கப்பட்டுள்ளதால்

**ததவஸ்தாவத்ருதே: :-** என்று இரண்டாவது முறை கூறப்பட்டது அத்யாயத்தின் முடிவினை குறிக்கிறது.

## மூன்றாம் அத்யாயம் சமாப்தம்

## நான்காம் அத்யாயம் - முதல் பாதம்

### ஆவ்ருத்திரஸக்ருதுபதேஷாத் - 1

**ஆப்ருத்தி: :-** வேதாந்த சாஸ்திரத்தின் ஆவிருத்தி (மீண்டும் மீண்டும் படித்தல்) அவசியம்

**அஸக்ருத் :-** மீண்டும் மீண்டும் பலமுறை

**உபதேஷாத் :-** "ஷ்ரோத்வ்யே மந்தவ்ய:" (கேட்டல் வேண்டும், சிந்தித்தல் வேண்டும்), "த்தவமஸி" (நீ அதுவாக இருக்கிறாய்) என்பதாக ஷ்ருதியில் உபதேசம் பலமுறை செய்யப்பட்டதால்

### லிங்காச் ச - 2

**லிங்காத் :-** "ரஸ்மீஸ்த்வம் பர்யாவர்தயாத்" (சூரியனை உத்கீதமாக உபாசனை செய்தால்ஒரு மகன் தான்பிறப்பான் என்ற தோஷத்தினால்) நீ அதன் கிரணங்களை உபாசனை செய்வாயாக) என்ற லிங்க பிரமாணத்தினாலும்

**ச :-** பல கிரணங்களை உபாசனை கூறி ஆவிருத்தியினை காண்பிக்கின்றது என்பதாலும் ஆவிருத்தி செய்தல் வேண்டும்.

### ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்தி ச - 3

**ஆத்மேதி :-** ஆத்மா என்று பரமாத்மாவினையே ஏற்றல் வேண்டும்

**து :-** ஏனென்றால்

**உபகச்சந்தி :-** "த்வம் வா அஹமஸ்மி" (நீயே நான்) என்பதான ஷ்ருதியும் இவ்வாறே ஏற்கின்றது என்பதால்

**க்ராஹயந்தி :-** "ஏஷ த ஆத்மா சர்வாந்தர:" (இதுவே உன்னுடைய ஆத்மா எல்லாவிடத்திலும் வியாபித்திருப்பது), "தத்வமஸி" (நீ அதுவாக இருக்கிறாய்) என்பதான ஷ்ருதியும் இதனையே ஏற்கின்றது

**ச :-** என்பதாலும்

**ந ப்ரதீகே ந ஹி ஸ: - 4**

**ந :-** இல்லை, கூடாது

**ப்ரதீகே :-** பிரதீகத்தில் (உருவகம்) ஆத்மபுத்தியினை வைப்பது என்பது

**ந ஹி ஸ: :-** அந்த உபாசகர் வியஸ்தமான (தன்னிலிருந்து வேறுபட்ட) பிரதீகத்தினை ஆத்ம சுவரூபமாக ஏற்பது கூடாது.

**ப்ரம்மத்ருஷ்டிருத்கர்ஷாத் - 5**

**ப்ரம்மத்ருஷ்டி: :-** ஆதித்யன், பிராணன் முதலிய பிரதீகத்தில் பிரம்மம் என்ற நோக்கு கொள்ளவேண்டும் (வைக்கவேண்டும்)

**உத்கர்ஷாத் :-** ஏனென்றால் அப்படிப்பட்ட நோக்கே மேன்மையானது என்பதால், உலகத்திலும் சேவகர் முதலியவர்களிலேயே இராஜா என்ற நோக்கு வைக்கப்படுகிறது

**ஆதித்யாதிமயஸ்சாங்க உபபத்தே: - 6**

**ஆதித்யாதிமதய: :-** ஆதித்யன் முதலிய புத்தியானது ஏற்கவேண்டும்.

**ச :-** நிச்சயம்

**அங்கே :-** உத்கீதம் முதலியகர்ம அங்கத்தில் வைக்கவேண்டும்

**உபபத்தே: :-** இவ்வாறு ஏற்பதால், கர்மத்தினால் சம்ருத்தி (மேன்மை, வளர்ச்சி) என்ற பலனானது ஏற்புடையதாகிறது.

**ஆஸீன: ஸம்பவாத் - 7**

**ஆஸீன: :-** அமர்ந்த நிலையில் உபாசனை செய்யவேண்டும்

**ஸம்பவாத் :-** பலவகையான தோஷங்கள், மற்ற நிலைகளில் தோன்றுவது. இன்நிலையில் இல்லாததால்.

**த்யானாச்ச - 8**

**த்யானாத் :-** உபாசனை தியான ரூபமானதாலும்

**ச :-** அமர்ந்துகொண்டே செய்தல் வேண்டும்.

**அசலத்வம் சாபேக்ஷய - 9**

**அசலத்வம் :-** "த்யாயதீவ பிருத்வீ" (தியானம் செய்வதுபோல பிருத்வீ) என்பதான ஷ்ருதியில் பிருத்வீ (நிலம்) முதலியவையின் அசைவற்ற தன்மையினை

**ச :-** ஏற்றும் கூட, அமர்ந்துகொண்டே உபாசனை செய்தல்வேண்டும்.

**அபேக்ஷய :-** அந்த அசைவற்ற நிலையினை சம்பந்தபடுத்தியே "தியானம்" என்ற சொல் ஏற்கப்படுகிறது

**ஸ்மரந்தி ச - 10**

**ஸ்மரந்தி :-** "ஷுசௌ தேஷே ப்ரதிஷ்டாப்ய" (தூய்மையான தேசத்தில் அமர்ந்துகொண்டு) என்பதான ஸ்மிருதியிலும் சிஷ்டர்கள்

**ச :-** உபாசனையில் ஆசனத்தினை கூறியுள்ளனர்

**யத்ரைகாக்ரதா தத்ராவிஷேஷாத் - 11**

**ய்தர :-** எந்த தேச, கால, திசையில்

**ஏகாக்ரதா :-** மனது ஒருமுகப்படுகின்றதோ

**தத்ர :-** அந்த தேச,கால, திசையிலேயே கூடவும் உபாசனை செய்வது இயலும்

**அவிஷேஷாத் :-** இந்த தேச, கால, திசையினை விசேஷமாக ஷ்ருதியானது உபாசனைக்கு கூறாததால்.

**ஆப்ராயணாத்தத்ராபி ஹி த்ருஷடம் - 12**

**ஆப்ராயணாத் :-** இறக்கும்வரையில் உபாசனியனை ஆவிருத்தி (மீண்டும் மீண்டும்) செய்தல் வேண்டும்

**தத்ராபி :-** அந்த நிலையிலும் கூட, மரணதருவாயிலும் கூட "ஸ யாவத்க்ரது" (அவருடைய சங்கலபத்திற்கு ஏற்றார்போன்ற லோகத்தினை அடைகின்றார்) என்பதான ஷ்ருதியும் கூட

**ஹி :-** நிச்சயமாக

**த்ருஷ்டம் :-** இதனையே கூறுவதாக காணப்படுகின்றது

**<u>தததிகம உத்தரபூர்வாதயோரஷ்லேஷவினாஷௌதத்வ்பதேஷாத் - 13</u>**

**தததிகமே :-** பரமாத்மாவினை அறிந்தநிலையில்

**உத்தரபூர்வாகயோ: :-** அதற்கு பின்னர் அடையப்படுவதும் முன்னர் இருப்பதுமான பாவங்களானது

**அஷ்லேஷவினாஷௌ :-** தீண்டாததும் அழிவதும் ஆகின்றது

**தத்வ்யபதேஷாத் :-** "யதா புஷ்கரபாலாஷ" (எவ்வாறு தாமரை இலையில் நீர் படுவதில்லையோ அவ்வாறு இவரையும் பாவம்தீண்டுவதில்லை) என்பதான ஷ்ருதியும் இவ்வாறு கூறுவதால்

**<u>இதரஸ்யாப்யேவமஸமலேஷ: பாதே து - 14</u>**

**இதரஸ்யாபி :-** பரமாத்மாவினை அறிந்தவரின் புண்ணியமும் கூட

**ஏவம் :-** பாவத்தினைப்போல

**அஸம்லேஷ: :-** தீண்டாததும் அழிவதும் ஆகின்றது

**பாதே :-** அதனால் அவர் உடல் விழும்போது (இறக்கும்போது) மோக்ஷம் உண்டாகின்றது

**து :-** சந்தேகமில்லாமல்

**<u>அனாரப்தகார்யே ஏவ து பூர்வே ததவதே: - 15</u>**

**அனாரப்தகார்யே :-** பலன்தர ஆரம்பிக்காத காரியத்தில்

**ஏவ :-** மட்டுமே

**து :-** நிச்சயமாக, பிராரப்தத்தை தவிர

**பூர்வே :-** பூர்வ ஜன்மத்திலோ அல்லது இந்த ஜன்மத்திலோ ஞானத்திற்கு முன்னர் அடையப்பட்ட கர்மங்கள் ஞானத்தால் அழியும்

**ததவதே: :-** "தஸ்ய தாவதேவ சிரம்" (அவருக்கு அதுவரையே காத்திருத்தல் அவசியமாகிறது, எதுவரை உடல் விழவில்லையோ, அதன் பின்னர் அவர் அந்த பரமாத்மாவாகவே இருக்கிறார்(இரண்டற்ற நிலையில்) என்பதான ஷ்ருதியும் உடல் வீழும்வரையில் என்று கூறியிருப்பதால்

**அக்னிஹோத்ராதி து தத்கார்யாயைவ தத்தர்ஷனாத் - 16**

**அக்னிஹோத்ராதி :-** அக்னிஹோத்திரம் முதலிய நித்திய,நைமித்திக கர்மங்களானது

**து :-** நிச்சயமாக

**தத்கார்யாய :-** தத்துவ ஞானத்தால் (சரியான அறிவால்) அடையப்படும் மோக்ஷம் எனப்படும் காரியத்திற்காகவே

**ஏவ :-** நிச்சயம்

**தத்தர்ஷனாத் :-** "தமேதம் வேதானுவசனேன" (இந்த பரமாத்மாவினை அடைய (அறிய) ஆசைப்படுகின்றனர் பிராம்மணர்கள், யாகத்தால், தானத்தால், குறையற்ற தவத்தால்) என்பதான ஷ்ருதியில் இவ்வாறுகாணப்படுவதால்.

**அதோ அன்யாபி ஹ்யேயேஷாமுபயோ: - 17**

**அத: :-** அக்னிஹோத்திரம் முதலிய நித்தியகர்மம்

**அன்யா அபி :-** சுவர்கத்தை அடைய காரணமான சாதனைகள் வேறுபட்டது என்றும்

**ஹி :-** நிச்சயமாக

**ஏகேஷாம் :-** சில சாகையினை சார்ந்தவர்கள்

**உபயோ: :-** ஏற்கின்றது, ஆசாரியர் ஜைமினி மற்றும் ஆசாரியர் பாதராயணருக்கும் சம்மதமே

**யதேவ வித்யயேதி ஹி - 18**

**யத் ஏவ வித்யயா இதி :-** "யதேவ வித்யயா கரோதி" (எதனை உபாசனையுடன் கூடியதாக செய்கின்றாரோ அது அதிக பலமுடையது ஆகின்றது) என்பதான ஷ்ருதியில் அக்னிஹோத்திரம் முதலிய நித்தியகர்மம் மட்டும் அனுஷ்டிப்பதும் உபாசனை கூடியதாக செய்வதும ஒன்றைகாட்டிலும் அடுத்தது சிறப்பான பலனுடையது என்று மட்டும் கூறுவதால்

**ஹி :-** நிச்சயம், இரண்டும் ஞானம் அடைய சாதனைகளே என்று நிரூபணமாகின்றது

**போகேன த்விதரே க்ஷபயித்வா ஸம்பத்யதே - 19**

**போகேன :-** அனுபவிப்பதால்

**து :-** மட்டுமே

**இதரே :-** பிராரப்தகர்மமானதினை

**க்ஷபயித்வா :-** அழித்துவிட்டு

**ஸம்பத்யதே :-** பரமாத்மாவினை அடைகின்றனர்

## நான்காம் அத்யாயம் - இரண்டாம் பாதம்

**வாங்மனஸி தர்ஷனாச்ஷப்தாச்ச - 1**

**வாக் :-** வாக்கின் விருத்தியானது (சுவரூபமாக அல்ல)

**மனஸி :-** மனதினில் லயம் அடைகின்றது

**தர்ஷனாத் :-** மனதின்விருத்தி இருக்கும்போது வாக்கின் விருத்தி லயமடைவது காணப்படுவதால்

**ஷப்தாத் :-** இங்கு விருத்தி மற்றும் விருத்தியுடையதினை பிரிவற்றதாக கூறுவதாக உபசாரமாக வாக் என்ற சொல் பிரயோகிக்கப்பட்டதால்

**ச :-** என்பதாலும் வாக்கானது மனதில் லயம் அடைகின்றது விருத்தி ரூபமாக

**அத ஏவ ச ஸர்வாண்யனு - 2**

**அத ஏவ :-** கூறப்பட்ட தர்ஷணத்மற்றும் ஷப்தாத் என்ற காரணத்தினால்

**ச :-** வாக்கு மனதில் லயமடைவதுபோல

**ஸர்வாணி அனு :-** மற்றஇந்திரியங்களும் விருத்தி ரூபமாக மனதில் லயமடைகின்றது

## தன்மன: ப்ராண உத்தராத் - 3

**தத் :-** இந்திரியங்களின் விருத்தி ரூபமான லயத்திற்கு ஆதாரமான

**மன: :-** மனதும் கூட

**ப்ராணே :-** பிராணனில் விருத்தி ரூபமாக லயம்அடைகின்றது

**உத்தராத் :-** "மன: ப்ராணே" (மனது பிராணனில்) என்ற இதற்கு பின்னால் உள்ள ஷ்ருதியினால்.

## ஸோ அத்யக்ஷே ததுபகமாதிப்ய: - 4

**ஸ: :-** அந்த பிராணனும்

**அத்யக்ஷே :-** ஜீவனில் விருத்திரூபமாக லயம் அடைகின்றது

**தத்உபகமாதிய: :-** ஜீவனில் பிராணனின் சம்பந்தமானது, இந்த ஜீவனை தொடர்ந்து பிராணன் செல்கிறது, இதை சார்ந்ததாக உடலை அடைகின்றது அதனில் நிலைபட்டுள்ளது என்தாக "ஏவமேவ இமமாத்மானம் அந்தகாலே" (இந்த ஆத்மாவினையே இவ்வாறு மரணதருவாயில் அடைந்து) என்பதான ஷ்ருதி கூறுகின்றது

## பூதேஷு தச்ஷ்ருதே: - 5

**பூதேஷு :-** பிராணன் கூடியதாக அதற்கு ஆதாரமான ஜீவன் சரீரத்திற்கு காரணமான சூக்கும பூதங்களில் நிலைபடுகின்றது

**தத் ஷ்ருதே: :-** "பிராணஸ்தேஜஸி" (பிராணன் தேஜஸத்தில்) என்பதான ஷ்ருதியும் இவ்வாறு கூறுவதால்

## நைகஸ்மின் தர்ஷயதோ ஹி - 6

**நைகஸ்மின் :-** ஜீவன் மரண தருவாயில் ஓர தேஜம் எனப்படும் பூதத்தில் நிலைபடுகிறது என்று இல்லை, உடல் ஐந்து பூதங்களின் காரியமானதால் அவையில் நிலைபடும்.

**தர்ஷயத: :-** "ப்ருத்வீமய ஆபோமய" (பிருத்வீ மயமான, நீர்மயமான, வாயுமயமான, ஆகாயமாயமான மற்றும் நெருப்புமயமான) என்ற ஷ்ருதியும், "அணன்வயோ மாத்ரா" (மோக்ஷம் வரையில் சூக்குமமான அழிவற்றதான இந்த பூதங்களானதின் சம்பந்தத்தில் முறையாக தோற்றம் அடைகின்றது) என்பதான ஸ்மிருதியும்

## ஸமானா சாஸ்ருத்யுபக்ரமாதம்ருதத்வம் சானுபோஷ்ய - 7

**ஸமானா :-** சமமானதே

**ச :-** நிச்சயம்

**ஆஸ்ருத்யுபக்ரமாத் :-** தேவயானம் வழியாக செல்லும் வித்வானுக்கும் அதுவல்லாத அவித்வானுக்கம் உத்கிராந்தி (உடலை விடும் முறை), "வாங்மனஸி" என்பதான ஷ்ருதியில் எந்த விசேஷமும் காணப்படாததால்

**அம்ருதத்வம் :-** மரணமற்ற நிலை(அங்கு) நிரந்தர இருப்பும்

**ச :-** கூட

**ஆனுபோஷ்ய :-** இங்கு காணப்படும் நிலை சம்பந்தபடுத்தி காணும்போது உண்டாகும், ஆபேக்ஷிக நிலைமட்டுமே.

## ததாபீதே: ஸம்ஸாரவ்யபதேஷாத் - 8

**தத் :-** தேஜ முதலிய சூக்கும பூதங்கள்

**ஆபீதே: :-** மோக்ஷம் வரை இருப்பது

**ஸம்ஸார வ்யபதேஷாத் :-** "யோனிமன்யே ப்ரபத்யந்தே" (அஞ்ஞானியான ஜீவன் தன் கர்மத்திற்கு ஏற்ப வேறு பிறவியினை அடைகின்றனர்) என்பதான ஷ்ருதியில் சம்சார நிலையானது கூறப்பட்டதால்.

## சூக்ஷ்மம் ப்ரமாணதஸ்ச ஸ்வரூபத: ததோபலப்தே: - 9

**சூக்ஷ்மம் :-** சூக்குமம், தேஜ முதலிய பூதங்கள்

**ப்ரமாணத:** :- பிரமாணத்தினால்

**ச** :- மற்றும்

**ஸ்வரூபத:** :- சுவரூபத்தினால்

**ததா உபலப்தே:** :- இவ்வாறே நாடி முதலியதின் மூலம் இந்த உடலிலிருந்து வெளியேறுகின்றது என்பதினை கூறும் ஷ்ருதியில் காணப்படுகின்றது.

**<u>நோபமர்தேனாத: - 10</u>**

**ந** :- இல்லை

**உபமர்தேன** :- ஸ்தூல உடலானது அழிந்தாலும் தேஜ முதலிய சூக்கும சரீரம் அழிவது என்பது

**அத:** :- அவை அதிசூக்கும்மானது என்பதால்

**<u>அஸ்யைவ சோபபத்தேதேஷ ஊஷ்மா - 11</u>**

**அஸ்ய** :- சூக்கும சரீரத்தினுடையது

**ஏவ** :- மட்டுமே **ச** :- நிச்சயம்

**உபபத்தே:** :- ஸ்தூல சரீரத்துடன் சம்பந்தம் உண்டாகும்போது காணப்படுவதான

**ஏஷ ஊஷ்மா** :- இந்த சூடு

**<u>ப்ரதிஷேதாதிதி சேன்ந ஷாரீராத் - 12</u>**

**ப்ரதிஷேதாத்** :- "ந தஸ்ய ப்ராண உத்கிராமந்தி" (அவருடைய பிராணனானது இங்கிருந்து மேலே செல்வதில்லை) என்பதான ஷ்ருதியில் நிர்குண பிரம்மத்தை அறிந்தவரின் உத்கிரமணம் நிராகரிக்கப்பட்டதால் அது இயலாது

**இதி சேத்** :- என்று கூறினால் **ந** :- தவறு

**ஷாரீராத்** :- இந்த உத்கிரமணம் நிராகரிக்கப்பட்டது உடலிலிருந்து அல்ல, ஜீவனிலிருந்து என்பதால்

**ஸ்பஷ்டோ ஹ்யேகேஷாம் - 13**

**ஸ்பஷ்ட: :-** தெளிவாக உள்ளது

**ஹி :-** நிச்சயம்

**ஏகேஷாம் :-** காண்வ சாகைகாரர்களின் பாடத்தில் பரமாத்மாவினை உணர்ந்தவரின் பிராணன் சரீரத்திலிருந்து வெளியேவருவது நிராகரிக்கப்படுவது என்பதால், பிராணன் உடலிலிருந்து வெளியேறுவதில்லை.

**ஸ்மர்யதே ச - 14**

**ஸ்மர்யதே :-** "தேவா அபி மார்கே முஹ்யந்தி" (தேவர்களும் அவர்களின் வழியினை குறித்து மதிமயக்கம் அடைகின்றனர். அது இல்லாத காரணத்தால்) என்பதான ஸ்மிருதியும்

**ச :-** பரமாத்மாவினை உணர்ந்தவரின் கதி மற்றும் உத்கிரமண இன்மையினையே கூறுகின்றது.

**தானி பரே ததா ஹ்யாஹ - 15**

**தானி :-** பிராணத்மகமான இந்திரியங்களும் பூதங்களும்

**பரே :-** பரமாத்மாவில் லயமடைகின்றது

**ததா :-** அவ்வாறகவே

**ஹி :-** நிச்சயம்

**ஆஹ :-** "ஏவமேவாஸ்ய பரித்ராஷ்டுரிமா:" (நதிகள் கடலில் லயமடைவதுபோல, இந்த கலைகள் பரமாத்மாவில் லயமடைகின்றது) என்பதான ஷ்ருதிகளும் கூறுகின்றது.

**அவிபாகோ வசனாத் - 16**

**அவிபாக: :-** கலைகளானது பரமாத்மாவினை உணர்ந்தவரிடமிருந்து வேறுபடாததாகவே இருக்கிறது

**வசனாத் :-** "பித்யேதே தாஸாம் நாமரூபே" (கலைகளின் நாமம், ரூபம் அழிந்து புருஷன் என்பதான பரமாத்மாவினை உணர்ந்தவரால் அறியப்படுகிறது) என்பதான ஷ்ருதியும் இவ்வாறே கூறுகிறது என்பதால்.

**<u>ததேகோ அக்ரஜ்வலனம் தத்ப்ராகாஷிதத்வாரா வித்யாஸாமர்த்யாத்தச்ஷேஷ கத்யனுஸ்ம்ருத்யோகாச்ச ஹார்தானுக்ருஹீத: ஷதாதிகயா - 17</u>**

**ததேகோச்ரஜ்வலனம்** :- இந்த உடலிலிருந்து உத்கிரமணம் செய்யும் வித்வானின் இதயம் பிரகாசம் அடைகின்றது.

**தத்பிரகாஷிதத்வார:** :- அதன்மூலமாக

**வித்யாசலாமர்த்யாத்** :- உபாசனையின் (சகுண) சக்தியினால்

**தத் சேஷகதி அனுஸ்மிருதியோகாத்** :- அதன் அங்கமான (உபாசனை) பிரம்ம லோகத்தினை குறித்து நினைவுகூறுபவராக

**ச** :- நிச்சயம்

**ஹார்தானுக்ருஹீத:** :- இதயத்தின் அனுகிரகத்துடன் (அதனில் உள்ள பரமாத்மாவின்)

**ஷதாதிகயா** :- நூற்றியொன்றாவது நாடி மூலமாக வெளியேறுகின்றார்.

**<u>ரஷ்ம்யனுஸாரீ - 18</u>**

**ரஷ்ம்யனுஸாரீ** :- நூற்றியொன்றாவதான சுஷும்னை நாடி மூலமாக வெளியேறும் வித்வான், அந்த நாடியுடன் சம்பந்தப்பட்ட சூரிய கிரணங்கள் மூலம் பிரம்மலோகத்தினை அடைகின்றார்

**<u>நிஷி நேதி சேன்ந ஸம்பந்தஸ்ய யாவத்தேஹபாவித்வாத்தர்ஷயதி ச - 19</u>**

**நிஷி** :- இரவில் நாடிகளுடன் சூரிய கிரணங்களின்சம்பந்தமானது இல்லாததால் அப்பொழுது மேல் நிலை அடைவது (உத்கிராந்தம்)

**ந** :- இயலாது

**இதி சேத்** :- என்று கூறினால் **ந** :- தவறு

**ஸம்பந்தஸ்ய** :- நாடி மற்றும் கிரணங்களின் சம்பந்தம்

**யாவத்தேஹபாவித்வாத்** :- உடலிருக்கும பரை நாடி கிரணங்களின் சம்பந்தம் ஏற்கப்படுவதால்

**தர்ஷயதி :-** "அமுஷமாத் ஆதித்யாத்" (இந்த சூரியனிலிருந்து புறப்பட்டு கிரணங்கள்நாடிகளில் பிரவேசிக்கிறது) என்பதான ஷ்ருதியும் இதனையே காண்பிக்கின்றது

**ச :-** என்பதாலும்

## அதஷ்சாயனேபி தக்ஷிணே - 20

**அதஷ்ச :-** எந்தவித எதிர்ப்பார்ப்பும் (காத்திருத்தலும்) இல்லாததாலும்

**ஆயனேஅபி தக்ஷிணே :-** தக்ஷிண அயனத்தில் இறந்தாலும் கூட அவர் அந்தஉபாசனையின் பலனை நிச்சயம் அடைகின்றார்

## யோகின: ப்ரதி ச ஸ்மர்யதே ஸ்மர்யதே சைதே - 21

**யோகின: ப்ரதி :-** யோகிகளுக்கு

**ச :-** அஹ முதலிய காலம் கூறப்பட்டது அது தீண்டாது என்பதை காட்ட

**ஸ்மர்யதே :-** என்று நினை கூறப்படுகிறது

**ஸ்மர்யதே :-** ஸ்மிருதியில் சாங்கியம் மற்றும் யோகத்திலும்

**ச ஏதே :-** இந்த நிலைகள் ஏற்கப்பட்டுள்ளது.

# நான்காம் அத்யாயம் - மூன்றாம் பாதம்

## அர்சிராதினா தத்ப்ரதிதே: - 1

**அர்சிராதினா :-** அர்சிர் முதலிய வழியின் மூலமானவே பிரம்மலோகத்தினை அடைகின்றனர்

**தத் ப்ரதிதே: :-** இப்படிப்பட்டதாகவே அது வித்வான்களால் அறியப்படுகின்றது

**வாயுமப்தாதவிசேஷவிசேஷாப்யாம் - 2**

**வாயும் :-** வாயு லோகத்தினை அடைவர்

**அப்தாத் :-** வருடம் (சம்வத்சர) என்ற லோகத்திற்கு பின்னர் ஆதித்ய லோகத்திற்கு முன்னர்

**அவிசேஷவிசேஷாப்யாம் :-** அவிசேஷமான (சாதாரனமான) "ஸ வாயுலோம்"(அதன் பின்னர் வாயுலோகத்தைஃ என்றும் விசேஷமாக "யதா வை புருஷ:" (எப்பொழுது இந்த உபாசகர் உடலை விடுகிறாரோ அப்பபொழுது அவர் வாயுவினை அடைகின்றார்) என்பதான ஷ்ருதியின் மூலமும்

**தடிதோ அதி வருண: ஸம்பந்தாத் - 3**

**தடித: :-** மின்னல் லோகத்திலிருந்து

**அதி :-** மேலே

**வருண: :-** வருணலோகம் உள்ளது

**ஸம்பந்தாத் :-** வருணனுக்கு மின்னலுடன் சம்பந்தம் உள்ளதால்.

**ஆதிவாஹி கஸ்தல்லிங்காத் - 4**

**ஆதிவாஹிகா: :-** அர்சிர் முதலியவை பிரம்மலோகம் முதலியவை கொண்டு செல்ல ஆதிவாஹிகம் ஆகும்

**தல்லிங்காத் :-** "அமானவ: ஸ எதான்ப்ரம்ம கமயதி" (அமானவரான புருஷர் இவரை சத்யலோகத்திலிருக்கும் பிரம்மலோகம் அடைவிக்கிறார்) என்பதான குறி காணப்படுவதால்

**உபயவ்யாமோஹாத்தத்ஸித்தே: - 5**

**உபயவ்யாமோஹாத் :-** வழி மற்றும் செல்பவர் ஜடம் மற்றும் சுதந்திரமல்லாதவர் ஆனதால் உபாஸகரானவர் மேல்நோக்கி செல்லுதல் இயலாது என்பதால், "தான் முயர்ச்சியற்ற நிலையில் பிறரின் உதவியால் அழைத்து செல்லப்படுவது இயலும்" என்ற நியாயத்தால்

**தத் ஸித்தே: :-** கொண்டு செல்லப்படுதல் இயலும்

**<u>வைத்யுதேனைவ ததஸ்தச்ஷ்ருதே: - 6</u>**

**வைத்யுதேனைவ :-** மின்னல் லோகத்தில் உள்ள அமானவனான புருஷனால்

**தத: :-** அதற்குமேலே உள்ளதான காரிய பிரம்மத்தை உபாசகர் அடைகிறார்.

**தத் ஷ்ருதே: :-** அதனை குறிப்பதான "அமானவ: ஸ ஏத்ய ப்ரம்மலோகம் கமயதி" என்பதான ஷ்ருதியினில் கூறப்பட்டதால்.

**<u>கார்யம் பாதரிரஸ்ய கத்யுபபத்தே: - 7</u>**

**கார்யம் :-** காரிய பிரம்மத்தையே அடைகிறார்

**பாதரி: :-** என்று ஆசாரியர் பாதரி ஏற்கின்றார்.

**அஸ்ய :-** இந்த காரிய பிரம்மத்திலேயே

**கதி உபபத்தே: :-** செல்லுதல் என்ற நிலை இயலும்

**<u>விஷேஷஷதத்வாச் ச - 8</u>**

**விசேஷிதத்வாத் :-** "பிரம்மலோகான் கமயதி" என்பதான ஷ்ருதியில் சிறப்பிக்கப்பட்டதாலும்

**ச :-** காரிய பிரம்மம் என்றே நிரூபணமாகிறது

**<u>ஸாமீப்யாத்து தத்வ்யபதேஷ: - 9</u>**

**ஸாமீப்யாத் :-** காரிய பிரம்மமானது காரண பிரம்மத்திற்கு நெருங்கியதாக உள்ளதால்

**து :-** சந்தேகமில்லாமல்

**தத்வ்யபதேஷ: :-** காரிய பிரம்மத்தில் காரண பிரம்மம் என்று குறிப்பிடுவது இயலும்.

**<u>கார்யாத்யயே ததத்யசேஷன ஸஹாத: பரமபிதானாத் - 10</u>**

**கார்யாத்யயே :-** காரிய பிரம்மலோகமானது அழியும்போது அங்குள்ள தத்துவஞானிகள்

**ததத்யக்ஷேண :-** அதன் அத்யக்ஷர் (தலைவர்), ஹிரண்ய கருப்பருடன்

**ஸஹ :-** கூட

**அத: :-** அந்த காரிய பிரம்மத்திலிருந்து

**பரம் :-** பரமாத்மாவை அடைகின்றனர்

**அபிதானாத் :-** அவ்வாறு ஷ்ருதியில் கூறியிருப்பதால்

<u>**ஸ்ம்ருதேஸ் ச - 11**</u>

**ஸ்ம்ருதே: :-** ஸ்மிருதியிலும் "பிரம்மணா ஸஹ" (பிரம்மத்துடன் அவர்கள் எல்லோரும் மகா பிரளயத்தில் பரமாத்மாவினை அடைகின்றனர்)

**ச :-** என்பதால்

<u>**பரம் ஜைமினிர் முக்யத்வாத் - 12**</u>

**பரம் :-** பரமாத்மாவே இங்கு அடையப்படும் கதியாக கூறப்படுகிறது என்று

**ஜைமினி: :-** ஆசாரியர் ஜைமினி கருதுகின்றார்

**முக்யத்வாத் :-** பரமாத்மாவே பிரம்மம் என்ற சொல்லின் முக்கிய பொருளானதால்

<u>**தர்ஷனாச்ச - 13**</u>

**தர்ஷனாத் :-** "தயோர்த்வமாயன்நம்ருதத்வமேதி" (இதயத்திலிருந்து வெளிப்பட்டு சுஷும்னை நாடி வழியாக மேலெழும்பிமரணமற்ற நிலையினை அடைகிறார்) என்பதான ஷ்ருதியில்

**ச :-** இவ்வாறே, கதியின் மூலம் மரணமற்ற நிலை கூறப்பட்டதால்.

<u>**ந ச கார்யே ப்ரதி பத்யபிஸந்தி: :- 14**</u>

**ந ச :-** நிச்சயம் இல்லை

**கார்யே :-** காரிய பிரம்ம விஷயமாவது

**ப்ரதிபத்யபிஸந்தி: :-** "ப்ரஜாபதே: ஸபாம் வேஷ்ம ப்ரபத்யே" (பிரஜாபதியின் சபைக்கு நான் செல்வேனாக) என்று அந்த சபையினை அடைவதான சங்கல்பமும்,"தே யதந்தரா தத்ப்பரம்ம" (அவர் எதனுள் இருக்கின்றாரோ அது பிரம்மம்) என்பதான ஷ்ருதியும் காரிய பிரம்மமலலாத பரமாத்மாவினை கூறுவதாகவே உள்ளது

**அப்ரதீகாலம்பனான்யைதீதி பாதராயண உபயதா அதோஷாத்தத்க்ரதுஷ்ச - 15**

**அப்ரதீகாலம்பனான் :-** பிரதீகமல்லாத உபாசகர்களை அமானம புருஷர்

**நயதீ :-** பிரம்மலோகத்திற்கு கொண்டு செல்கிறார்

**இதி :-** என்று

**பாதராயண: :-** ஆசாரியர் பாதராயணர் ஏற்கின்றார்

**உபயதா :-** சிலரை (உபாசகரை) கொண்டு செல்கிறார் (அமானவ புருஷர்) சிலரை கொண்டு செல்வதில்லை என்று ஏற்றாலும்

**அதோஷாத் :-** எந்த தோஷமும் இல்லை

**தத் க்ரதுஷ்ச :-** பிரம்ம கிரது (சங்கல்பமானது) பிரம்ம லோகத்தினை அடைவிக்கின்றது.

**விசேஷம் ச தர்ஷயதி - 16**

**விசேஷம் :-** நாம முதலிய (பெயர்) பிரதீக உபாசனையில் முன்னர் கூறப்பட்டதை காட்டிலும் பின்னர் கூறப்பட்ட உபாசனை அதிகமான பலன் உடையது

**ச :-** ஆவதாகவும்

**தர்ஷயதி :-** "வாக் வாக நாம்னோ பூயஸீ" (வாக்கே நாமத்தைக் காட்டிலும் மேன்மையானது), "மனோ வாவாவாசோ பூய:" (மனதே வாக்கினை காட்டிலும் மேன்மையானது) என்பதான ஷ்ருதியும் இதனையே காண்பிக்கின்றது.

**நான்காம் அத்யாயம் - நான்காம் பாதம்**

**ஸம்பத்யாவிர்பாவ: ஸ்வேனஷப்தாத் - 1**

**ஸம்பத்ய :-** சுயம்பிரகாசமான ஆத்மாவினை சாக்ஷாத்கரித்த பின்னர் அந்த ஆத்மாவாகவே (ஆத்மாவினை)

**ஆவிர்பாவ: :-** அந்த ஞானி அடைந்துவிடுகிறார்

**ஸ்வேனஷப்தாத் :-** "ஸ்வேணரூபேண" (தன்னுடைய இயல்பாகவே, சுவரூபமாகவே) என்பதான ஷ்ருதியில் உள்ள "ஸ்வ" (தன்) என்ற சொல்லால்

**முக்த: ப்ரதிஞானாத் - 2**

**முக்த: :-** முக்தர் முழுமையான ஆனந்தரூபமாக நிலைபடுகிறார்

**ப்ரதிஞானாத் :-** "ஏதம் த்வேவ தெ பூயோ அனுவ்யாக்யாஸ்யாமி" (இதனையே உனக்கு மீண்டும் விளக்குகின்றேன்) என்பதான ஷ்ருதியும் இதனையே கூறுவதால்

**ஆத்மா ப்ரகரணாத் - 3**

**ஆத்மா :-** இங்கு ஆத்மாவே ஜ்யோதி என்ற சொல்லால் குறிக்கப்பட்டது

**ப்ரகரணாத் :-** "ய ஆத்மா அபஹதபாப்மா" (இந்த ஆத்மா பாவ — புண்ணியம் அற்றது) என்பதான ஷ்ருதியினை கூறும் பிரகரணமானதால்.

**அவிபாகேள த்ருஷ்டத்வாத் - 4**

**அவிபாகேன :-** முக்தர் பரமாத்மாவிலிருந்து பிரிவற்றவராக (வேறற்றவராக) இருக்கிறார்

**த்ருஷ்டத்வாத் :-** "பிரம்மைவ ஸன்ப்ரம்மாப்யேதி" (பிரம்மமாகவே இருந்து பிரம்மத்தை அடைகிறார்) என்பதான ஷ்ருதியில் இவ்வாறே காணப்படுவதால்.

**ப்ராமஹேண ஜைமினிரூபன்யாஸாதிப்ய: - 5**

**ப்ராம்ஹேண :-** முக்தர் பிரம்மதர்மத்துடன்(சர்வஞ்ஞும், சர்வேஷ்வரர் முதலியவை) நிலைபடுகிறார்

**ஜைமினி: :-** என்று ஆசாரியர் ஜைமினி கூறுகிறார்

**உபன்யாஸாதிப்ய: :-** உபன்யாஸம் முதலிய காரணங்கள் மூலம் இவ்வாறே நிரூபணமாவதால்

**சிதிதன்மாத்ரேண ததாத்மகத்வாதித்யௌடுலோமி: - 6**

**சிதிதன்மாத்ரேண :-**முக்தர் சைத்தன்ய ரூபமாக மட்டும் நிலைபடுகிறார்

**ததாத்மகத்வாத் :-** அந்த நிலையில், ஜீவன், சைத்தன்ய சுவரூபமாக இருப்பதால்

**இதி ஔடுலோமி: :-** என்று ஆசாரியர் ஔடுலோமி ஏற்கிறார்

**ஏவமப்யுபன்யாஸாத் பூர்வபாவாதவிரோதம் பாதராயண: - 7**

**ஏவம் அபி :-** இவ்வாறானாலும்

**உபன்யாஸாத் :-** முன்பு கூறப்பட்ட உபன்யாஸம் முதலியன காரணங்களால்

**பூர்வபாவாத் :-** முன்னர் கூறப்பட்ட பிரம்மத்தின் ஐஷ்வர்யம் முதலியவை வியாவகாரிகமானதால்

**அவிரோதம் :-**முக்தரில் எந்த விரோதமும் இல்லை

**பாதராயண: :-** என்று ஏற்கிறார் ஆசாரியர் பாதராயணர்.

**ஸங்கல்பாதேவ து தச்ஷ்ருதே: - 8**

**ஸங்கல்பாதேவ :-** சங்கல்பத்தினால் மட்டுமே, முக்தரின் முன்னர் பித்ருகள் முதலியவர்கள் தோன்றுகின்றனர்

**து :-** நிச்சயமாக

**தத் ஷ்ருதே: :-** இதனை நிரூபிப்பதாக, "ஸங்கல்பாதேவாஸ்ய பிதர: ஸமுத்திஷ்டந்தி" (சங்கல்பத்தினாலேயே இவர் முன்னர் பித்ருக்கள் தோன்றுகின்றனர்) முதலான ஷ்ருதிகளும் உள்ளது

**அத ஏவ சானன்யாதிபதி: - 9**

**அத :-** தடையற்ற சங்கல்பத்தினால்

**ஏவ ச :-** மட்டுமே நிச்சயமாக

**அனன்யாதிபதி: :-** வேறு எவரும் இவருக்கு தலைவர் என்றல்லாத நிலை அடைகின்றார்

**<u>அபாவம் பாதரிராஹ ஹ்யேவம் - 10</u>**

**அபாவம் :-** முக்தர்களுக்கு உடலின் இன்மையினை அங்கு

**பாதரி: :-** ஆசாரியர் பாதரி

**ஆஹ :-** கூறுகின்றார்

**ஹி :-** இவ்வாறே

**ஏவம் :-** ''மனஸைதான் காமான்பஷ்யன்ரமதே'' (மனதினால் இந்த போகங்களை அவர்கள் பார்த்து இன்புறுகனிறனர்) என்பதான ஷ்ருதியும் கூறுகின்றது.

**<u>பாவம் ஜைமினிர்விகல்பாமனனாத் - 11</u>**

**பாவம் :-** உடல் மற்றும் இந்திரியங்களும் அங்கு இருப்பதாக

**ஜைமினி : :-** ஆசாரியர் ஜைமினி ஏற்கிறார்

**விகல்பாமனனாத் :-** ''ஸ ஏகதா பவதி'' (அவர் ஒன்றாக இருக்கிறார், மூன்றாக இருக்கிறார்) என்பதான ஷ்ருதியில் விகல்பமானது கூறப்பட்டதால்

**<u>த்வாதஷாஹவதுபயவிதம் பாதராயணோ அத: - 12</u>**

**த்வாதஷாஹவத் :-** துவாதஷ (பன்னிரெண்டு) நாட்கள் செய்யப்படும் யாகத்தில் காணப்படுவதுபோல

**உபயவிதம் :-** இரண்டு நிலைகளும் இருப்பதால்

**பாதராயண: :-** ஆசாரியர் பாதராயணர்

**அத: :-** இரண்டு வகையாகவும் ஏற்கிறார்

**தன்வபாவே ஸந்த்யவதுபபத்தே: - 13**

**தன்வபாவே :-**உடலற்ற நிலையில் (பிரம்ம லோகத்தில்)

**ஸந்த்யவத் :-** இடைநிலையான கனவினைப்போல

**உபபத்தே: :-** மனதினால் மட்டுமே அடையப்படுவதாக ஏற்பது இயலும்

**பாவே ஜாக்ரவத் - 14**

**பாவே :-** உடல் மற்றும் இந்திரியங்கள் இருக்கும் நிலையில்

**ஜாக்ரவத் :-** விழிப்பு நிலையினை போல, பித்ருக்கள் முதலியவர்கள் அவர்முன் தோன்றுவர்

**ப்ரதீபவதாவேஷஸ்ததா ஹி தர்ஷயதி - 15**

**ப்ரதீபவத் :-** தீபத்தினைபோன்று

**ஆவேஷ: :-** முக்தர் தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட உடலில் பிரவேசிக்கின்றார்

**ததா ஹி :-** அவ்வாறு உள்ளதாகவே

**தர்ஷயதி :-** "ஸ ஏகதா பவதி" (அவர் ஒன்றாக ஆகிறார்) என்பதான ஷ்ருதியும் கூறுகின்றது

**ஸ்வாப்யயஸம்பத்யோரன்யதராபேக்ஷமாவிஷ்க்ருதம் ஹி - 16**

**ஸ்வாப்யயஸம்பத்யோ: :-** தூக்கம் மற்றும் முக்தியில்

**அந்தராபேக்ஷம் :-** ஒரு நிலையோடு ஒப்பிடும்போது மற்றதில்விசேஷ ஞானம் ஏற்கப்பட்டதால்

**ஆவிஷ்க்ருதம் :-** சகுண வித்யைவித்தையில் உடல் முதலியவற்றை ஏற்பதில் எந்த விரோதமும்

**ஹி :-** நிச்சயம் இல்லை.

**ஜகத்வ்யாபாரவர்ஜம் ப்ரகரணாதஸன்னிஹிதத்வாச்ச - 17**

**ஜகத்வ்யாபாரவர்ஜம் :-** ஜகத்தின் சிருஷ்டி முதலியவையாக தொழில் ஒழித்து, மற்ற ஐஷ்வர்யங்களை முக்தர் அடைதல் இயலும்

**ப்ரகரணாத் :-** ஈஷ்வரணின் தொழிலாக அது குறிக்கப்பட்டதால்

**அஸன்னிஹிதத்வாத் ச :-** அவை நெருங்கியதாக இல்லாததாலும்.

**ப்ரத்யக்ஷோபதேஷாதிதி சேன்நாதிகாரிகமண்டலஸ்தோக்தே: - 18**

**ப்ரத்யக்ஷ உபதேஷாத் :-** "ஆப்னோதி ஸ்வாராஜ்யம்" (அவர் சுயராஜ்ஜியத்தை அடைகின்றார்) என்பதான ஷ்ருதிகள் நேரடியாக காணப்படுவதால் முக்தருக்கு ஐஷ்வரியங்கள் நிரூபணமாகிறது

**இதி சேத் :-** என்று கூறினால் **ந :-** தவறு

**ஆதிகாரிகமண்டலஸ்த உக்தே: :-** ஆதித்ய மண்டலத்தில் உள்ளஅதன் அதிகாரியயான பரமெஸ்வரனிற்க அதீனமான நிலையே அங்கு கூறப்பட்டதால்

**விகாராவர்தி ச ததா ஹி ஸ்திதிமாஹ - 19**

**விகாராவர்தி :-** விகாரத்தில் இல்லாததும் பிரம்மத்தின் இயல்பு

**ச :-** நிச்சயம்

**ததா ஹி :-** அவ்வாறானாதாகவே

**ஸ்திதிம் :-** பரமாத்மாவின் இரண்டு நிலைகளும்

**ஆஹ :-** "தாவானஸ்ய மஹிமா" (இதுவே அதன் பெறுமை) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்டுள்ளது

**தர்ஷயஸ்சைவம் ப்ரத்யக்ஷானுமானே - 20**

**தர்ஷயத: :-** பரமாத்மாவின் நிர்விகாரமான ரூபத்தை

**ச ஏவம் :-** இப்படிப்பட்டதாகவே நிச்சயம்

**ப்ரத்யக்ஷானுமானே :-** ஷ்ருதியும் , ஸ்மிருதியும் காண்பிக்கின்றது

**போகமாத்ரஸாம்யலிங்காச் ச - 21**

**போகமாத்ரஸாம்யலிங்காத் :-** உபாசகருக்கு, பரமேஷ்வருக்கு சமமாக அவருடன் போகமானது கூறும் ஷ்ருதி உள்ளபோதும்

**ச :-** அவருக்கு கட்டுக்கடங்காத ஐஷ்வர்யம் இருத்தல் இயலாதுது

## அனாவ்ருத்தி ஷப்தாதனாவ்ருத்தி ஷப்தாத் - 22

**அனாவ்ருத்தி :-** அர்ச்சிர் முதலிய வழி மூலம் பிரம்மலோகம் அடையும் உபாசகர் அங்கிருந்து மீண்டும்திரும்புவதில்லை (பிறப்பதில்லை)

**ஷப்தாத் :-** "ந ச புனராவர்ததே" (அவர் நிச்சயம் திரும்பிவருவதில்லை) என்பதான ஷ்ருதியில் காணப்படுவதால்

**அனாவ்ருத்தி ஷப்தாத் :-** என்று மீண்டும் கூறுவது அத்யாயம் முடிவடைவதை குறிப்பிடுகின்றது.

## நான்காம் அத்யாயம் சமாப்பதம்

## ப்ரம்மஹ சூத்திரம் சமாப்தம்

## ஓம் தத் சத்